# மன்னா

MANNA — மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ்க் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை — MANNA

பொழிவு - 07
குவிப்பு - 07
பக்கங்கள் - 14

விலை ரூபா 15.00
ஜுலை 2004

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Manna Office, Pastoral Centre, Cathedral St, Mannar, Sri Lanka. T.P: 023 - 2232377


## தூய்மை நிலை எய்துவதற்கான வழி ஒப்புரவு அருட்சாதன வழியே!

### ஒப்புரவு அருட்சாதனம் இன்றி கத்தோலிக்கரால் வாழ முடியாது





- திருத்தந்தை வலியுறுத்துகிறார்-

தூய்மை நிலை எய்துவதற்கான வழி ஒப்புரவு அருட்சாதன வழியூடாகவே செல்கிறது. இந்த மன்னிப்பு அருட்சாதனம் மீளவும் கண்டுபிடிக்கத்தக்கது. அது உள்ளார்ந்த ஞான வளர்ச்சிக்கும் தூய்மையான ஒரு நிலைக்கும் உள்ளாகும் வேளை. அது இல்லாது கத்தோலிக்கரால் வாழ முடியாது என திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் தெரிவித்தார். கடந்த மார்ச் மாதம் 27ம் திகதி கல்வியை மையமாக வைத்து நடாத்தப்பட்ட ஒன்றுகூடலில் உரையாற்றும்போதே திருத்தந்தை அவர்கள் இவ்வாறு தெரிவித்தார்.

தூய்மை நிலை இறைவனால் வழங்கப்படும் ஒன்றாகும். அடிக்கடி பக்தி சிரத்தையோடு ஒப்புரவு அருட்சாதனத்தைப் பெறாமலே தூய்மை நிலையை அடையலாம் என்பது வெறும் கற்பனையாகும். இத்திருவருட்சாதனம் மனமாற்றத்தையும் தூய்மைப்படுத்தலையும் செய்யும் ஒன்று என்றும் தொடர்ந்து அவர் குறிப்பிட்டார். இத்திருவருட்சாதனத்தை அணுகும்வேளை ஒருவர் இயல்பாகவே தன் மனக்கதவைத் திறக்கிறார் என்றும் திருத்தந்தை குறிப்பிட்டார்.

## விடிவை நோக்கிய மன்னாரின் எழுச்சிக்குரல் காலநதி பத்திரிகை




மன்னார் மண்ணில் இருந்து காலநதி என்ற பெயரில் மாதாந்தப் பத்திரிகை ஒன்று வெளிவர ஆரம்பித்துள்ளது. *தோள் வற்றிச் சாயினும் சான்றாண்மை குன்றாமை* என்ற சங்க இலக்கிய வரிகளை விருதுவாக்காகக் கொண்டு மன்னார் மக்களின் எழுச்சிக்குரலாக காலநதி பத்திரிகை வெளிவந்துள்ளது.

(தொடர்ச்சி 13ம் பக்கம்)


## மன்னார் மறைமாவட்ட மறையாசிரியர்களுக்கான நான்கு மாத வதிவிடப் பயிற்சி நிறைவு!

### அறிவும் அனுபவமும் பெற்று பங்குகளுக்கு விரைவு!

மன்னார் மறைமாவட்டத்தின் பல்வேறு பங்குகளைச் சார்ந்த 30 மறையாசிரியர்களுக்கான வதிவிடப்பயிற்சி மன்னார் மறைக்கல்வி நிலையத்தில் இடம்பெற்றது. கடந்த பெப்ரவரி 02ந் திகதி தொடக்கம் ஜுன் 01ந் திகதி வரை நான்கு மாதங்கள் இடம்பெற்ற இப்பயிற்சியின் நிறைவில் சான்றிதழ் வழங்கும் விழா இடம்பெற்றது. விவிலியம், இறையியல், ஆன்மீகம், உளவியல், ஆற்றுப்படுத்தல், கற்பித்தல் முறை போன்ற பல்வேறு துறைகளில் அறிவும் அனுபவமும் பெற்ற இவர்கள் தம் பயிற்சிநெறியை நிறைவுசெய்துகொண்டு தத்தம் பங்குகளில் தம் பணியைத் தொடர புறப்பட்டுச் சென்றுள்ளனர். இப்பயிற்சிநெறி பற்றிய விரிவான தகவல்களை பக்கம் 8ல் காணலாம்.



பயிற்சிபெற்றவர்களும் பயிற்சி வழங்கியோரும் நீங்காத நினைவுகளுடன் ஆயர், குருமுதல்வர் சகிதம் சங்கமித்துள்ளனர்.



சான்றிதழ் வழங்கும் விழாவுக்கு மன்னார் ஆயர், குருமுதல்வர், சிறப்புப் பணி முதல்வர் ஆகியோர் வரவேற்று அழைத்துவரப்படுகின்றனர்.

## பௌத்த துறவிகளின் அரசியல் பிரவேசம் ஆபத்தானதென பௌத்தர்களே எச்சரித்துள்ளனர்

### கொழும்பு பதில் ஆயர் கருத்து




குருக்களும் துறவிகளும் தீவிர அரசியலிலும் தேர்தல்களிலும் பங்கெடுக்கக் கூடாதென்பது பரவலாக அனைத்து மறைகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட எண்ணம் என்றும் உண்மையில் பௌத்தர்களில் பலர் அரசியலில் துறவிகள் அத்தகைய பங்கு ஏற்கக்கூடாதெனவும் அப்படிப் பங்கேற்றால் பௌத்தத்திற்கே அது அழிவை ஏற்படுத்தும் என்றும் எச்சரித்துள்ளனர் என கொழும்பு பதில் ஆயர் மேதகு மேரியஸ் பீரிஸ் தெரிவித்தார்.

(தொடர்ச்சி 12ம் பக்கம்)

## குருத்துவப் பணிவாழ்வில் வெள்ளி விழாக் காணும்

### நோபட் அடிகளாரை வாழ்த்துகிறோம்



இந்த ஆண்டு யூலை மாதம் 17ந் திகதி தாழ்வுபாட்டுப் பங்குத் தந்தையும் மன்னார் மறைமாவட்ட திருப்பாலத்துவ சபை இயக்குனருமான அருட்பணியாளர் எம். ஏ. நோபட் அடிகளார் தனது குருத்துவ வாழ்வின் 25 வருட நிறைவை நன்றியோடு நினைவு கூருகின்றார். அடிகளாருக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் குருக்கள் இறைமக்கள் சார்பாக மன்னா செபம் நிறைந்த நல்வாழ்த்துக்களை மகிழ்வோடு தெரிவித்து நிற்கின்றது.

## பள்ளிமுனை விளையாட்டுக்கழகம் பெருவெற்றி

கடந்த ஜுன் 20ம் திகதி பள்ளிமுனை புனித லூசியா விளையாட்டுக் கழகத்திற்கும் கண்டி கோல்ட் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் மன்னார் பொதுவிளையாட்டரங்கில் உதைபந்தாட்டப்போட்டி நடைபெற்றது. டிவிசன் 2 இறுதி சுற்றுப் போட்டியில் புனித லூசியா விளையாட்டு கழகம் 4 - 0 என்ற ரீதியில் வெற்றியீட்டி மன்னார் மண்ணின் பெருமைக்கு மெருகூட்டியது. இந்நிகழ்வில் ஆசிய உதைபந்தாட்ட சம்மேளனத் தலைவர் மணிலால் மற்றும் அரச அதிகாரிகள், மேதகு மன்னார் ஆயர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

## மடுத்திருப்பதியின் ஆடித் திருவிழா

மடுத்திருப்பதியின் ஆடித்திருவிழா ஆனி மாதம் 23ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. திருவிழாத் திருப்பலி வழமைபோன்று ஆடிமாதம் 2ம் திகதி காலை 6. 30 மணிக்கு ஆரம்பமாகும். யாத்திரிகர்கள் வரும்போது தமது பெயர் விபரங்களையும் வாகன அத்தாட்சிப் பத்திரங்களின் பிரதிகளையும் எடுத்து வரவேண்டும் என மடுத்திருப்பதியின் உதவிப்பரிபாலகர் சத்தியராஜா அடிகளார் மன்னாவுக்கு தெரிவித்தார். அமதிகளின் மறையுரைஞர்கள் இவ்விழா நவநாட்களில் மறையுரையாற்றுவார்கள் என அவர் மேலும் கூறினார்.

[“விடுதலை அளிப்பவர் ஆண்டவர், அவர் தம் மக்களுக்கு ஆசி வழங்குவராக!” (திருப்பாடல் 3: 8)]

# மன்னா
## மனப்பொழிவு பதிப்பாசிரியர் பகர்வது

## இறுதி யாத்திரையில் இணைவோர் கவனத்திற்கு

ஆறிலும் சாவு நூறிலும் சாவு என்பார்கள். சடுதியாக வந்து நமது சரித்திரத்தை முடிக்கும் சாவு சொல்லிக்கொண்டு வருவதில்லை. சாவு என்பது நாம் அனைவரும் ஒருநாள் கட்டாயம் சந்திக்க வேண்டிய ஒரு யதார்த்தம்.

சாவீட்டோடு தொடர்புடைய சந்தோசப்பட வேண்டிய சங்கதிகளின் பட்டியல் மிக நீண்டது. அவற்றை நாம் பாராட்டியே ஆகவேண்டும். இச்சங்கதிகள் இடத்திற்கிடம் ஊருக்கு ஊர் வேறுபடலாம், மாறுபடலாம். கோபதாபங்களை மறந்து செத்தவீட்டிற்கு வந்து துக்கம் விசாரிப்பது, அக்கம் பக்கம் உள்ளோர் இழவு நடந்த வீட்டில் சில நாள் தங்கி நிற்பது, செத்த வீடு முடிந்ததும் சிலநாட்கள் தங்கியிருந்து முறைபோட்டு சமைத்துக்கொடுப்பது, செத்தவீட்டுச் செலவுக்காக காசு போட்டு கொடுப்பது .... இப்படியே சொல்லிக்கொண்டே போகலாம்.

“அழுவாரோடு அழுங்கள், மகிழ்வாரோடு மகிழுங்கள்” என்கிறது இறைவார்த்தை. ஆனால் இன்று நமது மரணச் சடங்கு வீடுகளில் அழுவாரோடு சிரிக்கும் சிலரையும் காணக்கூடியதாக இருக்கிறது. இந்தச் சாவு வீடுகளில் நம்மவர் பலர் நடந்துகொள்ளும் விதம் ஆச்சரியத்தையும் அருவருப்பையும் ஏற்படுத்துவதாக உள்ளது.

### போதையில் தள்ளாடும் பேதையர்கள்

பிரிவின் ஆற்றாமையால் ஆறாத்துயரில் நொந்துபோயிருக்கும் குடும்பத்தவர்கள் நண்பர்களின் சோகத்தின் மத்தியில் சுகம் அனுபவிப்பவர்களாக சிலர் உள்ளனர். செத்தவன் செத்துப்போக இருக்கின்ற இவர்களுக்கு சாவீட்டில் ஒரே கொண்டாட்டம்தான்! இறந்தவரின் பிரிவுத்துயர் தாங்காமல் தவிப்பவர்கள்போல சிலர் மதுபோதையின் மயக்கத்தில் நிற்பர். இவர்களைப் பொறுத்தவரை சாவீடு என்பது சந்தோச வீடுதான். இறந்தவருக்குரிய அடக்கச் சடங்கு மற்றும் திருப்பலி தொடர்பாக பங்குக் குருவிடம் வந்து கதைக்கும்போதுகூட சிலர் வெறியில்தான் வருவர். தன்னிடம் வருபவருக்கு பிரிவுத் துயரின் தாக்கமா அல்லது மதுபோதையின் ஊக்கமா என்பதை புரிந்துகொள்ள பங்குக் குருவுக்கு சில நிமிடங்கள் தேவை.

### பெட்டியோடு முட்டையும் குஞ்சும்

பிரேதப் பெட்டியை ஆலயத்திற்குள் கொண்டுவந்து திறந்தபோது பாய்ந்தோடிய கோழிக்குஞ்சுகள் சில இன்னும் ஆலய வளாகத்திற்குள் சுதந்திரப் பறவையாக மேய்ந்துகொண்டு திரிகின்றன. “அட்டமி நவமியில் செத்த ஆத்துமம் இன்னுமொரு உயிரைக் கேட்குமாம்..... அதற்காக ஒரு உயிரை அது முட்டையாகவோ... குஞ்சாகவோ இருக்கலாம்... பெட்டியோடு வைத்துவிட்டால் அந்தப் பிரச்சினை முடிந்து விட்டது என்று ஓர் ஆறுதலாம்.” இதுபோன்று செத்தவீட்டோடு சம்மந்தப்பட்ட சம்பிரதாயங்களும் சடங்குகளும் பல பல... இவற்றில் அனேகமானவை அர்த்தம் இல்லாதவை. ஆன்மீக ரீதியாகவும் அறிவியல் ரீதியாகவும் நோக்கினால் நகைப்புக்கிடமானவை. இதைப்பற்றி கேள்வி கேட்டால் “அது அப்படித்தான், இதுதான் முறை, இதுதான் வழமை, இதுதான் அந்தக் காலத்திலிருந்து பெரியாக்கள் செய்து வாற காரியங்கள்...” என்ற பதில்களே தொடர்ந்து வரும்.

### வெளியில் நின்று வேடிக்கை பார்ப்பவர்கள்

ஆலயத்திற்கு இறந்தவரின் உடல் கொண்டுவரப்பட்டு திருப்பலி நடைபெறும்போது பவனியில் வந்த பலர் வெளியில் நின்று வேடிக்கை பார்ப்பர். இவர்கள் வேறு சமயத்தையோ சபையையோ சார்ந்தவர்கள் அல்லர். மாறாக சத்திய கத்தோலிக்க திருச்சபையில் ஞானஸ்நானம் பெற்ற பரம்பரைக் கிறிஸ்தவர்கள். ஆலயத்தில் நடக்கும் பூசைக்கும் தனக்குச் சம்மந்தம் இல்லை என்பதைப்போல இவர்கள் நடந்துகொள்கிறார்கள். தான் செத்து ஆலயத்திற்கு கொண்டுவரப்படும்போது தன்னைப்போல் அங்கு வரும் எல்லாரும் வெளியில் நின்றால் நிலமை என்னவாகும் என்று அப்படிப்பட்டவர்கள் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க மறந்து விடுகிறார்கள்.

### ஆத்துமத்துக்கு சாப்பாடு படைப்பவர்கள்

நமது கிறிஸ்தவ சமூகங்கள் பலவற்றில் உள்ள இன்னுமொரு நம்பிக்கை (மூட நம்பிக்கை?) இறந்த ஆத்துமத்திற்கு விருப்பமான உணவு வகைகளைச் செய்து வைத்து படைப்பது. இறந்த ஆத்துமம் வந்து அவற்றை சாப்பிட்டு அமைதி அடைவதாக ஒரு நம்பிக்கை. இச்செயற்பாடு இறைவிசுவாசத்திற்கு முரணானது மட்டுமல்ல அறிவியலுக்கும் அப்பாற்பட்ட ஒரு மூட நம்பிக்கை ஆகும்.


இறந்தவர்களுக்காக வேண்டுதல் செய்யும் உன்னதமான கடமையை செய்யாமல், பிரிவுத்துயரில் தவிப்போருக்கு ஆறுதலாக இருக்காமல் அர்த்தம் இல்லாத சடங்குகளிலும் சம்பிரதாயங்களிலும் நமது சக்தியையும் பணத்தையும் நேரத்தையும் செலவளித்துக்கொண்டிருப்பது அறிவீனம். எனவே அறிவு ரீதியாக சிந்திப்போம். செயற்படுவோம். ஆன்மீக முதிர்ச்சி நிறைந்த சமூகங்களாக மாறுவோம்.

மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை

அன்புடன் – அருட்பணியாளர் நேசன்,
பதிப்பாசிரியர்.



# வாசகர் எண்ணங்கள்



### உன்னை கருவாக்கி உருவாக்கி அணிகலன் செய்வோர் பாராட்டுக்குரியவர்கள்

“தம்முடைய மாட்சியாலும் ஆற்றலாலும் கடவுள் நம்மை அழைத்துள்ளார்” (பேதுரு 2 : 1-3)

மன்னா! என் ஆன்ம உணவே நீ வருக..........! மாதமொருமுறை மலர்கின்றாய் நீ. அதிலும் அற்புதமாய் ஏனோ என் மனதை கவர்ந்து விட்டாய். அனைத்து வகையினருக்கும் பயன்படும் வண்ணமாய் உனை கருவாக்கி உருவாக்கி உனை அணிகலன் செய்து உருமாற்றுகின்றார் அன்பு நிறை பதிப்பாசிரியர்.

நாம் யாவரும் வேதாகம அறிவில் சிறந்து விளங்கிட குறுக்கெழுத்துப் போட்டியில் அடியேன் என்னையும் தெரிந்து 3ம் இடம் அளித்து பரிசில் அனுப்பிவைத்த பதிப்பாசிரியர் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றிகள் உரியனவாகுக.

மேலும் உன்னை ஒவ்வொரு மாதமும் தன் பெரும் மனதினால் என் கரம் சேர்த்து, உன்னில் பொதிந்துள்ள பல செய்திகளை அறிந்திடவும், சுவைத்திடவும் உன் பெருமைதனை அனைவரோடும் பகிர்ந்திடவும் உதவிபுரிந்து வரும் திரு. கி. செல்மர் எமில் அண்ணாவுக்கும் உன் சார்பாக என் இதய பூர்வமான நன்றிகளையும், செபங்களையும், வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன். மன்னா நீ வாழ்க! மன்னா நீ சிறப்பான ஒரு மலராக மலர்ந்திட முன்னின்று உழைத்துவரும் அன்பு பதிப்பாசிரியர், அருட்சகோதரிகள், எழுத்தாளர்கள், அனைத்துப் பணியாளர்களுக்கும் இதயபூர்வமான என் நன்றிகள் உரியனவாகுக.

இறைவனின் இனிய கரம் என்றும் உன்னோடு இருப்பதாக! மன்னா நீ வளரவும், உன் புகழ் திக்கனைத்தும் பிரகாசிக்கவும் உன்னைப் பற்றி அறியும் வாசகர்கள் அதிகரிக்கவும் நான் ஆசிக்கின்றேன். நன்றி.

ம.ஜெனீட்டா, இளவாலை, யாழ்ப்பாணம்

### வாரம் ஒரு முறை வரமாட்டாயா என்று ஏங்குகிறேன்

மின்னல்போல என் மனதில் புகுந்தாய். உனக்காக எதையும் செய்யும் வாசகனாக்கினாய். நித்தமும் உன்னையே நினைக்கும் என் மனசு. வாரம் ஒரு முறை வரமாட்டாயா என்று ஏங்குகிறேன். உந்தன் நினைவுடன் மேனியில் ஓடுகின்றது எந்தனது உதிரம். அதுதான் மன்னாவோ.

*டெ. பிரபு பெரேரா, 8ம் வட்டாரம், பேசாலை.*

### மன்னாவின் மறையறிவுப் போட்டி சுயகற்றலுக்கு வழிகோலுகிறது!

பதிப்பாசிரியர் அவர்களுக்கு, வணக்கம். மன்னா சுமந்து வரும் அத்தனை ஆக்கங்களும் அருமையிலும் அருமை. குறிப்பாகச் சொல்லப்போனால் குறுக்கெழுத்துப்போட்டி, பெரியப்பா பதில்கள், வாசகர் எண்ணங்கள் அனைத்தும் அருமையிலும் அருமை. மேலும் மன்னாவில் பல புதிய அம்சங்களைத் தருகின்றீர்கள். அதற்கும் எனது நன்றியினைக் கூறிக்கொள்கிறேன்.

அடுத்து மாணவர் மறை அறிவுப்போட்டியானது மாணவர்களாகிய எங்களுக்கு ஓர் சுய கற்றலுக்கு வழிகோலுகிறது. படிக்காதவர்கள்கூட இதனைப் படிக்கிறார்கள். இதில் கேட்கப்படும் ஒவ்வொரு கேள்விகளும் தரமானவை. எனவே மாணவர் மறையறிவுப்போட்டியை தொடர்ந்து நடத்துங்கள். வாழ்க உங்கள் பணி. தொடர்க உங்கள் சேவை.

*ப. வதனா, வாழ்க்கைப்பெற்றான் கண்டல்,*
*அளவக்கைப் பங்கு.*

### ஆக்கங்கள் அனைத்தையும் படித்து இரசித்தோம்... இல்லை.... ருசித்தோம்!

சென்ற 2002ம் ஆண்டு பிற்பகுதியில் எமது தாயகம் வருகை தந்த என் நண்பர் ஒருவர் மூலமாக நான் “மன்னா” பத்திரிகையின் வாசகராக்கப்பட்டேன். தொடர்ந்து சற்றே காலதாமதமானாலும் மன்னா இதழ் எம் கரம்கிட்டத் தவறுவதில்லை. நன்றிகள் பல.


“மன்னா” எம்மண்ணில் மணம் வீசுகிறது. ஆக்கங்கள், அலசல்கள், நகைச்சுவை, நாட்டுநடப்பு யாவும் படித்து இரசித்தோம்.... இல்லை.... இல்லை... குடும்பத்தோடு ருசித்தோம். காலத்தால் அழியாத காவிய இலக்கிய நாயகரின் பற்பல கைவண்ணங்கள்... கருத்துச் செறிவுமிகு கட்டுரைகள்.... என அட்டகாசப்படுத்தவில்லைதான். ஆனாலும் அதிகம் அலட்டிக் கொள்ளாத அருமையான சிறு சிறு ஆக்கங்கள்! அபாரம்! பசுமை வயல்வெளி, பனை தென்னை மரங்கள், சிறு குச்சு ஒழுங்கைகள், ஒத்தையடிப் பாதைகள், குளங்கள், ஓரத்து நிழல் மரங்கள் யாவற்றையும் புலம் பெயர் நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் எம் மனக்கண்முன்னே கொண்டுவரும் எம் மண்ணின் மணம் வீசும் கதைகள் கட்டுரைகள், நகைச்சுவைத் துணுக்குகள், ஆன்மீக அறிவு மிளிரும் கட்டுரைகள், திருமறைச் செய்திகள் இன்னும் *கைக் கூ கவிதைகள்* உட்பட யாவும் அபாரமே!

எழுத்தாற்றல் மிக்க எம் மன்னிநகரின் மண்ணின் மைந்தர்கள், இளைய தலைமுறையினரின் திறமைகளை மென்மேலும் வளர்க்க, மன்னா ஓர் வரப்பிரசாதமாகப் பிறந்துள்ளது. தொடரட்டும் மன்னாவின் சேவை! எதிர்காலத்திலும் ஆக்கபூர்வமான பற்பல ஆக்கங்களோடு சற்றும் தரம் குறையாது மணம்வீச மலரட்டும் மன்னா என்று உளமாற வாழ்த்துக்கள் கூறி விடைபெறுகின்றேன்.

*புலம்பெயர் நாட்டின் வாசகர்,*
*செபஸ்த்தியான் ஜெராட், ஜேர்மனி*



# உண்மையின் எண்ணங்கள்



மன்னாருக்கு கையடக்க தொலைபேசி இணைப்புகளை வழங்குமாறு

## பொதுமக்கள் வேண்டுகோள்

மன்னார் மாவட்டத்திற்கு கையடக்கத் தொலைபேசிகளுக்கான இணைப்புகளை வழங்குமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். வட கிழக்கு மாகாணத்தில் திருமலை, மட்டக்களப்பு, அம்பாறை, யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய மாவட்டங்களில் டயலொக், செல்டர், மொபிற்றல் ஆகிய செலுலர் தொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட்டு பல மாதங்கள் ஆகியுள்ள நிலையில், மன்னார் மாவட்டத்திற்கு மட்டும் அதனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணம் என்ன வென்று மக்கள் கேள்வி எழுப்பி உள்ளனர். தற்பொழுது நாட்டில் நிலவும் சமாதான சூழ்நிலைகளில் மன்னார் மாவட்டத்தில் விவசாயம், மீன்பிடி, கைத்தொழில் மற்றும் வர்த்தக துறைகளில் பாரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் குறித்த துறைகளைச் சார்ந்தவர்களுக்கிடையில் தொடர்பாடல் மிகவும் முக்கியமானதாகும்.

தற்போது மன்னார் மக்கள் தமது வெளித்தொடர்புகளுக்கு முற்று முழுதாக இலங்கை டெலிகொம் நிறுவனத்தின் புதிய தொலைபேசிச் சேவைகளை மட்டுமே நம்பியிருக்க வேண்டியுள்ளது. அத்துடன், டெலிகொம் நிறுவனத்தின் புதிய தொலைபேசி இணைப்புகளை பெறுவதாயின் அதற்கான கட்டணமாக 23 ஆயிரம் ரூபா செலுத்தப்பட வேண்டும்.

ஆனால், செலுலர் தொலைபேசிக்கான புதிய இணைப்புகளை மிகக் குறைந்த கட்டணத்தில் பெற்றுக்கொள்ள முடியும். இந்த நிலையில் ஆயிரக்கணக்கான மன்னார் மக்கள், குறித்த கையடக்கத் தொலைபேசி இணைப்புகளை எதிர்பார்த்துள்ளனர். டெலிகொம் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுகி அனான், அண்மையில் மன்னாருக்கு வந்தவேளை, அவரைச் சந்தித்த மன்னார் மக்கள் இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் மொபிற்றல் தொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதையும், மன்னாரில் குறித்த இணைப்புகளை விரைவில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனையடுத்து, இன்னும் ஒரு மாத காலத்தில் மொபிற்றல் தொலைபேசி இணைப்புகளை வழங்குவதற்கு தான் நடவடிக்கை எடுப்பதாக சுகி அனான் பொதுமக்களுக்கு உறுதியளித்தார். இதேவேளை, டெலிகொம் நிறுவனத்தின் வடக்கு கிழக்கு பொது முகாமையாளர் எஸ். கனகசூரியரிடமும் டெலிகொம் நிறுவனம் அதன் நிறுவனமான மொபிற்றல் சேவைகளை மன்னாரில் மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

மன்னார் மாவட்ட மக்களும் இலங்கையின் பிற மாவட்ட மக்களைப் போன்று செல்லிடத் தொலைபேசிகளை பயன்படுத்த மாவட்ட அரசாங்க அதிபர் உட்பட வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (நன்றி - தினக்குரல்)

### புனிதர் பொன்மொழி

“நடக்கும்போது போதிக்க இயலாதவர்கள் போதிப்பதற்காக பயணம் செய்வது வீண்”

- புனித அசிசியார் -

### புனிதர் பொன்மொழி

“கடவுள்மீது உன் நம்பிக்கை ஆழமானதாகவும் இடைவிடாமலும் இருக்கும்வரை நீ கடவுளிடம் கேட்பதெல்லாம் பெற்றுக்கொள்வாய்.”

- புனித பெரிய அல்பேர்ற் -

## உலக வர்த்தக விதிகளின் புதிய நடைமுறைப்படி

# ஆடை உற்பத்தியில் ஈடுபடும் பெண் தொழிலாளர் பாதிக்கப்படுவர்

### தொழிலாற்றும் மகளிரின் உரிமைக்காகப் போராடும் செல்ரன் அடிகளார் எச்சரிக்கை

இலங்கையின் கத்தோலிக்க அருட்பணியாளர் றைட் செல்ரன் பெர்னாண்டோ, ஆடைத் தொழிலாளர்களின் ஏழ்மை வாழ்வினையும் தொழில் நிலைமைகளையும் முன்னிலைப்படுத்தியதுடன் அவர்களில் பலர் 2005ல் தங்கள் தொழில் வாய்ப்புகளை இழந்துவிடுவர் எனவும் எச்சரித்தார். இப்பணியாளர் தொழிலாற்றும் மகளிரின் உரிமைகளுக்காகப் போராடுபவர். இளம் கிறிஸ்தவ தொழிலாளர் இயக்கத்தினதும் கிறிஸ்தவ தொழிலாள சம்மேளத்தினதும் ஆன்ம வழிகாட்டியான இவர், பெப்ரவரி 18ல் கொழும்பில் ஒக்ஸ்பாம் நிலையத்தின் "எங்கள் உரிமைகள் விற்கப்படல்" எனும் ஆய்வில் பேசும்போதே மேற்குறிப்பிட்ட எச்சரிக்கையை விடுத்தார். ஒக்ஸ்பாம் நிறுவனம் அரச சார்பற்ற பன்னாட்டு நிறுவனம் என்பதும், ஏழ்மை, வளர்ச்சி தொடர்பாக உழைத்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

மேலாடைத் தொழிலின் உரிமைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வு, உலகளாவிய வழங்கல் தொடரில் பணிபுரியும் மகளிரின் பரிதாப நிலைமைகளையும், அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் முதன்மைப்படுத்திக் காட்டியது. இவ்வமைப்பில் கிறிஸ்தவ தொழிலாளர்கள் இயக்கமும் அங்கம் வகிக்கின்றது. அருட்பணியாளர் பெர்னாண்டோ அதன் பேச்சாளர் ஆவார். அவரின் எண்ணப்படி பெரும்பான்மையான பெண் தொழிலாளர் பாதிக்கப்பட உள்ளனர்.

2005ல் உலக வர்த்தக விதிகளின்படி, பிறநாடுகள் வழங்கும் குறிப்பிட்ட அளவு பொருட்களை ஏற்றுமதி செய்யும் வசதியும் பிற சலுகைகளும் நிறுத்தப்படவுள்ள நிலையில், அத்தொழில் சரிந்துவிடும் ஆபத்தினை எதிர்கொள்கிறது. இலங்கையில் ஏறத்தாழ 3,50,000 பெண் ஆடைத் தொழிலாளர் உள்ளனர்.

## இப்படியும் நடந்தது!

மன்னார் நீதிமன்ற வளாகத்தில் கடந்த செவ்வாய் இரவு ஏற்பட்ட வெடிகுண்டுப் புரளி காரணமாக பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இதுபற்றி மேலும் தெரியவருவதாவது: மன்னாரில் காவல் கடமைகளில் பொலிஸார் ஈடுபடுவது வழமை. சம்பவதினம் செவ்வாய் இரவும் பொலிஸார் காவல் கடமைகளை மேற்கொண்டிருந்த சமயம் கடிகார அலாரம் போன்ற ஒலி தொடர்ந்து கேட்டதால் பீதியடைந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் தமது உயர் அதிகாரிகளுக்கு இதுபற்றி அறிவித்துள்ளனர்.

இதையடுத்து, மாவட்ட நீதிவான் என். எம். எம். அப்துல்லாவிற்கு குறித்த ஒலி தொடர்பான விடயம் மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி யூ. ஏ. ஜே. பிரேமசிறியினால் தெரிவிக்கப்பட்டது. அத்துடன், மாவட்ட நீதிவானின் அனுமதியுடன் தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து வெடிகுண்டுகளை செயலிழக்கும் நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு நீதிமன்ற வளாகத்தில் பலத்த சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும், எவ்விதமான வெடிகுண்டுகளும் கண்டுபிடிக்கப்படவில்லை. இந்நிலையில் நீதிமன்ற வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட வாகனங்களை சோதனைசெய்த படையினர் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த றக் வண்டி ஒன்றில் இருந்து சத்தம் வருவதைக் கண்டு பிடித்தனர். குறித்த வாகனத்தின் பக்க கதவொன்று முறையாக மூடப் படாததினாலேயே அவ்வாகனத்திலிருந்து தொடர்ச்சியாக ஒலியெழும்பியதாகப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது. (நன்றி - தினக்குரல்)

## உளவியல் மற்றும் ஆற்றுப்படுத்தல் பயிற்சி நெறி

# சான்றிதழ் வழங்கும் விழா


கடந்த 3 மாதங்களாக உள, சமூக, ஆற்றுப்படுத்தல் பயிற்சி நெறியில் பங்கெடுத்து பயிற்சி நெறியை பூர்த்தியாக்கிய பயிலுனர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் கடந்த யூன் மாதம் 2ந் திகதி புதன் கிழமை பொதுநிலையினர் பணியகத்தில் இடம்பெற்றது. மன்னார் ஆயர் யோசேப்பு ஆண்டகை அவர்கள் இந்நிகழ்வில் பங்கேற்று சான்றிதழ்களை வழங்கி பயிலுனர்களை கௌரவித்தார். மன்னார் பல்சமய அமைப்பின் தலைவர் அருட்பணியாளர் வின்சன்ற் பற்றிக் (அமதி) அடிகளார் இப்பயிற்சி நெறிக்கு பொறுப்பாக இருந்து இதை நெறிப்படுத்தினார். குடும்பப் பணி நிலைய இயக்குனர் விக்ரர் சோசை அடிகளார் இப்பயிற்சிக்கான அனுசரணையயை வழங்கியிருந்தார்.

## சின்னஞ்சிறு செய்திகள்

- அருட்பணியாளர் அற்புதராஜா (அமதி) அவர்களின் அன்புத் தந்தையார் திரு. யோசப் ஞானப்பிரகாசம் (சுன்னாகம்) அவர்கள் 2.6. 2004 அன்று காலமானார்.
- யாழ் மறைமாவட்டத்தின் வழிபாடு, பண்பாடு என்பவற்றிற்கான நிலையம் கத்தோலிக்க அருங்காட்சியகம் ஒன்றை ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளது.
- திருமலை மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் பணியாற்றும் இயேசுசபைக் குரு யோசப் மேரி அடிகளார் இவ்வாண்டு தனது துறவற வாழ்வில் பொன்விழாவைக் கொண்டாடுகின்றார்.
- பிரான்சிஸ்கன் மறைபரப்பு சகோதரர்களின் புதிய மாகாணத் தலைவராக அருட்சகோதரர் ஜெரோம் கிறிஸ்ரி திசேரா அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.
- நெடுந்தீவு படகு சேவையை சீர்செய்யும்படி நெடுந்தீவுப் பங்குத் தந்தை ஜெபநேசரெட்ணம் அடிகளார் ஜனாதிபதிக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.



## பங்குத் தள சங்கதிகள்



# வஞ்சியன் குளத்தில் புதிய பங்குமனை

வஞ்சியன் குளத்தில் புதிய பங்குமனைத் திறப்புவிழா கடந்த 30. 05. 2004 அன்று மிகச் சிறப்பாக இடம்பெற்றது. மன்னார் ஆயர் இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் இவ்விழாவில் கலந்துகொண்டு புதிய பங்குமனையை ஆசீர்வதித்து திறந்து வைத்தார். நானாட்டான் பங்குடன் இணைந்திருந்த வஞ்சியன் குளம், புதுக்கமம்,, நறுவிலிக்குளம், மாதிரிக்கிராமம் ஆகிய இடங்களை உள்ளடக்கிய வஞ்சியன்குளப் பங்கிற்கு பங்குமனை இல்லாத குறை நெடுநாட்களாக உணரப்பட்டு வந்தது. 25. 07. 2003 அன்று மன்னார் ஆயர் அவர்களினால் புதிய பங்கு மனைக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. வஞ்சியன்குளம் பங்குத்தந்தை அருட்பிரகாசம் அடிகளார் இப்புதிய பங்குமனைக்குரிய கட்டுமானப் பணிகளை முன்னின்று செய்துமுடித்தார். பங்கு மக்களின் முயற்சியுடனும் ஒத்துழைப்புடனும் இப்பணி நிறைவேற்றப்பட்டது. திருப்பலியைத் தொடர்ந்து மன்னார் ஆயர் யோசேப்பு ஆண்டகை அவர்கள் பங்குமனைக் கட்டிடத்தை திறந்து வைத்து வஞ்சியன்குளத்தை தனிப்பங்காக உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.





வஞ்சியன்குளப் பங்கின் புதிய பங்குமனைக் கட்டிடத்தின் தோற்றம். பங்குத்தந்தை அருட்பிரகாசம் அடிகளார் குத்துவிளக்கேற்றி திறப்புவிழாவை ஆரம்பித்து வைக்கின்றார்.

## இவர்கள் இப்படிச் சொன்னார்கள்

இன்று இதய மாற்று சிகிச்சை பற்றி உலகெங்கும் பேசப்படுகிறது. இதனை இறைவார்த்தை வடிவில் இறைவன் அன்றே கூறியுள்ளார். இதனை எசே. 37: 26ல் காணலாம். தீய இதயத்தை மாற்றும் சிகிச்சையினை நாமே செய்துகொள்ளலாம். நற்செய்தி வழியில் ஆன்மீக ஆழப்படுத்தல் மூலம் ஒவ்வொருவரும் இதை மேற்கொள்ள முடியும். *- போல் றொபின்சன் அடிகளார்.*

*யாழப்பாணத்தில் நடைபெற்ற நற்செய்திக் கூட்டத்தின்போது.*

பௌத்த துறவிகளின் நாடாளுமன்ற நுழைவு பெரும் அழிவுகளை ஏற்படுத்தும். பௌத்த சாசனம் இந்த நாட்டில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இருந்துள்ளது. மகாசங்கம் கட்சி அரசியலுக்குள் சிக்கி பாரதூரமான விளைவுகளை சந்திக்கும் நிலைக்கு தள்ளப்படும்.

*சர்வோதய அமைப்பின் நிறுவுனரும் அதன் தலைவருமான திரு. ஆரியரத்னா*

ஈழத்தமிழ் மக்களுடைய அபிலாசைகளையும் உரிமைகளையும் தாங்கிச் செல்கின்றவர்கள் விடுதலைப்புலிகள். எவ்வளவோ தியாகங்களுக்கு மத்தியில் அவர்கள் இதைச் செய்து வருகின்றார்கள். ஆகவே இன்று விடுதலைப் புலிகளினுடைய குரலுக்கு மக்கள் செவிசாய்த்து அரசியல் ரீதியில் பாராளுமன்ற உறுப்பினர்களை தெரிந்தெடுத்து அனுப்பியிருக்கிறார்கள். அவர்கள் தமிழ் மக்களினுடைய பிரதிநிதிகள் என்று சொல்வதே சரியானது.

*மன்னார் ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை,*
*லண்டன் அனைத்துலக தமிழ் ஒளிபரப்பு கூட்டுத்தாபனத்திற்கு வழங்கிய பேட்டியில் இருந்து.*

இரண்டாம் வத்திக்கான் சங்கம் நிறைவடைந்து 42 ஆண்டுகள் ஆகியும் திருச்சபையில் பொதுநிலையினரின் நிலை இன்னும் போதியளவு துலங்கவில்லை. அவர்கள் மனித முன்னேற்றம் தொடர்பான பணிகளில் ஈடுபடுவது உண்மையே ஆயினும் முன்னேறிச்செல்ல மேலும் இடமுண்டு. ஆலய வழிபாடுகளிலும், ஈகைச்செயல்களிலும் ஈடுபடுவது மட்டுமல்ல நமது பொறுப்பு. கிறிஸ்துவுடன் இணைந்து தூய ஆவியால் ஊட்டம்பெறும் நாங்கள் அனைவரும் அவருடைய அரசில் துடிப்புள்ள உயிராற்றல் உள்ள அங்கத்தினராய் செயற்பட வேண்டும்.

*யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை,*
*யாழ் மறைமாவட்ட அருட்பணிச்சபை மாநாட்டில் ஆற்றிய உரையில் இருந்து*

## யூபிலி ஆண்டை நோக்கிய பயணத்தில் பள்ளிமுனைப் பங்கு....!

### பள்ளிமுனையில் அன்பிய வாழ்வின் வெளிப்பாடுகள்

பள்ளிமுனை புனித லூசியா ஆலயத்தின் 50 ஆண்டுகள் நிறைவை யூபிலி ஆண்டாக இவ்வருடம் மார்கழியில் கொண்டாடுவதற்காக பல ஆக்கபூர்வமான செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. சென்ற மாசி மாதம் அன்பியத் தொடர்பகத்திலிருந்து அருட்தந்தை யூட் அடிகளாருடன் நான்கு அன்பிய ஊக்குவிப்பாளர்கள் பள்ளிமுனைப் பங்கை சந்திக்க வந்தார்கள். ஒரு வாரமாக பங்கிலிருந்து ஏழு வலயங்களில் உள்ள எல்லாக் குடும்பங்களையும் தரிசித்து பத்து பத்து குடும்பங்களாக பிரித்து ஐம்பத்தி நான்கு அன்பியங்களாக ஒன்றிணைத்தார்கள். இங்கு சோர்ந்து போயிருந்த அன்பியங்கள் ஊக்குவிப்பாளர்களின் முயற்சியாலும், விசேடமாக பங்குத்தந்தையின் ஆர்வமுள்ள பணியினாலும் மீண்டும் கட்டியெழுப்பப்பட்டு அன்பியங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

ஒவ்வொரு வாரமும் அன்பிய வழிபாடுகள் குறிப்பிட்ட நேரங்களில் நடைபெறுகின்றன. வைகாசி மாதம் மாதாவின் வணக்கமாதம். இம்மாதத்தில் அன்பியங்களாக ஒவ்வொரு குடும்பங்களிலும் வழிபாடுகள் நடைபெற்றன. அன்பியங்களாக ஒன்றுசேர்ந்து நோயாளர்களை சந்தித்து, அவர்களுக்காக செபவழிபாடுகள் செய்தனர். உறவுகளின்றி பகையுணர்ச்சியோடு இருக்கும் அயல் குடும்பங்களில் சில அன்பிய வழிபாடுகள் மூலமாக பகையை மறந்து அயலவர்களோடு அன்புறவை வளர்த்துள்ளார்கள். பிரிவினை சபையிலுள்ள ஒரு சகோதரி அன்பிய ஊக்குவிப்பாளர்களின் முயற்சியால் மீண்டும் கத்தோலிக்க சபையில் பூரண நம்பிக்கையுடன் சேர்ந்துள்ளார். ஞாயிறு பூசை கடன் திருநாட்களை அனுசரிக்காமல் இருந்த இருவர் அன்பிய ஊக்குவிப்பாளர்களின் முயற்சியால் தமது கிறிஸ்தவக் கடமைகளை அனுசரிக்க முன்வந்துள்ளனர்.

## சவேரியார் குருத்துவக் கல்லூரியின் தனிநாயகம் தமிழ் மன்றத்தின்

# மன்னார் பாங்கிலமைந்த நாட்டுக்கூத்து



புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் தனிநாயகம் தமிழ் மன்ற தமிழ் விழா நிகழ்வாக எல்சல்வடோர் நாட்டுப் பேராயர் ஒஸ்கார் றோமேறோவின் வாழ்க்கை வரலாறு மன்னார் பாங்கு நாட்டுக் கூத்தாக திருமறைக் கலாமன்ற மேடையில் 15.05.2004 அன்று மேடையேற்றப்பட்டது.

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

# சிறுவர் பொழிவு

## இளம் வயதுப் புனிதர் டோமினிக் சாவியோ

### புனிதர் பட்டம் பெற்ற பொன் விழா ஆண்டு இது

### யார் இந்த டோமினிக் சாவியோ?

டோமினிக் சாவியோ, 1842 ஆம் ஆண்டு ஏப்ரல் 2ம் திகதியில் ஒரு ஏழைக் கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தார். தனது சிறு வயதிலிருந்தே இறை அன்பில் சற்றும் குறையாத மாசற்ற பிள்ளையாக வளர்ந்தார். சாவியோவின் நடத்தையும், நற்குணங்களும் அவரின் பெற்றோரையும், ஆசிரியர்களையும் மிகவும் மகிழ்ச்சிப்படுத்தின.

1854ம் வருடத்தில் சாவியோ, தொன்பொஸ்கோவை சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டு பின்னர் அவரின் மாணவர் இல்லத்தில் சேர்ந்தார். அம்மாணவர் இல்லத்தின் குறிக்கோளான *"ஆன்மாக்களைக் கொடுங்கள்: மற்றவற்றை எடுத்துக் கொள்ளுங்கள்"* என்பதை நன்கு உணர்ந்த சாவியோ, தாம் ஒரு புனிதராக வேண்டும் என்று உறுதி எடுத்தார். தொன் போஸ்கோவின் வழிநடத்துதலால் வாழும் முனி என மாசற்ற மலராகத் திகழ்ந்தார். தேவநற்கருணை பக்தியிலும், அமல உற்பவ அன்னையின் பக்தியிலும் தாமும் ஆர்வமுடன் பங்கேற்று, மற்றவர்களையும் பங்கேற்கச் செய்தார். தமது மாணவர்களுக்கு எல்லா விதங்களிலும் உதவி புரிந்து அவர்களை அன்பு செய்தார். அமல உற்பவ அன்னை குழுமத்தை ஏற்படுத்தி மரியன்னை பக்தியை பரப்பினார். கெட்ட நடத்தை உள்ள மாணவர்களை வெறுக்காமல் அவர்களை ஒப்பரவு அருட்சாதனத்தினாலும், நற்கருணையினாலும் நல்வழிப்படுத்தினார்.

சாவியோவின் இப்புனித வாழ்க்கை அவரின் உடல்நலக் குறைவால் 9 மார்ச் 1857 ல் முடிவுற்றது. சாவியோ இறந்தபோது அவரது வயது 14. ஆனால், அவர் ஆன்ம வாழ்வில் பெற்ற வெற்றிகள் அவரை புனித நிலைக்கு விரைவில் உயர்த்தின. 12 ஜுன் 1954ம் ஆண்டில் பன்னிரண்டாம் பத்திநாதர் இச்சிறு மலரை புனிதராக பிரகடனப்படுத்தினார்.

### சாவியோவின் வழியில் புனிதம் பெற.......

1. சாவியோ தமக்கு உரிய சிறு கடமைகளையும் நிறைவாகவும் பொறுப்புடனும், இறைவனின் புகழ்ச்சிக்காகவும் செய்வார்.
2. சிறந்த முறையில் பாவசங்கீர்த்தனம் செய்து நற்கருணை உட்கொள்வார்.
3. தொன் போஸ்கோவின் வழியில் "மகிழ்வில் புனிதம் - புனிதத்தில் மகிழ்வு" என்னும் தத்துவத்தை நன்குணர்ந்து கடைப்பிடித்தார்.
4. தேவ நற்கருணையிலும், மரியன்னையிலும் ஆழ்ந்த அன்பு கொண்டவர்.
5. சக மாணவர்களுக்கு ஆன்ம வாழ்விலும், கல்வியிலும் உதவி செய்து சிறந்த மாதிரியாகத் திகழ்ந்தார்.
6. *"பாவம் செய்வதைவிட சாவதே மேல்"* என்பதை தனது விருதுவாக்காகக் கொண்டு, பாவமற்ற வாழ்க்கை வாழ்ந்தார்.
7. தமது புனித வாழ்க்கையில் ஏழு வயதிலேயே நற்கருணை பெற அனுமதி பெற்ற சாவியோ, அத்தருணத்தில் எடுத்த உறுதி மொழிகள்.

*நான் அடிக்கடி பாவசங்கீர்த்தனம் செய்து நற்கருணை உட்கொள்வேன். இறைவனின் திருநாட்களை பரிசுத்தமாய் கடைப்பிடிப்பேன். இயேசுவும் மரியாளும் என் நண்பர்கள். பாவம் செய்வதை விட சாவேன்.*

இவை வெறும் உறுதிமொழிகளாக மட்டும் இல்லாமல் சாவியோவின் வாழ்க்கைச் சட்டங்களாகத் திகழ்ந்தன.

சாவியோ இறந்தபோது அவரது வயது 14. ஆனால், அவர் ஆன்ம வாழ்வில் பெற்ற வெற்றிகள் அவரை புனித நிலைக்கு விரைவில் உயர்த்தின. 12 ஜூன் 1954ம் ஆண்டில் பன்னிரண்டாம் பத்திநாதர் இச்சிறு மலரை புனிதராக பிரகடனப்படுத்தினார்.



### சாவியோவின் வாழ்க்கைச் சுவடுகள்

1842 இத்தாலி நாட்டில், கியேரி மாகாணத்தில் ரிவா என்னும் சிற்றூரில் பிறந்தார்.
1854 பெக்கியில் புனித தொன் போஸ்கோவைச் சந்தித்தார்.
1856 அமல உற்பவ அன்னை குழுமத்தை சாவியோ துவக்கினார்.
1857 தமது 14ஆம் வயதில் இறந்தார்.
1933 அர்ச்சிட்ட பட்டம் பெற்றார்.
1950 முத்திப்பேறு பட்டம் பெற்றார்.
1954 புனிதர் பட்டம் பெற்றார்.
2004 புனிதத்துவ பொன் விழா ஆண்டு

### இன்றைய திருச்சபையில் சாவியோ

தமது சிறுவயதிலிருந்தே பலிப்பீடச் சிறுவனாக பணி செய்த சாவியோ இன்று திருச்சபையில் 'பலிப்பீட சிறுவர்களின் பாதுகாவலர்' எனத் திகழ்கிறார்.

தமது அன்னையின் பிரசவத்தின்போது அவளுக்கு எல்லா வகையிலும் உதவியாக இருந்து, தனது செபங்களின் மூலம் அன்னைக்கு ஆறுதலாக இருந்த சாவியோ இன்று "பிரசவத் தாய்மார்களின் பாதுகாவலராகத்" திருச்சபையில் திகழ்கிறார். சாவியோவின் பச்சை உத்தரியம் (GREEN SCAPULAR) பிரசவ தாய்மார்களுக்கு சிறந்த பாதுகாவல் ஆகும்.

### புனித சாவியோவின் காட்சிகள்

சாவியோவின் மறைவுக்குப்பின் அவரின் நண்பர்கள் சாவியோவிடம் மன்றாடி உடல் நலம் பெற்றனர். தமது மறைவுக்குப்பின் துயரத்தால் வாடிய தனது தந்தைக்கு சாவியோ தோன்றி தான் மோட்சத்தில் மகிழ்வுடன் இருப்பதாகக் கூறி ஆறுதல்படுத்தினார்.

டோமினிக் சாவியோ தனது ஆன்ம குருவான புனித தொன் பொஸ்கோவுக்கு 6 டிசம்பர் 1876 இல் தோன்றினார். இக்காட்சியில் புனிதத்துவம் பெற நற்கருணையும், மாசற்ற வாழ்வும் மிகவும் முக்கியம் என்று உணர்த்தினார்.

### பொன் விழா நிகழ்வுகள்

சிலாபம் மறை மாவட்டத்தில் உள்ள தன்கொட்டுவவில் அமைந்துள்ள தொன் போஸ்கோ இளநிலை குருமடம், புனித தோமினிக் சாவியோவின் பொன்விழாவை வெகு சிறப்பாகக் கொண்டாடி வருகிறது. இக்குருமடத்தில் அமைந்துள்ள ஆலயம் புனித தோமினிக் சாவியோவுக்கு நேர்த்திக்கப்பட்ட ஆலயம் ஆகும். ஸ்ரீலங்காவில் புனித தோமினிக் சாவியோவின் பெயர் கொண்ட ஆலயம் இது ஒன்றே ஆகும். சிறுவர்களின் புனிதரான தோமினிக் சாவியோ நமது மாதிரியாகத் திகழ்கிறார்.

## கவிதைப் பூக்கள்

### நாம் வாழ்வதெப்படி

அன்னை தந்தை பேணடி பாப்பா
என்றும் அன்பாய்ப் பழகிடடி பாப்பா
சகோதர பாசமுடன் பாப்பா
சகலரையும் மதித்து நட பாப்பா
பெரியோரைக் கனம் பண்ணு பாப்பா
என்றும் பேச்சில் இனிமை கொள்ளு பாப்பா
நன்றாய்ப் படித்திடடி பாப்பா
எம்மை நாடுநகர் போற்ற வேணும் பாப்பா
ஓடி ஆடி விளையாடு பாப்பா
என்றும் ஒற்றுமையாய் வாழ்ந்திடடி பாப்பா
தெய்வம் தொழுது கொள்ளு பாப்பா
இதை வளக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா

*நா. எட்வேட் அலோயசன்,நா.ம.வித்தியாலயம், கங்காணிதீவு, நானாட்டான்.*

### ஏழை வாழ்வு

ஏழைகள் வாழ்விலே துன்பங்கள் பல
அத்துன்பத்தை துடைப்பது யார்?
அவர்களின் பின்னடைவுக்கு என்ன காரணம்?
ஏன் பணம் இல்லை? ஏன் பொருள் இல்லை?
என்றுவரை இந்த நிலை தொடரும்?
ஏழைகள் என்ற சொல் ஒழிந்திட
ஏற்றமுடன் நாம் உதவிடுவோம்.
துன்பம் துடைக்க முன்வருவோம்.
ஏழைகள் வாழ்வில் தோள் கொடுப்போம்.
பணம் பொருள் பதவி சிறிது காலம்
பரிவுடன் நம்மைப் பின்தொடரும்.
ஏழையர் நட்பு என்நாளும்
ஏற்றமாய் நமக்கு தேவையாமே
அனைவரும் சோதரர் என்ற நிலை
அவனியில் ஏற்பட நாம் உழைப்போம்.
சிந்தித்து நாமும் செயல்படுவோம்
சீர்மிகு வாழ்வை வாழ்ந்திடுவோம்.

*சூ. டிலாணி, வீரபுரம், நேரியகுளம்.*

### பள்ளிப் பருவமதில்

பாலர் எமது உள்ளங்களில்
அன்பு பகிர்வு ஒற்றுமை என்னும்
பண்புகள் கொண்டு வாழ்ந்திடுவோம்.
ஓர் குலமாய் நாம் கூடி
ஒற்றுமை என்னும் சங்கிலியால்
ஒன்றிணைந்து வாழ்ந்திடுவோம்
சீரும் சிறப்பும் பெற்றிடவே
சிறுவர்கள் நாம் ஒன்றிணைந்து
சிறகை விரித்து பறந்து சென்று
சிறு உலகை அமைத்திடுவோம்

*வே. நொயலின், மாணவியர் இல்லம், முருங்கன்.*

### பாலகர்கள் நாங்கள்

பாலகர்கள் நாங்கள் கூடிடுவோம்
பிரிவினைகளை மறந்திடுவோம்
அன்பால் உலகை வென்றிடுவோம்
அமைதி நிலைக்கச் செய்திடுவோம்
தன்னலமற்று வாழ்ந்திடுவோம்
பிறரை அன்பு செய்திடுவோம்
ஒருவர் ஒருவரை நேசிப்போம்
ஒற்றுமையுடனே வாழ்ந்திடுவோம்
பரமன் பெயரை பரப்பிடுவோம்
பாவ இருளை அகற்றிடுவோம்
பண்போடு இறைவனைத் தொழுதிடுவோம்

*ஆர். அந்தனி குரூஸ், தாழ்வுபாடு, மன்னார்.*

## கொஞ்சமாச் சிரிங்க...!

### விகட கவியின் சாமர்த்தியம்

'டிரைபெவுலெட்' என்ற இந்த விகடகவி மன்னன் லூயிஸ் என்பவனின் அரசவையில் விகடகவியாக இருந்தான். அவன் செய்த ஒரு தவறுக்காக மன்னன் அவனுக்கு மரணதண்டனை விதித்து "உன் கடைசி ஆசை என்ன?" என்று கேட்டான் "அரசே எனக்கு இயற்கையான மரணம் வேண்டும்" என்றான். அவனுடைய சாமர்த்தியமான கோரிக்கையை மெச்சிய அரசன், உடனே அவனை விடுதலை செய்தான்.

---

ஆசிரியர்: ஏன்டா நாலையும், மூன்றையும் கூட்டிப் பதில் சொல்லத் தெரியலையா?
மாணவன்: தெரியும் சார்
ஆசிரியர்: அப்ப ஏண்டா சொல்லேல்ல?
மாணவன்: நீங்கதானே சொன்னீங்க இதெல்லாம் மனக்கணக்குன்னு அதனாலமனசுக்குள்ளேயே சொல்லிக்கிறேன்.

---

அம்மா: ஏன்டா கையில ஒரு விளக்கோடு ஒரு பெண்ணை கூட்டி வந்திருக்கே?
மகன்: நீ தானேம்மா சொன்னே, வீட்டுக்கு விளக்கேத்த ஒரு பெண்ணு வேணும்னு....

*செ. டிலோஜினி, உமனகரி, நானாட்டான்.*

கணவன்: எங்க அம்மாவை வீட்டை விட்டு வெளியால போண்ணு சொன்னியாமே?
மனைவி: அப்படி எல்லாம் மரியாதை இல்லாமச் சொல்வேனா? போங்கனுதான் சொன்னன்.

*ப. வதனா, வாழ்கைப்பெற்றான் கண்டல்.*

சாந்தி: தம்பி என்ர மருமகளுக்கு சாறி சட்டை தைச்சுத் தாங்க
டெய்லர்: சரி தாங்க. தைச்சுத்தாரன்.
சாந்தி: தம்பி தைச்சிற்றிங்களா?
டெய்லர்: ஓம் அக்கா இந்தாங்க.
சாந்தி: என்ன தம்பி கட்ட கை வைக்கச் சொல்ல நீட்டுக்கை வைச்சிருக்கிறீங்க?
டெய்லர்: நீங்கதானே சொன்னீங்க என்ர மருமகளுக்கு கை நீளம் எண்டு. அதாலதான் நீளக் கை வைச்சன்.

*வெ. சங்கீதா, உயிர்த்தராசன் குளம், T.M.S. முருங்கன்.*

அப்பா: மகனே இங்கே வா. எங்கே உன்னுடைய பல்லு கொட்டுண்டுதா...
மகன்: இல்லங்கப்பா, நேற்று பாடசாலைக்கு டாக்டர் வந்து சொன்னாரு எல்லோரும் உங்களுடைய பல்லை பாதுகாப்பாக வைத்திருக்கனும் என்று. அதோட நான் பல்லை கழட்டி கண்ணாடிப் பெட்டிக்க வைச்சிட்டன்.

*செ. அனோஜா, உயிர்த்தராசன் குளம், முருங்கன்.*

கிழவி 1: என்ர பல்லு ஒரே ஆட்டமாத்தான் இருக்கு. நிக்குதே இல்லை...!
கிழவி 2: அப்ப எப்ப அரங்கேற்றம்? நிக்காம ஆடுகிறதால விரைவில் நடக்கும் என்று நினைக்கிறேன்.

---

கமலா: ஏன்டி றாதா என்ர புருசன் எனக்கு ரி.வி. கிறைண்டர் எல்லாம் எடுத்திருக்கிறார் நீ எடுக்கலையா?
றாதா: நான் ரி. வி. எடுத்திடுவன் ஆனால், என்ர மனுசனுக்கு முதல்ல பிுக்கர் வேண்டித்தரவாம் என்று ஒரே கரைச்சல். குக்கர் எடுக்காட்டி சமைக்க மாட்டன் எண்டு ஒரே கரைச்சல்.

*சர்மி, ஆள்க்காட்டிவெளி, அடம்பன்.*

நோயாளி: என்னங்க டாக்டர் என்ர ஆஸ்துமா வியாதி குணமாயிடுமா?
டாக்டர்: உம்முடைய ஆத்மா சாந்தியடையட்டும்

*ம. காமலிற்றா, சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி, மன்னார்.*

பைத்தியம்: பழைய டாக்டரைவிட உங்களை எங்க எல்லோருக்கும் ரொம்பப் பிடித்திருக்கின்றது.
டாக்டர்: (மகிழ்ச்சியுடன்) ஏன்?
பைத்தியம்: உங்களைப் பார்க்க எங்களை மாதிரியே இருக்கிறீங்க.

*சந்தான் கொண்சிலா, வண்ணாகுளம், அடம்பன்.*

நம்பிக்கை பற்றிய ஓர் ஆய்வு

## வாழ்வு தரும் வார்த்தை

### "மகளே உனது நம்பிக்கை உன்னைக் குணமாக்கியது!"

நம்பிக்கை பற்றிய ஓர் ஆய்வு

# விவிலிய உலகில் நம்பிக்கை



குட்டிக் குட்டியான தன் சின்ன சிவந்த அலகை ஆசையோடு பிளந்து, அம்மாவின் முதிர்ந்த அலகை உள்வாங்குமே குருவிக்குஞ்சு, அங்கு நடப்பது உணவுப் பரிமாற்றம் மட்டுமல்ல, உறவுப் பரிமாற்றமும்தான். இதைப்போல கடவுளின் ஆசையான பாசப்பரிமாற்றத்தை நொறுங்கிக் கிடக்கும் மனித உள்ளம் தன் இதயத்தை பிளந்து உள்வாங்கும்போது அங்கு நடப்பது நோய் நீங்கும் நலம் மட்டுமல்ல, நிறைவாழ்வுக்கான முழுமையும் அங்கு ஒளிர்கிறது.

## விவிலிய உலகில் நம்பிக்கை

1. "அம்மா உன் விசுவாசம் உன்னைக் குணமாக்கியது"
2. "அம்மா உன் நம்பிக்கை உன்னைக் குணமாக்கியது"

இந்த இரண்டு வார்த்தைகளில் எதைச் சொல்லும்போது நமக்கு திருப்தி ஏற்படுகிறது? இவற்றில் எந்த வார்த்தை அடிமனத்தின் ஆழமான அனுபவத்திற்கு நம்மை இட்டுச் செல்கிறது? மொழிப்பயன்பாட்டின் பழக்கதோஷத்தில் சிலர் *விசுவாசம* என்பதையும் வேறு சிலர் *நம்பிக்கை* என்பதையும் தூக்கிப்பிடிக்கலாம். இதில் எந்த வார்த்தை சிறந்தது என்னும் பட்டி மன்றத்திற்குள் நாம் நுழையத் தேவையில்லை. இவ்விரண்டு சொற்பதங்களும் சுட்டிக்காட்டும் ஆழமான அழுத்தமான உள்மன அனுபவத்தை இங்கு படம்பிடித்துக் காட்ட முயல்வோம். இந்த அடித்தளமான மானிட எதார்த்தத்தை *நம்பிக்கை* என்னும் பெயரிலேயே இங்கே குறிப்பிடுகிறோம்.

விவிலிய உலகில் நம்பிக்கை என்னும் அனுபவத்தை அடுக்கடுக்காக உரித்துப்பார்த்துப் பொருள் கொள்ள வேண்டும். நிரந்தரம், ஆணிவேர்ப்பிடிப்பு, உறுதிப்பாடு, திடமான அடித்தளம், உரத்தோடு தாங்குதல், விடாப்பிடி போன்றவற்றை உள்ளடக்கி வருவதுதான் *நம்புதல* என்னும் விவிலிய வார்த்தை. இரண்டறக் கலந்தறிதல், நம்பகத்தன்மை, உண்மை, கொடுத்த வாக்கைக் காப்பாற்றுதல், கேட்ட வாக்குறுதியை நம்புதல், நன்றி உள்ளத்தோடு நம்புதல், தேய்மானமில்லாத வளர்பிறை உறவு, பற்றிப்பிடிக்கும் பாசம், சோதனையிலும் தளரா நம்பிக்கை போன்ற அர்த்தங்களிலும் *நம்புதல்* என்னும் வார்த்தை பயன்படுத்தப்படுகிறது.

மானிட சக்தியாலும் கற்பனையாலும்கூட சாத்தியமில்லை என்பதிலிருந்து சாத்தியப்படுத்தலாமே என்னும் நகர்வை நோக்கி உந்தித்தள்ளும் அகச் சக்தியை நம்புதல் என்றே குறிப்பிட்டனர். எதிர்கொள்ளும் எல்லா இன்னல்களையும் இறைவனைப் பற்றிப் பிடித்துள்ள உறுதியினால் எதிர்கொள்ளும் பக்குவம், உடன்படிக்கை சுமத்தும் ஆணைகளைத் துல்லியமாக நிறைவேற்றும் ஆவேசம், படைத்து மீட்கும் யாவே - கடவுளுக்கு மட்டுமே முதல் மரியாதை, அந்தக் கடவுள் சொன்னபடி நடக்கும் அறவாழ்வு, மீட்புச் செயல்களை நினைவு கூர்ந்து நன்றி பாராட்டுதல், அவரது பிரமாணிக்கமான இரக்கத்தை நெகிழ்வோடு உள்வாங்குதல் இவை போன்றவற்றையும் உள்ளடக்கியதே *நம்பிக்கை* என்னும் வார்த்தை.

இவ்வாறு நம்புதல் என்னும் எதார்த்தம் ஆழ்மனத்து உளவியல், இயல்பூக்கம், மானிடத்தேவை, தேர்ந்து தெளிய வேண்டிய அறநெறி, அதற்கு ஈடு கொடுத்து நம்பி இறங்குதல், இறைபற்று வழங்கும் உத்திரவாதம், கடவுளைச் சார்ந்திருத்தல் என்னும் பல்வேறு ஆன்மீகத்தளங்களில் செயல்படுகிறது.

நம்பிக்கையா? - சட்டமா? - இந்தக் கேள்வியை எழுப்பும் பவுலடியார் கடவுளின் வரம்பற்ற இலவசக்கொடையான பாசத்திற்குப் பதிலிறுப்பதை நம்பிக்கையாக வலியுறுத்துகிறார். நம்பிக்கையா? - செயல்பாடா? - இந்தக் கேள்வியை எழுப்பும் யாக்கோபு கோவில் பூனைத்தனமாக வழிபாட்டு மந்திரங்களாக நம்பிக்கையைச் சுருக்கிவிடும் ஆபத்திற்கு எதிராக நம்மை எச்சரிக்கிறார்.

## எதை நம்புவது? யாரை நம்புவது?

"மகளே உனது நம்பிக்கை உன்னைக் குணமாக்கிற்று. அமைதியுடன் போ. நீ நோய் நீங்கி நலமாயிரு" - மாற் 5: 34. "ஏன் அஞ்சுகிறீர்கள்? உங்களுக்கு இன்னும் நம்பிக்கை இல்லையா?" மாற் 4: 39.

இரத்தப்போக்குடைய பெண்ணை உறுதிப்படுத்தும் ஆதரவுச் சொல்லின் ஆறுதலிலும், சாகப்போவதாக நினைத்துத் துடித்துப் போகும் சீடர்களை இடித்துரைக்கும் கட்டத்திலும் *நம்பிக்கை* என்பது பயன்படுத்தப்படுகிறது. எதை நம்புவது - யாரை நம்புவது என்பதைக் குறிப்பிடாமல் இங்கு பயன்படுத்தப்படுகிறது. தீய ஆவி பிடித்துப் பேச்சிழந்த மகனை மீட்டெடுக்கும்

> மாற்கு 5: 34ல் காணப்படும் "குணமாக்கிற்று.... அமைதியுடன் போ...." "நலமாயிரு" போன்ற வார்த்தைகள் கடவுளின் கட்டுப்பாடற்ற பாசத்துச் சூறாவளியை மீட்பின் முழுமையாகச் சித்தரிக்கின்றன.

பதற்றத்துடன் ஓடிவந்த தந்தையின் கூற்று இது. "நான் நம்புகிறேன். என் நம்பிக்கையின்மை நீங்க உதவும்" - மாற் 9: 24. அதற்கு முன், இயேசுவின் இடித்துரைத்தலில் "நம்பிக்கையற்ற தலைமுறையினரே" (மாற் 9:19) என்னும் வார்த்தையாடலிலும் யாரை எதை நம்புவது எனக் குறிப்பிடப்படவில்லை.

யாரை - எதை நம்புவது என்னும் பொருளை உள்ளடக்கி "நம்புங்கள்" என்னும் வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளதையும் நாம் கவனிக்க வேண்டும்.

"காலம் நிறைவேறிவிட்டது. இறையாட்சி நெருங்கிவிட்டது. மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்" - மாற் 1:15.

"கடவுள்மீது நம்பிக்கை கொள்ளுங்கள்...." எவராவது இந்த மலையைப் பார்த்து பெயர்ந்து கடலில் விழு எனத் தம் உள்ளத்தில் ஐயம் எதுவுமின்றி நம்பிக்கையுடன் கூறினால் அவர் சொன்னவாறே நடக்கும்....." "நீங்கள் இறைவனிடம் வேண்டும்போது எவற்றையெல்லாம் கேட்பீர்களோ அவற்றைப் பெற்று விட்டீர்கள் என நம்புங்கள்......" (மாற் 11: 22 - 24)

இங்கு யாரை - எதை நம்புவது என்பதைத் தெளிவாகக் காண்கிறோம். இப்படித் தெளிவாக கடவுளை, நற்செய்தியை, உயிர்ப்பை, மீட்பை எனக் குறிப்பிடாதபோது நம்புதல் என்னும் வார்த்தையை எப்படிப் புரிந்துகொள்வது?

## குணம் பெறும் சூழலில் நம்பிக்கை

"மகளே, உனது நம்பிக்கை உன்னைக் குணமாக்கிற்று. அமைதியுடன் போ, நீ நோய் நீங்கி நலமாயிரு" (மாற் 5:34) இங்கு நம்பிக்கை என்பதன் உள்ளடக்கம் (Content) என்ன எனப் பார்ப்பதைவிட நம்பிக்கைக் கொள்ளும் இயக்கத்துடிப்பைப் (Process) பார்ப்பதுதான் சிறப்பானதாகும்.

இக்கட்டுரையின் முதல் பகுதியான விவிலிய உலகின் நம்பிக்கை பற்றிய அடுக்கடுக்கான பரிமாணங்களை மீண்டும் நினைவில் நிறுத்திக்கொள்வோம்.

படைப்புலகைக் கொடையாகக் கொடுக்கிறார் இறைவன். நம்பிக்கை விதை விதைத்து நம்பிக்கைக் கனிகளை மனிதத்து ஆழத்திலிருந்து அறுவடை செய்யத்துடிக்கிறார் இறைவன். இந்த நம்பிக்கைத் தளத்தின்மீது கட்டி எழுப்பப்பட வேண்டிய அறநெறிதான் மானிடத்தையும் படைப்புலகின் முழுமையையும் இணைக்கிறது. இப்பின்னணியில் இறைவனின் ஏக்கமும் எதிர்ப்பார்ப்பும்தான் என்ன? படைப்புலகில் அசை வாடிக்கொண்டிருக்கும் மானிடம் தெய்வீக முழுமையை எட்டிப்பிடித்து நிறைவடைய வேண்டும். மாற்கு 5: 34ல் காணப்படும் "குணமாக்கிற்று.... அமைதியுடன் போ...." "நலமாயிரு" போன்ற வார்த்தைகள் கடவுளின் கட்டுப்பாடற்ற பாசத்துச் சூறாவளியை மீட்பின் முழுமையாகச் சித்தரிக்கின்றன. இந்த நிறைவாழ்வு மானுடத்தை எட்டிப்பிடிக்கும்போது ஏற்படும் தடங்கல்கள் "நோய் நீங்கி" என்னும் சொல்லாடலால் நொறுக்கப்படுகிறது. அந்த நம்பிக்கை கடவுள் கொடுத்த கொடையா? அந்த இரத்தப் போக்குடைய நோயாளி உருவாக்கிக்கொண்ட மனநிலையா? உனது நம்பிக்கை உன்னைக் குணமாக்கிற்று எனக் கூறும்போது அங்கு இறைவனின் பங்கேற்புத்தான் என்ன?

இங்கு நொறுக்கப்பட்ட உடலுக்குள்ளும் மனசுக்குள்ளும் இறைவனே நேரடியாக நம்பிக்கை விதை ஊன்றும் புதுமை நடக்கின்றது. சாத்தியமில்லாத ஒன்று சத்தியமாக நடைபெறும் அவசரமும் ஆவேசமும் அங்கு படையெடுக்கிறது.

முன்னால் வந்தது எது? கோழியா? முட்டையா? இதைப்போலவே நம்பிக்கையால் குணம் பெறுதலா? குணம் பெற்றதால் நம்பிக்கையா? இந்தக் கேள்வியே தேவையில்லாதபடி இறைவனின் இதயத்துடிப்பும் நொறுக்கப்பட்டோரின் இதயத்துடிப்பும் ஒன்றாகத் துடித்து இணையும்போது அங்கு பிறப்பது நம்பிக்கை மின்னல். இந்த மின்னல் ஏற்படுத்தும் மின்சாரக் கதிர் வீச்சு அந்த உடைக்கப்பட்ட பெண்ணை முழுமையான பெண்ணாக மாற்றுகிறது.


ஆக, மீட்பின் நிறைவை எட்டிப்பிடிக்க வேண்டிய மானிடத்து ஏக்கமும், எட்டிப்பிடிக்க வா என்னும் இறைவனின் எதிர்பார்ப்பும் இணையத்துடிக்கும் இயக்கமே (Process) 'நம்புதல்' என்னும் 'குணம் பெறல்'.

இது மாஜிக் வேலையல்ல. மாந்திரீகச் சித்துவேலை அல்ல. மானிடத்து அடித்தளத்து உயிரான ஆண்டவனின் இதயத்துடிப்பை ஆசையோடு உள்வாங்குவதுதான்.

குட்டிக் குட்டியான தன் சின்ன சிவந்த அலகை ஆசையோடு பிளந்து, அம்மாவின் முதிர்ந்த அலகை உள்வாங்குமே குருவிக்குஞ்சு அங்கு நடப்பது உணவுப் பரிமாற்றம் மட்டுமல்ல, உறவுப் பரிமாற்றமும்தான். இதைப்போல கடவுளின் ஆசையான பாசப்பரிமாற்றத்தை நொறுங்கிக் கிடக்கும் மனித உள்ளம் தன் இதயத்தை பிளந்து உள்வாங்கும்போது அங்கு நடப்பது நோய் நீங்கும் நலம் மட்டுமல்ல, நிறைவாழ்வுக்கான முழுமையும் அங்கு ஒளிர்கிறது. (நன்றி - விவிலிய விருந்து)

## நம்பிக்கையின் சுடரொளியாக விளங்கும் விவிலிய மாந்தர்கள்

"நேர்மையுடையோர் தம் நம்பிக்கையால் வாழ்வு அடைவர்" என்பது அபக்கூக்கு இறைவாக்கினர் மூலம் கடவுள் வெளிப்படுத்திய உண்மை (2: 4) இவ்வுண்மையை பவுலும் மற்ற புதிய ஏற்பாட்டு நூல்களும் வலியுறுத்துகின்றன (உரோ 1:17, கலா3:11, எபி 10:38). மேற்கண்ட இந்த விவிலிய உண்மைக்குச் சான்றாக விவிலியக் கதாபாத்திரங்கள் பலரைக் காண்கிறோம். ஆபிரகாம் தொடங்கி, தாவீது, இறைவாக்கினர்கள், அன்னை மரியாள், திருத்தூதர்கள், புனித பவுல் என்று நாம் பலரைக் குறிப்பிடலாம். சட்டத்தையும் வெளிப்புற சடங்குகளையும் ஒருவர் கடைபிடிப்பதனால் மட்டும் கடவுளுக்கு ஏற்புடையவராக மாற முடியாது. கடவுள்மீது கொண்டுள்ள முழு நம்பிக்கையின் வழியாகத்தான் ஒருவர் கடவுளுக்கு ஏற்புடையவராக மாறுகின்றார். (காண். உரோ 3: 21 - 26). அதனால்தான் "தம் செயல்கள்மீது நம்பிக்கை வையாது கடவுள்மீது நம்பிக்கை வைப்போரை கடவுள் தமக்கு ஏற்புடையவர் எனக் கருதுகிறார்" என்று பவுல் தெளிவுபடுத்துகிறார் (உரோ4: 5).



கடவுளின் வார்த்தையை நம்பி திக்குத் தெரியாத திசையில் பயணம் செய்த ஆபிரகாம், "இந்தக் கோலை கையில் எடுத்துச் செல்வாய் இதை கொண்டு நீ அருஞ்செயல்கள் ஆற்றுவாய்" (விப 4:17) என்று கூறிய வார்த்தையை அப்படியே கடைபிடித்த மோசே "அஞ்சாதே, நான் உன்னோடு இருக்கிறேன்" என்றுகூறிய கடவுளின் வார்த்தைக்கு மறுப்பேதும் கூறாமல் வாழ்ந்து காட்டிய எரேமியா (எரே1:8), பிள்ளை பெற்றெடுக்கும் சூழ்நிலையில் இல்லாத கன்னிப்பெண் மரியா வானதூதர் மூலமாக கடவுள் அனுப்பிய அழைத்தலை கேட்டு "இதோ உமது அடிமை" என்று வாழ்ந்த அன்னை மரியா - இவர்கள் யாவரும் விவிலியத்தில் நம்பிக்கையின் சுடராக ஒளி வீசுகின்றனர்.

இறைவன்மேல் நம்பிக்கை என்பது எபிரேயருக்கு எழுதப்பட்ட மடலில் காண்பது போன்று, "எதிர் நோக்கி இருப்பவை கண்ணுக்கு புலப்படாமல் இருந்தாலும் கிடைக்கும் என்னும் மனவுறுதியோடு ஒருவர் வாழ்கின்ற ஐயமற்ற நிலை" (எபி 11:1-2). அதாவது, வாக்களிக்கப்பட்டவை பெற இயலாத சூழ்நிலை இருப்பினும், மனித முறையில் இயலாதவை என்று தோன்றினாலும் "கடவுளால் ஆகாதது ஒன்றுமில்லை" என்ற ஆழ்ந்த மனவுறுதியை இறை நம்பிக்கையின் நிலை என்று கூறவேண்டும்.

மனிதர்மேல் நம்பிக்கை வைப்பதற்கும் கடவுள்மேல் நம்பிக்கை வைப்பதற்கும் மிகுந்த வேறுபாடு உண்டு. நமக்கு அறிமுகமான ஒருவரின் திறமையிலும், பதவி - படிப்பிலும், அவருடைய அதிகாரத்திலும் நம்பிக்கை வைத்து அவருடைய உதவியை (பொருளுதவி, ஆலோசனை) நாடுவது எல்லாரும் கடைபிடிக்கிற நடைமுறை. நாம் நாடுகின்ற மனிதர் நமது தேவையை நிறைவு செய்ய முடியும் என்பதை நாம் நன்கு அறிந்திருப்பதனால் அவர்மேல் நம்பிக்கை வைக்க நாம் முனைகிறோம். ஆனால், கடவுள்மேல் உள்ள நம்பிக்கை நமது வேண்டுதல்களை அவர் நிறைவேற்றுவதற்கான சூழ்நிலை உலக நடைமுறைப்படி நம்மில் இல்லையென்றாலும் கடவுள் அதை நிறைவேற்றுவார் என்று உறுதியாக ஏற்றுக்கொள்வது இறை நம்பிக்கை. உதாரணமாக, தம் பணியாளரைக் குணமாக்க நூற்றுவர் தலைவர் இயேசுவிடம் வேண்டிக்கொள்கிறார். ஆனால், உலக வழக்கப்படி இயேசு தமது வீட்டிற்கு வந்து தம் பணியாளரை தொட்டு குணமாக்க வேண்டும் என்று அந்த நூற்றுவர் தலைவர் எதிர்பார்க்கவில்லை. ஆனால், "ஒருவார்த்தை மட்டும் சொல்லும் என் ஊழியர் நலமடைவார்" என்று கூறினாரே அதுதான் இறைவனில் நாம் கொள்ளும் நம்பிக்கைக்குச் சிறந்ததோர் உதாரணம் (லூக் 7:6). (நன்றி. விவிலிய விருந்து)

## மன்னாரில் ஒரு புதிய மறைபரப்புச் சபை முளைவிடுகிறது...!

## புனித பிரான்சிஸ்குவின் சமாதான மறைபரப்பாளர் சபை

# அர்ப்பண விழா நிகழ்வு

**இச்சபையின் நேற்றைய ஆரம்பம், இன்றைய பணிகள், எதிர்காலத் திட்டங்கள் பற்றி மனம் திறந்து பேசுகிறார் இச்சபையின் ஸ்தாபகி அருட்சகோதரி றூபறாணி ஜோசப்.**

*சந்திப்பு – மன்னா சிறப்புச் செய்தியாளர் ஏ. வினோத்*



அந்திமாலைப் பொழுதில் வட்டக்கண்டலில் உள்ள பிரான்சிஸ்கன் கன்னியர் இல்ல வாசல் கதவைத் தட்டியபோது "ஓம் ..... ஓம்....... வாறன்" என்ற குரல் ஓசையுடன் விரைவாக ஓடி வந்து கதவைத் திறந்தார் அருட்சகோதரி ரூபராணி.

"வாங்க வாங்க" என்று யாரென்று தெரியாமலே அன்போடு என்னை வரவேற்றார். நீங்கள் யாரென்று என்னைக் கேட்பதற்கு முன்னரே நான் அவரிடம் மன்னா பத்திரிகை சார்பாக சந்திக்க வந்திருக்கிறேன் என்று என்னை அறிமுகப்படுத்திக்கொண்டேன். அன்போடு அமரும்படி கூறினார்.

அமைதியாக ஆறுதலாக அவரின் உள்ளக்கிடக்கைகளை ஆராயத் தொடங்கினேன்.

முதலாவதாக அவரது குடும்பச் சூழ்நிலையை அவர் விபரித்தார். கடலும் கடல் சார்ந்த இடமுமான நெய்தல் நிலத்தில் (மன்னாரில்) ஜோசப் திரேசம்மா தம்பதியினருக்கு கனிஷ்ட புதல்வியாக 1959 ம் ஆண்டு புரட்டாதி 14ம் நாள் பிறந்தார். பெற்றோர்களுடனும் தன்னுடைய நான்கு சகோதரங்களுடனும் உண்மையான விசுவாசத்தை குட்டித்திருச்சபையாகிய தன்னுடைய குடும்பத்தில் வாழ்ந்து வந்தார்.

"எங்களை எமது அப்பா மிகுந்த அன்புடனும் பாசத்துடனும் வழிநடத்தி வந்தார்....." கண்களில் ஒளி மின்ன மன்னாரில்



அந்நாட்களில் பிரபலமாக அறியப்பட்ட யோசவ் மாஸ்ராகிய தனது தந்தையின் நினைவுகளை சகோதரி இரைமீட்டார்.

பின்பு தனக்குள் எழுந்த போராட்டத்தின் மத்தியில் 1984ம் ஆண்டு தன்னை துறவற வாழ்விற்கு அர்ப்பணித்துக் கொண்டார். "நான் என்னுடைய முதல் வாக்குத்தத்தத்தை நான் இருந்த மரியாளின் பிரான்சிஸ்கு மறைபரப்பாளர் சபை (Franciscan Missionaries of Mary - F.M.M) என்ற சபையில் நிறைவேற்றினேன்."

துறவியாகவே வேண்டும் என்று உள்ளத்தில் வேகம் கொண்ட நீங்கள் அந்தத் துறவற சபையில் இருந்து விலகி வெளியேவரக்காரணம் என்ன? என்று வினவினேன்.



"உண்மையில் நான் துறவியாக வேண்டும் என்று அடிமனதில் ஆழமான தீர்மானம் எடுத்துக்கொண்டேன். நான் இச்சபையில் மிகவும் நாட்டம் கொண்டிருந்தேன். எம்முடைய புனிதரின் நோக்கம் ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்கப்பட வேண்டும் என்பதாகும். அப்படி துறவியாக இருந்த காலப்பகுதியில் எனது சபையின் சில நடவடிக்கைகள் எனக்குப் பிடிக்கவில்லை. எப்படியென்றால் அங்கு இருக்கும் ஏழைப்பிள்ளைகளுக்கு தரம் குறைந்த பாடசாலையிலும் வசதியான பிள்ளைகளுக்கு வேறு ஒரு பாடசாலையிலும் கல்வி புகட்டப்படுவதை நான் கண்டேன். வறியவர்களை ஒதுக்கி வைப்பதையும் தரக் குறைவாக நோக்குகின்ற தன்மையையும் நான் அவதானித்தேன். கல்வியில் மட்டுமல்ல, உணவு போன்ற சில அடிப்படைத் தேவைகளில் இழிவு மனப்பான்மை இருப்பதை நான் கண்கூடாகக் கண்டேன். ஏழைகளோடு வேலைசெய்ய வேண்டும், அவர்களுக்கும் நற்செய்தி போதிக்கப்பட வேண்டும் என்பதே எனது அபிலாசை. எனது தந்தை சிறு வயதில் இருந்து இதைத்தான் எனக்கு புகட்டி வந்தார்.

அந்நாட்களில் நான் மட்டுமல்ல என்னுடன் நான்கு சகோதரிகள் என்னைப்போல் அச்சபையில் இருந்து வெளியேறினர். அத்தோடு எமக்கு மாகாணத் தலைவியாக இருந்து எமது நிலைப்பாட்டை புரிந்துகொண்ட அருட்சகோதரி மாற்றலாகி சென்றதனால் எனது நிலைப்பாட்டை அங்கு புரிந்துகொள்ள யாரும் இருக்கவில்லை." என ஆழ்ந்த கவலையுடன் சொன்னார்.

தொடர்ந்து அருட்சகோதரி அவர்கள் தன் வாழ்வின் அடுத்த கட்ட நகர்வுகளைப் பற்றி மிகுந்த ஆர்வத்தோடு பகிர்ந்துகொண்டார்.



"சபையில் இருந்து விலகியபின் என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்திருந்தபொழுது ஆவியானவரின் செயற்பாட்டை அப்பொழுதுதான் உணர்ந்துகொண்டேன். அப்பொழுது கொழும்பு பேராயரை நான் சந்தித்தேன். எனது சபையில் தொடர்ந்து இருக்க என்னால் முடியாமல் உள்ளது என்றும் நான் தொடர்ந்து ஏழைகளுக்குப் பணி செய்ய விரும்புகிறேன் என்றும் அதற்கு என்ன செய்யலாம் என்றும் அவரிடம் கேட்டேன். நீங்கள்தான் எனக்கு நல்ல பதிலைத் தரவேண்டும் என்று சொல்லிவிட்டு அமைதியாக இருந்தேன். அப்பொழுது பேராயர் அவர்கள் 'இனி நீங்கள் இங்கு பணியாற்றுவது என்பது அவ்வளவு நல்லதல்ல. மாறாக உங்களுடைய மறைமாவட்டத்தில் சென்று பணியாற்றுவதே நல்லது" என்று கூறினார். அந்த மறைமாவட்டத்தில் அங்கு இல்லாத சபையை (Non Congrication ) உருவாக்க திருச்சபை சட்டத்தில் இடம் உள்ளது என்று தெரிவித்து மன்னார் ஆயருடன் தொடர்பை ஏற்படுத்திவிட்டார்.

மன்னார் ஆயரிடம் இதைப்பற்றிக் கேட்டு தெரிந்துகொள்வதற்காக 1995 ம் ஆண்டு ஆகஸ்ட் திருநாள் அன்று ஆயரை மடுவில் சந்தித்து எனது நோக்கம்பற்றி கதைத்தேன்.

அப்பொழுது ஆயர் அவர்கள் இந்தக் காலப்பகுதியில் இப்படிப்பட்ட பணியானது இந்த சமூகத்திற்கு மிகவும் தேவை என எனது திட்டத்தைப் புரிந்துகொண்டு என்னை உற்சாகப்படுத்தினார். மடுவில் எங்களுக்கு ஒரு சிறிய கட்டிடத்தை ஒதுக்கித் தந்து மக்களுக்குப் பணியாற்றுங்கள் என்று அன்போடு கூறினார். அன்றுமுதல் 1996 ஜனவரி தொடக்கம் நான் மடுவில் பணியாற்ற ஆரம்பித்தேன். ஆரம்பத்தில் நான் 9 பிள்ளைகளை வளர்த்தேன். இது புனித பிரான்சிஸ் அசிசியாரின் 2வது சபையாகும்.

இந்த சபையை உருவாக்கக் காரணம் என்ன என்று வினாவியபோது "வறிய மக்களுக்கு சேவை செய்வதுதான்" என்று குறிப்பிட்டார். நீங்கள் சேவையாற்றுகின்ற இந்த சபையின் அருங்கொடைகள் (Charisam) என்ன என்று வினவினேன்.

"எமது சபையின் ஸ்தாபகருடைய நோக்கம் தங்களிற்கு கிறிஸ்துவின் மனநிலையை எம்மிலும் பிறரிலும் உருவாக்கி இறையரசின் மதிப்பீடுகளை ஒவ்வொரு மனிதனிலும் கட்டியெழுப்பி சமாதானத்தை உருவாக்குதல் என்ற ஆழமான சொற்களை தன்னகத்தே கொண்டு வாழ்ந்த ஒரு மாபெரும் புனிதர். இந்த பணியை செய்வதற்கு முதலில் நான் கிறீஸ்துவுக்கு பிரமாணிக்கமாக வாழ வேண்டும். பின்பு பிறருக்கு வழிகாட்டியாக அமைய வேண்டும். புனித பிரான்சிஸ் அசிசியாரின் வாழ்க்கையில் இருந்து இறையரசின் மதிப்பீடு என்று சொல்கின்றபோது அதில் பல விடயம் அடங்கும் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும். எனக் கூறினார்.

சரி, இறையரசின் மதிப்பீட்டில் உங்கள் எதிர்கால பணித்திட்டங்கள் என்ன ? தற்போது நீங்கள் ஈடுபட்டுள்ள



பணிகள் எவையென்று கூறமுடியுமா என கேட்டபோது சகோதரி அவர்கள் வசதியாக அமர்ந்துகொண்டு தனது செயற்பாடுகளை - பணித்திட்டங்களை விபரிக்கத் தொடங்கினார்.

"இந்த அழகிய வயலும் வயல் சார்ந்த இடத்தில் நாங்கள் ஆயருக்குரிய காணிப்பகுதியில் உள்ள வீட்டில் மடம் அமைத்து வாழ்ந்து வருகின்றோம். இக்கிராமத்தில் உள்ள அன்பியங்களை ஊக்கப்படுத்தி வருகின்றோம், முதல்நன்மைக்கு பிள்ளைகளை ஆயத்தப்படுத்துதல், உறுதிப்பூசுதல் திருவருட்சாதனத்திற்கு பிள்ளைகளை ஆயத்தப்படுத்துதல், திருமணம் முடிக்கப்போகும் இளைஞர்களுக்கு திருமண வகுப்புக்கள் எடுத்தல், வேறு வேறு மதத்தில் உள்ளவர்களுக்கு வகுப்புக்கள் எடுத்து கைப்பிடித்து விடுதல், முதியோர் மறைக்கல்வி போன்றவற்றில் தீவிர முயற்சியெடுத்து வருகின்றோம்.

நாங்கள் மடுவில் இருந்தபொழுது 1999ம் ஆண்டு இடம்பெயர்ந்து வந்த மக்கள் மத்தியில் விதவைகள் அதிகம் இருந்தனர். ஆகவே அங்கு விதவைகள் இனம் காணப்பட்டு அவர்களுக்கு தையல் பயிற்சியினை நானும் என்னோடு இருந்து பணியாற்றுகின்ற அருட்சகோதரி குமுதினி அவர்களும் வழங்கினோம். அக்காலத்தில் அங்கு வாழ்ந்த மக்களுக்கு முதியோர் மறைக்கல்வி போன்றவற்றைப் புகட்டினோம். ஆகவே நாங்கள் இதுதான் எங்களுடைய பணி என்றில்லாமல் தேவைக்கேற்ப தங்களை மாற்றி சேவையாற்றி வருகின்றோம்.

அடுத்து உங்களுடைய முதல் வாக்குத்தத்தம் நித்திய வாக்குத்தத்தம் போன்ற உங்களுடைய நிகழ்வுகளையும் உங்களுடைய அனுபவங்களையும் சற்று விளக்கமாக கூறுங்கள்.

நான் முதல் வாக்குத்தத்தத்தை 1988ம் ஆண்டு ஆனி 25 இல் பிரான்சிஸ்கன் மிஷனரி மேரி என்ற சபையில் உறுதிப்படுத்தினேன்.

தொடர்ந்து நான் சபையில் இருந்து 1995 விலகிய காலப்பகுதி தொடக்கம் எமது மதிப்பிற்கு உரிய ஆயர் அவர்களிடம் ஒவ்வொரு வருடமும் எனது வாக்குத்தத்தத்தை புதுப்பித்துக்கொண்டு வந்து நித்திய வாக்குத்தத்தத்தை 29ம் திகதி வைகாசி 2004 ம் ஆண்டு வட்டக்கண்டலில் உறுதிப்படுத்தினேன். அன்றைய தினம் என்னோடு பணியாற்றி பயிற்சிபெற்ற குமுதினி அவர்களும் தனது முதல் வாக்குத்தத்தத்தை பெற்றுக்கொண்டார்கள்.

அருட்சகோதரியின் உடன் உழைப்பாளரான அருட்சகோதரி குமுதினி பற்றி குறிப்பிடுகையில், "1996 இல் ஜனவரியில்தான் அருட்சகோதரி குமுதினி அவர்கள் என்னோடு சேர்ந்துகொண்டார். முன்பு யாழ்ப்பாணத்தில் ஆசிரியராக இருந்து மடுவிற்கு இடம்பெயர்ந்து வந்தபோது என்னுடன் சேர்ந்துகொண்டார். "பின்பு பிரச்சனை எல்லாம் முடிந்த பிறகு எல்லாரும் வீடுகளுக்கு செல்ல குமுதினி மட்டும் 'சிஸ்ரர் நான் உங்களோடு இருந்து பணியாற்ற, வேலைசெய்ய ஆசப்படுறன்' என்று சொல்லி தன்னுடைய விருப்பத்தை தெரிவித்தார்.

அருட்சகோதரி ரூபராணிக்கும் அருட்சகோதரி குமுதினிக்கும் நன்றி சொல்லிவிட்டு நிறைந்த மனதுடன் வெளியே வந்தேன்.



செபக்குழுக்கள்.......... செபக்குழுக்கள்....... செபக்குழுக்கள்.......... செபக்குழுக்கள்.......... செபக்குழுக்கள்

# திருச்சபைக்கு கடவுள் கொடுத்த கொடை
# செபக்குழுக்கள்




## செபக் குழுக்களின் செயற்பாடுகள் குறித்த ஓர் கண்ணோட்டம்

**திருத்தந்தை அவர்கள் கத்தோலிக்க அருங்கொடைப் புதுப்பித்தலின் முக்கியத்துவத்தையும், குறிப்பாக பொருளாதார மயமாக்குதல் மற்றும் உலகமயமாக்குதல் ஆகியவற்றுக்கு எதிரான இச்செபக்குழுக்களின் போராட்டத்தையும் நன்குணர்ந்தே இவற்றை அங்கீகரித்திருக்கிறார்.**

திருச்சபையில் அருங்கொடைப் புதுப்பித்தல் (Charismatic Renewal) ஆரம்பமானதிலிருந்து உலகமெங்குமுள்ள பல்லாயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் ஆலயப் பங்குகளின் அடிப்படையில் வாரம்தோறும் செபக்குழுக்களாகக் கூடிவருகின்றனர். இவர்கள் கடவுளைப் புகழவும், ஆராதிக்கவும், அவருடைய வார்த்தைகளைக் கேட்கவும், அவரிடம் பரிந்துரை செய்யவும், 'பொது நன்மைகளான' ஆவியின் கொடைகளைப் பெறுவதற்கான பயிற்சியில் ஈடுபடவும் வந்து கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்டதான செபக்குழுக்கள் நம் திருச்சபைக்கு மிகப்பெரும் மதிப்பாக - சக்தியாக இருப்பதனை நிரூபித்து வருகின்றன.

இவைகளைக் குறித்து நம் திருத்தந்தை 1999ல் ஆசிய திருச்சபைக்கு வழங்கிய உரையில் தனது அப்போஸ்தலிக்க அறிவுரையாக இவ்விதம் குறிப்பிடுகிறார். "இது ஆவியின் ஒரு கொடையாகும். இது பொதுநிலையினரான ஆண்கள், பெண்கள் குடும்பத்தினர் மற்றும் இளையோருக்கு புதுவாழ்வையும் ஆற்றலையும் அமைத்துத் தருகிறது."


இதேபோன்று, அனேக வேளைகளில் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் மற்றும் அவருக்கு முந்திய திருத்தந்தை ஆறாம் சின்னப்பர் ஆகியோர், கத்தோலிக்க அருங்கொடை புதுப்பித்தலின் மிகமிக முக்கியமான இரண்டு பணிகளைச் சுட்டிக்காட்டுகின்றனர். வாரம் தோறும் செபக்கூட்டங்களை நடத்துதல் மற்றும் மக்களை "ஆவிக்குள்ளாய் திருமுழுக்கு" என்ற அனுபவத்தில் நடத்திச் செல்லுதல் ஆகியவைகள் திருச்சபையின் புதுப்பித்தலில் மிகவும் ஆற்றல் வாய்ந்தது என்று மிகவும் உறுதிபட தங்கள் எண்ணத்தினை அழுத்தமாக தெரிவித்திருக்கிறார்கள்.

ஒவ்வொரு வாரமும் எண்ணற்ற கத்தோலிக்கர்கள் உலகம் முழுவதும் செபக்கூட்டங்களில் கலந்துகொள்வதைக் குறித்து



கற்பனை செய்து பார்ப்போம். 100 மில்லியன் (10 கோடி) அல்லது 1 பில்லியன் (1000 மில்லியன்) மொத்த கத்தோலிக்க மக்கள் தொகையில் பத்து சதவீதம் பேர் இச்செபக்குழுக்களில் உள்ளனர் என்று கணக்கிட்டுக் கொள்வோம்! கிராமங்கள், நகரங்கள், பெரு நகரங்கள் மற்றும் ஆறு கண்டங்களில் உள்ள நாடுகளில் அமைந்துள்ள டசின் கணக்கான, நூற்றுக்கணக்கான, மற்றும் ஆயிரக்கணக்கான உறுப்பினர்களைக் கொண்ட ஒவ்வொரு செபக்குழுக்களும் கடவுளின் சந்நிதியின்முன் எழுப்புகின்ற இறைபுகழ்ச்சி, வழிபாடு ஆராதனை, நன்றிப்புகழ்ச்சி மற்றும் பரிந்துரை செபங்களும் இவற்றிலுள்ள இதயம் நிறைந்த ஆண்டவருக்கு பயந்த உண்மையான பக்தி, பரவசம், நன்றிகள் அனைத்தும் "விலையேறப்பெற்ற வியப்புக்குரிய இறைவனுக்குத்தானே" என்பதனைக் கற்பனை செய்து பாருங்களேன்! முக்கியமான வழிமுறைகள், தினசரி தியான இல்லங்களில் அவசியமாய் கலந்துகொள்ளல் போன்ற பக்தி முயற்சிகளில் ஈடுபடும் பிற கத்தோலிக்கர்களும்கூட (மற்றும் கத்தோலிக்கரல்லாதவர்களின் வழிபாடுகளும், நல்லெண்ணம் கொண்ட அனைத்து கபடமில்லாத ஆண்களும், பெண்களும்கூட) அருங்கொடை செபக்குழுக்களால் திருவெளிப்பாடு புத்தகத்தின் பரவசக் காட்சிகளை நிறைவாய் பெற்றுக்கொள்ள முடியும்.

"அந்த நான்கு உயிர்களும், இருபத்து நான்கு மூப்பர்களும் புடைசூழ, அரியணை நடுவில் ஆட்டுக்குட்டி ஒன்று நிற்கக் கண்டேன். கொல்லப்பட்டதுபோல் அது காணப்பட்டது. அரியனையைச் சுற்றி அனேக வானதூதர்களின் சத்தத்தைக் கேட்டேன். அவைகள் எண்ணிக்கையில் அதிக அதிகமாயும், ஆயிரமாயிரமாயும் இருந்து தங்களது முழுத் தொனியில் உரத்த சத்தமாய் கொல்லப்பட்ட ஆட்டுக்குட்டி வல்லமையும், செல்வமும், ஞானமும், ஆற்றலும், மாண்பும், பெருமையும், புகழ்ச்சியும் பெறத்தகுதி பெற்றது என்று பாடிக்கொண்டிருந்தார்கள்.



பின்பு விண்ணுலகு, மண்ணுலகு, படைகள் அனைத்தும் அவற்றிலிருந்த ஒவ்வொன்றும் அரியணையில் வீற்றிருப்பவருக்கும், ஆட்டுக்குட்டிக்கும், புகழ்ச்சியும், மாண்பும், பெருமையும், ஆற்றலும் என்றென்றும் உரியன என்று பாடக்கேட்டேன்" (தி வெ.5:6-14)

தினமும் வாரந்தோறும் தவறாமல் செபிப்பது கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் வாழ்க்கையில் ஒரு பகுதியாகும். ஏனெனில் ஆவியானவர் நம்மோடு வாசம்செய்யும்பொழுது நாம் செபிக்கும் வீரனாகவும், வீராங்கனையாகவும் மாறிவிடுகிறோம். திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் அவர்களின் கூற்றுப்படி தூய ஆவியின் முதல் பணியே நமக்குள் செப உணர்வை ஏற்படுத்துவதும், நமக்கு (கத்தோலிக்கர் மற்றும் கத்தோலிக்கரல்லாதவர்க்கும் செபிக்க கற்றுக் கொடுப்பதும்தான். கிறிஸ்தவ வாழ்வின் சுவாசமே தூய ஆவியானவர்தான். இந்த தூய ஆவிக்குள்ளான வாழ்வு சாதாரணமாக எல்லா வேளைகளிலும், செபத்திலும் தம்மையே வெளிப்படுத்துவதிலும், உருவாக்குவதிலும்தான் உள்ளது. இது ஒரு அழகான நற்பலன்களை விளைவிக்கும் ஒரு சிந்தனையாகும். உலகில் எங்கெல்லாம் மக்கள் செபித்துக்கொண்டிருகிறார்களோ, அங்கெல்லாம் செபத்தின் உயிர் சுவாசமாக தூய ஆவியானவர் இருக்கிறார். இக்கருத்தை திருத்தந்தை அவர்கள் அருங்கொடை செபக்குழுக்களுக்காக விசேஷமாக குறிப்பிட்டுள்ளார்.

பரிந்துரை செபமும்கூட மனித வாழ்க்கைக்கு மிகவும் உடனடித் தேவையாகவும், பணியாகவும் இருக்கிறது. எனவேதான் இது திருச்சபைக்கு ஒரு அருங்கொடையாக இருக்கிறது. வேத நூல்களிலும், காதலூப் நகர், லூர்து நகர், பாத்திமா நகர் போன்ற இடங்களில் மாதா காட்சியளித்த நிகழ்ச்சிகளிலும், புனிதர்களின் நூல்களிலும் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வேண்டுவது செபம், மேலும் செபம், உபவாசத்துடன் கூடிய செபம் என்பதைத்தான்.

தூய ஆவியானவர், திருச்சபையின் துவக்க காலத்தில் நம் முன்னோர்கள் கடைப்பிடித்து வந்த நடைமுறைகளான - இரவு விழிப்புச் செபங்கள் நடத்த, பரிந்துரை செப இல்லங்களை மீண்டுமாக கட்டியெழுப்ப, அருங்கொடை செபக்குழுக்களை தலைமையேற்று வழி நடத்த ஊக்கம் ஊட்டி வருகின்றார்.


இவைகள் கடவுள் நமக்கு அந்நியரும், தூரமானவரும் இல்லை என்பதையும் அவருடைய மக்களுக்கு அவர் மிகவும் நெருக்கமானவராக உள்ளார் என்பதையும் வெளிப்படுத்தி நிற்கிறது. அத்துடன் திருச்சபைக்கும், மனித வாழ்க்கைக்கும் செபம் எவ்வளவு தேவையாயிருக்கிறது என்பதை இச்செபக்குழுக்கள் நிரூபித்து நிற்கின்றன.

திருத்தந்தை அவர்கள் கத்தோலிக்க அருங்கொடைப் புதுப்பித்தலின் முக்கியத்துவத்தையும், குறிப்பாக பொருளாதார மயமாக்குதல் மற்றும் உலகமயமாக்குதல் ஆகியவற்றுக்கு எதிரான இச்செபக்குழுக்களின் போராட்டத்தை நன்குணர்ந்தே இவற்றை அங்கீகரித்திருக்கிறார்.

செபக்குழுக்கள் மற்றும் வாரந்தோறும் நடைபெறும் செபக்கூட்டங்களின் மற்றுமொரு மிக முக்கியமான நன்மை என்னவெனில் இறைவார்த்தைக்கு அங்கு வழங்கப்படும் முக்கியத்துவமாகும். மக்களை பல்வேறு இறைநூல்களை சத்தமாக படிக்கச் செய்வதன் மூலம் - வேதத்திலிருந்து கடவுளின் வார்த்தைகளை தவறாமல் கேட்கச் செய்வதன் மூலம் - மற்றும் வேதத்தின் கருத்துக்களை எடுத்து விளக்குவதன் மூலம் - இன்நன்மை விளைவிக்கப்படுகிறது. ஆவியானவரின் அருட்கொடைகளை எடுத்துச் சொல்லுதல், நற்செய்தி அறிவித்தல் ஆகிய பயிற்சிகளின் மூலம் கடவுளுடைய மாட்சிமைக்கு நற்சான்று அளிக்கப்படுகிறது. நவீன கால மக்களின் வாழ்க்கைக்கு பரிந்துரை செபம் செய்வதன் மூலமும் இச்செபக்குழுக்கள் திருச்சபைக்கு பல நன்மைகளை செய்கின்றன.

கடவுளின் வார்த்தை மூன்று செயல்களைக் கொண்டுள்ளது அவைகளாவன புதுப் படைப்பாக மாற்றுதல், ஊக்கமூட்டுதல், போதித்தல் என்பனவாகும். இவை மூன்றும் நல்ல செபக்குழுக்களை அழகுற நிறைவுறச் செய்கின்றன. *புதுப்படைப்பாகுதல்* என்பதைக் குறித்த கடவுளின் வார்த்தை என்னவெனில், அது ஒருவனிடம் பொறுப்புணர்வை எதிர்பார்க்கிறது. மேலும் புதுவாழ்வில் சிறந்த சாட்சியாக வாழ்வதற்கு அவனுடைய வாழ்க்கை முறையில் உடனடி மாற்றம்பெற சவால்விடுகிறது. (உதாரணம்: தேவையற்ற மற்றும் பீரோ நிறைய உள்ள பயன்படுத்தாத உடைகள் ஆகியவற்றை ஏழைகளுக்கு முறை வைத்து வழங்குவது, அல்லது மனித நேயம் மிக்க தரமிகு வாழ்க்கை வாழ நம்மை அழைக்கின்ற புதுவாழ்வு இயக்கங்கள் போன்ற பிற சமூக இயக்கங்களுடன் இணைவது) *ஊக்கமூட்டுதல்* என்னும் கடவுளின் வார்த்தையானது, கஷ்டத்துடனும், மன அழுத்தத்துடனும் இருக்கும் ஒரு மனிதனுக்கு ஆறுதலையும், சுகத்தையும் அளிக்கிறது. (என்னுடைய வார்த்தைகள் ஆவியும் உயிருமாயிருக்கிறது என்று யோவா. 6: 63ல் இயேசு சொன்னது போன்று) *போதித்தல்* என்பது ஆவிக்குரிய காரியங்கள் மூலமாக ஆவியானவர் எதனை வெளிப்படுத்துகிறார் என்பதனையும் (ஒருவனுக்கு நேரடியாகவும், திருச்சபையின் குருக்கள், வத்திக்கான் சங்கம் மற்றும் பாப்பரசரின் சுற்று மடல்களின் மூலமாகவும்) கடவுளுடைய திருவுளத்தை அறியக்கூடிய ஞானத்தைப்பற்றியும், தினசரி வாழ்க்கைச் சூழலில் கிறிஸ்துவை எவ்வாறு பின்பற்றுவது என்பது பற்றியும் தெளிவுபடுத்துவதாகும். என் காலடிக்கு உம் வாக்கே விளக்கு என் பாதைக்கு ஒளியும் அதுவே (திபா 119 : 105).

அருங்கொடை செபக்குழுக்களில் சகோதர நட்புறவு என்னும்



மாபெரும் பண்பு நிறைந்துள்ளது. திருச்சபையை விட்டு வெளியேறி பிறசபைகளில் சேரும் மக்கள் அடிக்கடி சொல்வது நம் கத்தோலிக்க ஆலயப் பங்குகளில் நாங்கள் நட்புறவு அனுபவங்களை உணர்ந்ததில்லையென்றும், கடவுளுடைய வார்த்தைகள் போதுமான அளவு கிடைக்கப் பெறவில்லை என்பதுமாகும். நல்ல அருங்கொடை செபக்குழுக்களில் தங்களை இணைத்துக்கொண்ட கத்தோலிக்கர்களின் அனுபவங்கள் இதற்கு நேரெதிராக, மிகவும் சந்தோஷமாக அமைந்திருக்கிறது. இந்த 35 ஆண்டுகளின் அருங்கொடை புதுப்பித்தல் (Charismatic Renewal) செபக்குழுக்கள் மிகவும் விரிவாக வளர்ந்தும், மிகவும் நல்ல கனிகளை அதிகமாக தன்னகத்தே கொண்டிருப்பதற்கும் காரணம்- இதுவே.

எல்லா செபக்குழுக்களிலும் இந்த முக்கிய பங்களிக்கும் குழுக்கள் (அருங்கொடைகள் பெற்றவை) மிக முக்கிய பணியாற்ற முடியும்.

கடவுளின் மாபெரும் ஆவியின் வல்லமை செபக்குழுக்களிலும், செபக் கூட்டங்களிலும் மோசமான தலைமைப் பொறுப்புகளினால் பெரிதும் குறைந்து வருவதையும், மிகவும் சீர்குலைந்து வருவதைப் பற்றியும் மேற்குறிப்பிட்ட புத்தகத்தில் நான் குறிப்பிட்டிருப்பது, அனைத்தும் நல்லவையாக மாற வேண்டும் என்பதற்காகவே, ஏனெனில் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக தேசிய பணிக்குழு நல்ல தலைவர்களை உருவாக்குவதற்காக அனேக திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தியிருக்கிறது. வரும் மாதங்களிலும், வருடங்களிலும்கூட இப்படிப்பட்டதான காரியங்கள் தொடரும். எனவே திருச்சபையின் நம்பிக்கைகள் பற்றியதான கத்தோலிக்க அருங்கொடைப் புதுப்பித்தலானது மக்களிடையே தெளிவாக நிறைவேற்றப்படுவதோடு அவர்களின் வழிகளை வசப்படுத்தும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து என்றென்றும் போற்றப்பெறுவாராக. (நன்றி: தூய ஆவியில் புதுவாழ்வு)

# திருமறைப்பணி நிலையச் செய்தி மடல்

## மறைக்கல்வி கல்வி விவிலியப் பணிகள்

## மறையாசிரியர்களுக்கான நான்கு மாத வதிவிடப்பயிற்சி நிறைவு

## சான்றிதழ் வழங்கும் விழா – சிறப்பிதழ்



















நீங்கள் கனிதர... உங்களை ஏற்படுத்தினேன். (யோ. 15:16)




பயிற்சியில் பங்கெடுத்த மறையாசிரியர்கள்





# மறையாசிரியர் வதிவிடப்பயிற்சியின் உள்ளடக்கம்

## ஓர் பார்வை

மறைக்கல்விப் பணியின் முக்கியமான ஒரு பணித்திட்டமாக மறையாசிரியருக்கான பயிற்சி அமைந்து வந்துள்ளது. ஏற்கெனவே மன்னார் மறைமாவட்டத்தில் ஒரு சில தடவைகள் வதிவிடப்பயிற்சி நெறிகள் நடைபெற்றவையாயினும் நாட்டின் சூழ்நிலை காரணமாக ஒரு மாதப் பயிற்சியாகவே அவை அமைந்திருந்தன. சில ஆண்டு இடைவெளியின்பின் பலருடைய வேண்டுகோளின் அடிப்படையில் எமது மறைக்கல்வி நிலைய பணித்திட்டத்தின் முக்கிய பணியாக மறையாசிரியருக்கான வதிவிடப் பயிற்சியை முதன்மைப்படுத்தி இவ்வாண்டு ஜனவரியில் நடந்த மறைமாவட்ட மேய்ப்புப்பணி மாநாட்டில் நாம் அறிக்கை சமர்ப்பித்திருந்தோம்.

அதன்படி மன்னார் மறைமாவட்ட மறையாசிரியர்களுக்கான வதிவிடப் பயிற்சி எமது மறைக்கல்வி நிலையத்தில் இவ்வாண்டு பெப்ரவரி மாதம் 2ந் திகதி தொடக்கம் ஜூன் மாதம் 1ந் திகதிவரை சரியாக 4 மாதங்கள் இடம்பெற்றது. மறைமாவட்டத்தின் பல்வேறு பங்குகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மறையாசிரியர்கள் இப்பயிற்சியில் பங்கெடுத்தனர். க. பொ. சாதாரண தரம், க. பொ. உயர் தரம் ஆகிய கல்வித் தகமைகளோடு இவ்வாண்டு இவர்கள் இப்பயிற்சிக்காக அனுமதிக்கப்பட்டனர்.

30 மறையாசிரியர்கள் இந்த நான்கு மாதப் பயிற்சிநெறியில் பங்கேற்று பயன் அடைந்தனர். சுமார் 30 குருக்களும் 3 அருட்சகோதரிகளும் 10 பொதுநிலையினரும் இப்பயிற்சி நெறியில் பாடங்களைக் கற்பித்தும் இன்னும் பல்வேறு வழிகளில் தமது மேலான பங்களிப்பை வழங்கியிருந்தனர்.

### அறிவுசார் உருவாக்கம்(Academic Formation)

அறிவுசார் உருவாக்கத்தில் முக்கியமாக திருவிவிலியம், இறையியல் ஆகியன கற்பிக்கப்பட்டன. திருவிவிலியத்தின் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு ஆகியவற்றில் உள்ள அனைத்து நூல்களும் கற்பிக்கப்பட்டன. திருவழிபாடு அருட்சாதனங்கள் திருச்சபை வரலாறு, திருச்சபையின் மறைக்கொள்கைகள் உட்பட பல இறையியல் பாடங்கள் கற்பிக்கப்பட்டன. மாறிவரும் இறையியல் சிந்தனைகளும் இவர்களுக்கு வழங்கப்பட்டன. தனித்தனியாக நோக்கினால் ஏறக்குறைய 40 பாடங்களை இவர்கள் படித்து அவற்றுள் 26 பாடங்களுக்கு பரீட்சைகளைச் செய்துள்ளனர்.

இதைவிட பாடஆயத்தம், கற்பித்தல் முறைகள் பற்றிய வகுப்புக்கள் நடாத்தப்பட்டு கற்பித்தல் செயன்முறை தேர்வும் நடாத்தப்பட்டது. பாடங்களுக்கான தேர்வில் 2 பேர் விசேட சித்தியும் 25 பேர் திறமைச் சித்தியும் 3பேர் சாதாரண சித்தியும் பெற்றுள்ளனர். கற்பித்தல் முறைத்தேர்வில் 4பேர் விசேட சித்தியும் 26பேர் திறமைச் சித்தியும் பெற்றுள்ளனர்.

இப்பாடங்கள் வெறுமனே வகுப்பறைக் கல்வியாக மட்டும் இல்லாமல் நடைமுறை வாழ்வோடும் - பணிவாழ்வோடும் இணைத்துக் கொடுக்க முயற்சிக்கப்பட்டது. இப்படியாக அறிவுசார் உருவாக்கம் என்பது வெறும் ஏட்டுக்கல்வியாக மட்டும் அல்லாது வாழ்வுக்கல்வியாக அமைய முயற்சி எடுக்கப்பட்டது.

### ஆன்மீக உருவாக்கம (Spiritual Formation)

எமது இந்த வதிவிடப் பயிற்சியில் ஆன்மீக உருவாக்கத்திற்கு நாம் கூடியளவு முக்கியத்துவம் கொடுக்க முயற்சி எடுத்தோம். திருப்பலி, காலை மாலைச் செபங்கள் செபமாலை போன்ற நாளாந்த ஆன்மீகப் பயிற்சிகளோடு இறைவார்த்தை, செப அனுபவம் ஆகியவற்றை மையமாகக்கொண்ட பல்வேறு தியானங்கள், உரைகள் ஆன்மீகப் பயிற்சிகளின் ஊடாக இம்மறையாசிரியர்களை வழிநடத்த முயற்சித்தோம். ஆன்மீக உருவாக்கத்தில் அருட்தந்தை கிறிஸ்ரியன் வாஸ் அடிகளாரின் மேலான பங்களிப்பு எமக்கு அதிக உற்சாகத்தை அளிப்பதாக இருந்தது. பயிற்சி நெறியில் பங்கெடுத்த மறையாசிரியர்களுக்கு புதுப்பித்தல் உரைகள் எட்டையும் வாரா வாரம் வழங்கி கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படை உண்மைகள் - அதன் தன்மைகள் புரியவைக்கப்பட்டு வாழ்வாக்கப்பட்டது. இறுதியில் தோட்டவெளியில் நடைபெற்ற அர்ப்பண வழிபாட்டில் பங்கெடுத்து இவர்கள் அனைவரும் அர்ப்பணம் செய்துகொண்டனர். இப்பயிற்சிக் காலத்தில் இவர்கள் செப அனுபவம் இறைவார்த்தை அனுபவம் பெற மூத்த மறையாசிரியர்கள் ஊடாக உதவிகள் வழங்கப்பட்டன.

### உளவியல் மற்றும் சமூக உருவாக்கம்

உளவியல் உருவாக்கத்தில் அருட்சகோதரி கிறிஸ்ரபெல் அவர்களும் அவரோடு இணைந்த குழுவினரும் உளவியல் மற்றும் ஆற்றுப்படுத்தல் ஆகிய துறைகளை உள்ளடக்கி 5 நாட்களைக் கொண்ட முழுநாள் பயிற்சியை அளித்தார்கள்.

(தொடர்ச்சி 13ம் பக்கம்)

# புதிய சாதனைகளை நோக்கிய பயணம்.....!

## புனித சவேரியார் ஆண்கள் தேசிய கல்லூரி

### சிகரங்களை நோக்கிய சின்னச் சின்ன காலடிகள்

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியானது மன்னார் மாவட்டத்தின் ஒரேயொரு ஆண்கள் பாடசாலையாக திகழ்ந்து பல சாதனைகளை புரிந்து வருகிறது. இந்த நடப்பாண்டு 2004இல் 1ம் தவணையில் நடைபெற்ற சில முக்கிய



சிறப்பம்சங்களை எம் அபிமான பத்திரிகையாகிய மன்னாவில் பதிவு செய்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

அதில் முதலாவதாக இப்பாடசாலையின் இவ்வருடத்திற்கான இல்ல விளையாட்டுப் போட்டி 11.02.2004 அன்று வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வினை சிறப்பிக்க



பிரதம விருந்தினராக ஆசிய உதைபந்தாட்ட சம்மேளன உபதலைவரும் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன முகாமைத்துவகுழுத் தலைவருமான திரு. மணிலால் பெர்னாண்டோ அவர்களும் கௌரவ விருந்தினராக மடு



வலயக்கல்விப் பணிப்பாளர் திரு. எ. து. குருஸ் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக இலங்கை உதைப்ந்தாட்ட சம்மேளனத் தலைவரும் பிரதி பொலிஸ்மா அதிபருமான திரு. பு. றண்டெனி அவர்களும், பாகிஸ்தான் டிலாசால் உயர்கல்வி பாடசாலை அதிபரான அருட்சகோதரர் கிறிஸ்ரி டோறஸ் அவர்களும், மன்னார் உதவிக்கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) திருமதி. எ. ஆரோக்கியநாதன் அவர்களும் பெற்றோர், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் பெருந்திரளாக கலந்துகொண்டு சிறப்பித்திருந்தனர்.

அடுத்து 8.3.2004 அன்று உயர்தர மாணவர் ஒன்றிய




விருந்துபசார வைபவம் உயர்தர மாணவர்களினால் சிறப்பாக கொண்டாடப்பட்டது இந்நிகழ்வினை சிறப்பிக்க பிரதம விருந்தினராக மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர் திரு. எம். ஏ. றெவ்வல் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக மன்னார்

கல்லூரியின் நலன்நாடி நிற்கும் எமது ஆயர் பெருந்தகை அவர்கள்!



பங்குத்தந்தை அருட்தந்தை எமிலியானுஸ்பிள்ளை அவர்களும், மன்னார் உதவிக்கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) திரு. எவ். மரியதாஸ் அவர்களும் மன்னார் தொலைத்தொடர்பு முகாமையாளர் திரு ஜி. நிதர்சன் அவர்களும் ஏனைய பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரும்கலந்து சிறப்பித்தனர்.

இவ்வருடம் உயர்தர மாணவர் ஒன்றியத்தினால் வெளியிடப்படும் அறிவுச்சுடர் சஞ்சிகைக்குப் பதிலாக குறுவட்டு (CD) வெளியீடு



"புயலாகும் புதுத்தட்டு" என்ற பெயருடன் பாடசாலை சார்ந்த தகவல்கள் அடங்கியதாக வெளியிடப்பட்டது. இவ்வெளியீட்டை மன்னர் உதவிக்கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்) திரு எஸ். ரி. பீரிஸ் அவர்கள் ஆய்வுசெய்து வடக்குக் கிழக்கு பாடசாலைகளில் முதன்முதலாக இக்குறுந்தகடு இங்கே வெளியிடப்பட்டது ஒரு சாதனை என கூறினார். இதற்கு முன்னின்று உழைத்த மாணவர்கள் செல்வன் எம். அனுறாஜன், செல்வன் பி. ஜொணாத்தன் பிரதாப், செல்வன். எஸ். சி. டிக்சன், செல்வன். டீ. தினேஸ், செல்வன். எஸ். சுகிர்தறாஜன், செல்வன். எஸ். பிராங்கிலன் பீரிஸ், செல்வன். எம். தேவசங்கர் என்பவர்கள் பாராட்டுக்குரியவர்கள்.



அடுத்து எமது பாடசாலைக்கென ஒரு இணையத்தளத்தை உருவாக்கி இதற்கென ஒரு இணையத்தள முகவரி ஒன்றும் வெளியிடப்பட்டது. இதை செல்வன் கே.எம். ரூபறாஜன் முன்னின்று வெளியிட்டமை ஒரு முக்கிய சாதனையாகும்.



அடுத்து எமது பாடசாலைக்கென வசதி வாய்ப்புகள் அற்ற ஒரு சிற்றுண்டிச்சாலையே நீண்ட காலமாக இயங்கி வந்தது. ஆனால் தற்போது ஒரு அழகான சகல வசதிகளையும் கொண்ட ஒரு சிற்றுண்டிச்சாலை ஒன்று பழைய மாணவர்கள் திரு. அலெக்ஸ் சாந்தக்குமார், திரு. எஸ். மைக்கல் என்பவர்களின் அன்பளிப்பின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

### மீண்டும் அதிபர் பணியில் அமரும் அருட்சகோதரர் ஸ்ரனி



அருட்சகோதரர் ஜெ. ஸ்ரனிஸ்லாஸ் அவர்கள் பட்டபின் படிப்பு கல்வி முகாமைத்துவ கற்கை நெறியை (PGDEM) முடித்துக் கொண்டு மீண்டும் எமது பாடசாலைக்கு அதிபராக பொறுப்பேற்றுள்ளார். அவருக்கு மன்னா சார்பாக வாழ்த்துக்களையும் பாராட்டுக் களையும் தெரிவித்துக்கொள் கிறோம்.

### அருட்சகோ. றெஜினோல்ட்



கடந்த ஒரு வருட காலமாக தற்காலிக அதிபராக இருந்த அருட்சகோதரர் றெஜினோல்ட் அவர்களுக்கு எமது வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறோம்.




இச்சிற்றுண்டிச்சாலையை வைபவ ரீதியாக திறந்து வைப்பதற்கு திரு. அலெக்ஸ் சாந்தக்குமாரின் பெற்றோர் திரு. திருமதி. தனபாலசிங்கம் அவர்கள் பிரதம விருந்தினர்களாக அழைக்கப்பட்டிருந்தனர். இந்நிகழ்வினை சிறப்பிக்க சிறப்பு விருந்தினராக பழைய மாணவனும் இலங்கை வங்கி முகாமையாளருமான திரு. து. மைக்கல் மரியநாயகம் அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.



எமது பாடசாலைக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் உதவி செய்து வரும் எமது ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களும் அருட்தந்தையர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச்சபை உறுப்பினர்கள், நலன்விரும்பிகள் யாவருக்கும் நன்றிகளை



தெரிவித்து நிற்கின்றோம்.

இறுதியாக பாடசாலையின் வளர்ச்சிக்கு நேரடியாக உழைத்து வரும் அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் பாராட்டுக்களைத் தெரிவித்து நிற்கின்றோம். தொடர்ந்தும் பாடசாலையின் வளர்ச்சிக்காக உதவும் அனைவரையும் இறைவன் ஆசீர்வதிக்க வேண்டுமென்று வேண்டி நிற்கின்றோம்.

# அன்பின் கங்கை அன்னை தெரேசா

## விறு விறுப்புத் தொடர் 6

எழுத்துருவாக்கம்
சொல்லின் செல்வன்
இளவாலைஅமுது

### ஆனந்த நகரம்

கல்கத்தாவுக்கு வந்து சிலகாலம் அங்கே வாழ்ந்து, அதன் நாடி நரம்புகளை அறிந்த பிரான்சிய எழுத்தாளர் அந்தப் பட்டினத்தை ஆனந்த நகரம் (City of Joy) என்று குறிப்பிட்டிருக்கிறார். இந்தியாவை ஒரு கண்டம் என்றே சிலர் கூறுகிறார்கள். அங்கே தொண்டு செய்வதானால் எட்டுத் திசைகளிலும் கால் வைக்கலாம்.

ஆயிரக்கணக்கான பட்டினங்களும் பல்லாயிரக் கணக்கான கிராமங்களும் பரந்து செறிந்து கிடக்கின்றன. திரேசா கல்கத்தாவில்தான் கால் வைத்தார். அதன் காரணத்தை அறியக் கல்கத்தாவின் வரலாற்றில் ஒரு துளியையாவது இங்கு தொட்டுக் காட்டாவிட்டால் இந்நூல் உப்பில்லாப் பண்டம் போல் ஆகிவிடும். கல்கத்தா விரிந்த இடப்பரப்பைக் கொண்ட நகரம். அது ஒரு மாளிகை போன்ற அமைப்பை உடையது என்பர். எளிமையும், பண்பும், நாகரீகமும் மண்ணோடு கூடப்பிறந்தவை. அதனுடைய சுற்றாடல் இனிமையானது. மனித உள்ளங்களுக்குத் தாலாட்டுப் பாடக்கூடியது. பல இனமக்கள், பல மொழிகள், பல்வேறு பண்பாடுகள், வேறுபட்ட சமய வழிபாடுகள் எல்லாம் ஒன்று கலந்த வானவில். ஆச்சரியத்தின் பூச்சொரியும் நகரம் அது. அரசர்கள் காலம் தொடக்கம் இன்று வரை கட்டப்பட்ட கட்டிடங்கள், நெடுஞ்சாலைகள், நந்தவனங்கள், தூக்க மாத்திரை அருந்திய மரங்கள், முடிவெட்டிய புல் வெளிகள் எல்லாம் நகருக்கு அழகூட்டுகின்றன. மேற்குத் திசையில் சிவப்பு விழி பிதுங்க மரணித்த சூரியனுக்கு நதிகள் இரங்கற் பாக்கள் இசைக்கும். நில வளத்தின் பயனும் அறிவுக் கதிரின் அருவி வெட்டும் தோளிற் கைபோடும். அப்பட்டினத்தின் வறுமையையும் மாசையும் ஒதுக்கி விட்டால், அவர்கள் நட்புரிமையோடு பழகும் பண்பும், கவர்ச்சியும், பழங்குடி மக்களிலிருந்து தொடர்ந்து வரும் கருணையும், விசித்திரமான அறிவாற்றலும் நம்மைப் பிரமிக்கச் செய்யும்.

ஆன்மீகக் குருத்தெறியும் வசனங்கள் - பகிர்ந்து வாழும் அன்பு நெஞ்சங்கள் - நல்லோரிடம் காட்டும் நன்றிப் பிரவாகம் - உயர்ந்தோரிடம் காட்டும் ஒப்பற்ற மரியாதை - பெற்றார் பிள்ளைப் பாசம் - நோயிலே - படுத்த பாயிலே - காட்டும் பரிவு - நாகரீக முகட்டிலே வாழும் மனித குலத்தை நடுங்கச் செய்துவிடும். உண்மையில் இந்த இயல்புகளை நேரே கண்ட ஐரோப்பிய எழுத்தாளர், கல்கத்தாவை ஆனந்த நகரம் என்று விதந்து எழுதியதில் வியப்பில்லை. சேரிகளும் வறுமையும் அந்தப் பட்டினத்தை ஆக்கிரமித்துள்ளன. வேலை இல்லாமை, இலஞ்ச ஊழல், நல்ல வாய்ப்புகள் அருகியிருத்தல் என்பன சமூகத்தை முடமாக்கி விட்டன. சமூகப் பணிக்கு உழைத்த தன்னலம் கருதாத பல தியாகிகளைக் கண்ட பூமி அது. பிரித்தானிய விக்ரோறிய இராணி, இந்தியாவைக் கைப்பற்றிய வெற்றி வீரர்கள் என்போரின் நினைவுச் சின்னங்கள் அங்கே காணக் கிடந்த போதிலும் மக்கள் நெஞ்சத்தில் அவை இடம்பெறவில்லை. இராம கிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், ஸ்ரீ அரவிந்தர் போன்றோர் அந்த நாட்டில் பிறந்தும் பிறவாமலும் வளம் படுத்தியவர்கள். பாரத நாட்டின் புகழை ஏணியில் தூக்கி உயர்த்தியவர்கள் கல்கத்தாவின் மண்ணில் முளைத்த மா மேதைகளே!

தாவர ஆராய்ச்சியில் உலகத் திறமைசாலியாயிருந்த ஜகதீசு சந்திரபோஸ், "வெள்ளையனே வெளியேறு" என்று உரத்துக் கூவிய சுபாஸ் சந்திரபோஸ், பெண்கள் உடன்கட்டை ஏறும் வழக்கத்தை நிறுத்திய மோகன்ராய், "வந்தே மாதரம்" என்ற விடுதலைக் கீதம் இசைத்த பங்கிம் சந்தர், கவிக்குயில் சரோஜினி நாயுடு, அற்புதமான நாவல்களை எழுதிய சரத் சந்திரர், கல்விமான், அறிஞர்திலகம் என்று போற்றப்பெற்ற ஈஸ்வர் சந்திர வித்தியாசாகர், உலகம் புகழும் கவிஞர் இரவீந்திரநாத் தாகூர் என்போர் காலத்தால் அழியாத தாரகைகள்.

வங்க மக்கள் மிகவும் எளிமையானவர்கள். ஆண்களும், பெண்களும் உடுத்தும் உடையிலே ஒரு புனிதமும் எளிமையும் முத்தமிடும். அதில் ஒரு நளினமும் தோன்றும். போலிக் கௌரவம், தற்புகழ்ச்சி, பிறர் துதிபாடல் என்ற தகரைகள் வாழ்வில் படராத பயிர் மணிகளை அங்கே காணலாம். அரசியல் வாதிகளும் அப்படி இருப்பதுதான் ஆச்சரியம். "மனிதர்களை மந்திரிகளாக்கலாம், மந்திரிகளைத்தான் மீண்டும் மனிதர்களாக்க முடிவதில்லை." என்று எங்கேயோ வாசித்த ஞாபகம் வருகின்றது. அங்கே உள்ள அரசியல்வாதிகளைப் பிழைக்கத் தெரியாத அரசியல் வாதிகள் என்றார் ஒரு எழுத்தாளர்.

முதல் அமைச்சரைக் காண நேரிட்டால் இவர்தான் முதல் அமைச்சர் என்று தலையில் அடித்துச் சத்தியம் செய்தாலும் நம்ப மாட்டார்கள். அவ்வளவு எளிமையான வாழ்க்கை. அவரும் அப்படி, அவருடைய இல்லமும் அப்படி. வீட்டுக்கு ஒரு புத்தகசாலை. டிப்பின் ஆவல் புத்தகங்களில் கண்ணடிக்கும். கல்கத்தா இந்தியாவின் தலைப்பட்டினமாய் இருந்தபோதே அங்கே சனம் பெருக்கெடுத்தது. 1947 இல் இந்தியா சுதந்திரம் பெற்றதும் கிழக்கு வங்காளம் பிரிந்து போனது. இதனால் இலட்சக் கணக்கான அகதிகள் கல்கத்தாவே சுவர்க்கம் எனத் தஞ்சமடைந்தார்கள்.வெள்ளப்பெருக்கு, பஞ்சம், வரட்சி என்பன காரணமாக அயல் பிரதேசங்களிலிருந்து வருடந்தோறும் வந்து குடியேறுவது, மூழ்கும் கப்பலில் இருந்து எலிகள் புறப்பட்டது போலிருக்கும். வந்து சேரும் அகதிகள் தெரு ஓரங்களிலும், பெரிய கட்டிடங்களின் தாழ்வாரங்களிலும், மூங்கில் அடர்ந்த நதிக் கரைகளிலும், உரிமையற்ற தரிசு நிலங்களிலும் தொழுவங்களை உற்பத்தி செய்தனர்.



இல்லாமை, பசி, வறுமை என்ற ஆணிகளால் துன்பச் சிலுவையில் அறையப் பட்டவர்களே அவர்கள். அவர்களுடைய தொழுவங்கள் மண் பூசிய சாக்கினால் ஆனவை. பட்டினத்தில் எறியப்பட்டிருக்கும் எவ்வகையான பொருட்களும் அவர்கள் கூரையில் கால் நீட்டி உட்கார்ந்திருக்கும். பலகைத் துண்டு, தகரத் துண்டு, எறிந்த வெற்றுப் பீப்பா, உரச் சாக்கு, கடுதாசி மட்டை....... என்பன கூரையின் எலும்புகளுக்குப் பத்து போட உதவும். கேட்டுக் கேள்வியில்லாமலே வீட்டு முகப்புகளில் வந்து சிலர் குடியேறுவது ஒரு புதினமான சேதியன்று. எங்கேயாவது இடம் கிடைத்தால் உலோபிக்குக் கிடைத்த புதையல் போலிருக்கும். பலர் வீதிகளில் பிறந்து, அங்கேயே வாழ்ந்து, அங்கேயே மரணிப்பவர்கள். மத்திய அரசின் உதவி, வெளிநாட்டு நிதி உதவி, சொந்த மாநிலத்தின் உதவி என்பன இருந்தும் அங்கே சேரிகளே வீடுகளிலும் பார்க்க அதிகம். அகதிகள் பட்டினத்தின் ஒரு புறமாக ஒதுங்கி இருக்கவில்லை. செல்வாக்குள்ள விற்பனைக் களங்கள் (Shopping Centre) குபேரர்களுடைய மாளிகைகள், மத்திய வகுப்பாரின் மதிப் பார்ந்த வீட்டுத் திட்டங்கள், அவற்றின் பக்கத்திலும் அகதிகளின் தொழுவங்களைக் காணலாம். குப்பை கூழங்களால் மலையாக வளர்ந்து வரும் தெருக் கோடிகளும், அதைச் சூழ்ந்த பட்டினிப் பட்டாளங்களும், ஆரோக்கியத்தின் ஆனாவையும் அறியாத மானிட செந்துக்களும் கல்கத்தாவின் முகத்தில் கரி பூசுகின்றன. எனவே வைத்தியசாலைகள் நோயாளிகளால் நிரம்பி வழிவது ஆச்சரியமானதல்ல. அங்கே நடை கூடத்தில் ஓரிடம் நோயாளிக்குக் கிடைத்தாலும் அதை நல்ல வாய்ப்பு என்றே சொல்ல வேண்டும். இந்த அதிட்டம் இல்லாதவர்கள் வீதியோரத்தில் உள்ள நடைபாதையில் சுடுகாட்டுத் தேரில் ஏறிக்கொள்ள வேண்டியதுதான். கால நிலையினால் பருவ காலங்கள் மாறும்போது நோய்களும் புற்றீசல்போல புறப்படும். நெருப்புக் காய்ச்சல், அம்மை, வாந்திபேதி, பொக்குளிப்பான் என்ற பழைய பேர்கொண்ட தொற்று நோய்களும் புதிய பேர்கொண்ட பல தொற்று நோய்களும் அங்கே பாயோடு படுக்கவரும்.

நோயாளிகள் காலனுக்கு அழைப்பு மடல் அனுப்புகிறார்கள். புதிதாகக் கல்கத்தாவுக்கு வருகிறவர்களுக்கு அந்த நகரம் மரணப் படுக்கையை நோக்கிச் செல்வதாகவே தோன்றும். வேறு சிலர் அழுக்கும் அருவருப்புமான அந்த நகரத்தைவிட்டு விரைவில் நீங்குவதே புத்தியான செயலாக நினைப்பர். ஆனால் அங்கே வாழ்கின்ற பல்லாயிரம் மக்களுக்கு கல்கத்தா இனிமையான, சௌந்தர்யமான பூமியாகத் தெரிகிறது. வழக்கத்திற்கு அப்பாற்பட்ட அன்பும், உணர்ச்சிப் பிரவாகமும் அவர்களிடத்தில் குடிகொண்டிருக்கும். பல முன்னேற்ற இயக்கங்கள் விழுந்ததை உயர்த்தவும், அழுக்கை அழகு மயமாக்கவும், வறிஞரைச் செல்வராக்கவும், இல்லம் அற்றோருக்கு வீடமைத்து கொடுக்கவும், பசித்தவர்களுக்கு உணவளிக்கவும் ஈடுபட்டன. அவற்றால் அந்த சன சமுத்திரத்தில் தாக்குப் பிடிக்க முடியவில்லை. அரசாங்க அதிபர் மனைவி தலைமையிலும், வேறு சில பெண்களின் குழுக்கள் ஆர்வத்திலும் நல்லெண்ணத்தோடு செய்த தொண்டுகள் பருவ காலப் பூக்கள் போலப் பின்னர் வாடி விட்டன. கல்கத்தா மாபெரும் மனிதப் புதைகுழி. அங்கே யாராவது நிரந்தரமாக குறியீடு போட முடியுமா? கல்கத்தாவிலுள்ள எளிமை, பண்பு, நாகரிகம், இலக்கியம், ஆன்மநலம், அழகு, அன்பு என்பன திரேசாவின் காதில் இரகசியம் பேசின. அந்த மெலிந்த பெண், கடவுள் நம்பிக்கை என்ற ஒரே ஒரு மெழுகுதிரியுடன் கல்கத்தாவில் வாழும் துயரம் மிகுந்த ஏழை மக்களுக்கு அன்பையும், ஆதரவையும் அளிக்கப் புறப்பட்டாள். (கங்கை தொடர்ந்து பாயும்)

## உங்களுக்கு தெரியுமா?

### மாணவர் மறையறிவுப் பகுதி இல.14

சென்ற முறை குறிப்பிட்டதுபோல் இம்முறையும் புனித சின்னப்பரின் வாழ்வு வட்டத்தைச் சுற்றியே வினாக்களும் அமைந்துள்ளன. விடை தேடுவது இலகுவாக இருக்கும் அல்லவா? "கிறிஸ்துவுக்காக அலைதல்" என்ற வாழ்வை புனித பவுல் நிறையவே வாழ்ந்திருக்கின்றார். கிறிஸ்துவினால் தெரியப்பட்டு அவரோடு ஒன்றாக வாழ்ந்த அப்போஸ்தலர்களைவிடவும் புனித பவுலின் பணி மிகச் சிறப்பாகவும் துணிச்சல் மிக்கதாகவும் அமைந்துள்ளது. தனது 3 தூதுரைப் பயணத்திலும் பல ஆயிரக்கணக்கான மைல்களை தரை மார்க்கமாகவும் கடலிலும் பயணம் செய்து கிறீஸ்துவை புற இனத்தாரிடையே எடுத்துச் சென்றமை பல சிரமங்கள் நிறைந்ததும் சவால்கள் நிறைந்தனவாகவும் அமைந்திருந்தன.

அவரது இரண்டாவது தூதுரைப் பயணத்திலிருந்து இம்முறை வினாக்கள் உங்கள் முன் வைக்கப்படுகின்றன. முயன்றால் விடைகளை இலகுவாக கண்டடையலாம்.

### வினாக்கள்

01. தெசலோனிக்கா ஒரு துறைமுக நகரம். இது எங்கிருந்தது?
02. கொரிந்து நகர் எந்த நாட்டில் இருந்தது?
03. சின்னப்பர் தனது 2வது தூதுரைப் பயணத்தில் கலாத்தியாவில் மூன்று நகரங்களில் வாழ்ந்த மக்களுடன் தங்கிக் கிறீஸ்துவை அறிவித்தார். அந்நகரங்கள் எவை?
04. அதே பயணத்தில் சின்னப்பருக்குத் துணையாளரும் கொரிந்திலிருந்து எங்கு சென்றனர்?
05. புனித சின்னப்பரின் வேண்டுகோளின்படி அவர் உரோமானியச் சக்கரவர்த்தியினால் விசாரிக்கப்பட அவரை உரோமாபுரிக்கு அனுப்பிய ஆளுனர் யார்?
06. பவுலும் வேறு கைதிகளும் உரோமைப் பேரரசரிடம் அழைத்துச் செல்லப்பட நூற்றுவர் தலைவன் ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டனர் அவர் பெயர் என்ன?
07. அவர் எந்தப் படைப்பிரிவைச் சேர்ந்தவர்
08. சின்னப்பரும் ஏனையவர்களும் சென்ற கப்பல் புயலில் சிக்கிக்கொண்டது. பல நாட்கள் அவர்கள் கடலில் துன்பப்பட்டனர். அவ்வேளையில் கப்பலில் இருந்தவர்கள் எத்தனைபேர்
9. அவர்கள் புயலிலிருந்து தப்பிக் கரைசேர்ந்த தீவு எது?
10. அந்தத் தீவின் தலைவன் அவர்கள் எல்லோரையும் 03 நாட்கள் விருந்தோம்பி உபசரித்தான். அத்தலைவன் பெயர் என்ன?

விடைகள் வந்து சேரவேண்டிய இறுதி நாள் 10. 08. 2004

மாணவர் மறையறிவுப் பகுதி இல. 12 இற்கான கேள்விக்கு இருவர் மட்டுமே விடையளித்திருந்தார். **அவர்களும் எல்லா வினாக்களுக்கும் சரியான விடையை அளிக்கவில்லை. எனவே இம்முறை எவருடைய பெயரும் இடம் பெறவில்லை.**

### *மாணவர் மறையறிவுப் பகுதி இல. 12 இற்கான சரியான விடைகள்*

1. யூஜின் டி மசெனட் (பிரபு குடும்பத்தினர்).
2. பிரான்ஸ்.
3. 1816ல் ஆரம்பிக்கப்பட்டது, 1817ல் பாப்பிறையின் அங்கீகாரம் பெற்றது.
4. அருட்தந்தை பீற்றர் பியன்வெனு நோ ஆய்.
5. 1822.
6. பிரான்ஸ் நாட்டவர்.
7. புனித இஞ்ஞாசியார்.
8. ஸ்பெயின் நாட்டவர்.
9. இயேசு சபை அகதிப்பணி
10. அருட்தந்தை பேட்றோ அருப்பே.
11. 1980ம் ஆண்டில்.

இப்போட்டி பற்றிய உங்கள் அபிப்பிராயங்களை, கருத்துக்களை, ஆலோசனைகளை எமக்கு எழுதுங்கள். *(பதிப்பாசிரியர்)*

## சவேரியார் குருத்துவ... 3ம் பக்கத் தொடர்ச்சி

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக திருமதி பி. எவ். சின்னத்துரையும், கௌரவ விருந்தினராக யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் ஜே. நீக்கிலஸ் அடிகளாரும் கலந்து சிறப்பித்தனர். வழமைபோல குருத்துவக் கல்லூரி அரங்கில் இந்நிகழ்வு மேடையேற்றப்படாமல் திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்பட்டமையால் ஏராளமானவர்கள் வந்து குருத்துவக் கல்லூரி சகோதரர்களின் திறமைகளைக் கண்டு வியந்து பாராட்டினர். மன்னார் பாங்கிலமைந்த கூத்துக்களை பார்க்கும் சந்தர்ப்பம் யாழ்ப்பாணத்தவர்களுக்கு மிகவும் குறைவாக இருப்பதால் இக்கூத்து யாழ்ப்பாணத்தில் மன்னார் பாங்கில் அமைந்த கூத்தை பார்ப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கியதாக கூத்து ஆர்வலர்கள் பலர் திருப்தி தெரிவித்தனர்.

பேராயர் ஒஸ்கார் றோமோறா 1917இல் எல்சல்வடோரில் பிறந்து 1977இல் பேராயரானவர். 1980இல் அரச அடக்கு முறைக்கு எதிராக முழு மூச்சாக போராடிய அவர் 1980ஆம் ஆண்டு பங்குனி 24ஆம் திகதி திருப்பலி ஒப்புக்கொடுத்துக்கொண்டு இருந்தபோது சுட்டுக்கொல்லப்பட்டார். பேராயரின் படுகொலையின் 10 வருட நிறைவில் அவரது சமாதியை தரிசித்த திருத்தந்தை 2ம் யோவான் பவுல் "பேராயர் ஒஸ்கார் றொமேறோ மானிடத்தை நேசித்த மகான், ஆர்வமுள்ள ஆயன், மக்களுக்காக உயிரைக் கொடுத்த சிறந்த தலைவன், மண்ணில் விழுந்து மடிந்த கோதுமை மணி" என்று புகழாரம் சூட்டினார்.

*தமிழ் வளர்த்து மறைவளர்ப்போம்* என்ற விருதுவாக்குடன் இயங்கிவரும் யாழ் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் தனிநாயகம் தமிழ் மன்றத்தினரின் தமிழ் விழா குருமட மாணவர்கள் மத்தியில் தமிழ் அறிவையும் ஆர்வத்தையும் வளர்ப்பதாக உள்ளது. தனிநாயகம் அடிகளார் உலகப்பிரசித்தி பெற்ற த்மிழ் அறிஞராவார். தமிழ் மொழியின் பெருமையை உலக அரங்கில் ஏற்றிவைத்த கத்தோலிக்க துறவி அவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சமூக நம்பிக்கை நிதியத்தின் ..... 14ம் பக்கத் தொடர்ச்சி

மற்றும் பள்ளிமுனை கிராமத்தில் கலாச்சார விளையாட்டுப் போட்டி, முசலி பிரதேச இளைஞர் யுவதிகளுக்கான "தேடல்" கருத்தரங்கு, வங்காலையில் மாபெரும் சிரமதானம், நானாட்டான், மன்னார் பிரதேசத்தை உள்ளடக்கிய முன்பள்ளி சிறார்களுக்கும், மக்களுக்குமான கலாச்சார விளையாட்டுப்போட்டி, முதலைகுத்தி மைதானத்தில் மற்றும் சூரிய கட்டைக்காட்டில் சிரமதானம், தொண்டர்களுக்கான பயிற்சி போன்ற பல்வேறு செயல்திட்டங்கள் மூலம் இவ் அமைப்பு மக்களை ஒருங்கிணைத்து வருகின்றது. இதன் மூலம் மன்னார் மாவட்டத்தில் உள்ள மக்களிடையே இன, மத ஒற்றுமையை உருவாக்குவதே இத்திட்டத்தின் நோக்கம். இதனை முன்னெடுத்து செல்வதற்காக திட்ட உத்தியோகஸ்தர் மூலமாக கிராமத்தில் உள்ள தொண்டர்களை பயிற்றுவித்து அவர்களின் ஒத்துழைப்புடன் கூட்டங்களையும், கருத்தரங்குகளையும் இவ் அமைப்பு நடாத்தி வருகிறது. மேலும் இத்திட்டம் வெற்றியடைய மக்களின் ஒத்துழைப்பு நாடப்படுகிறது.

தகவல் அ.தி. அன்புராஜ் லெம்பேட்: சமூக நம்பிக்கை நிதியம், மன்னார்

# ஈராக் நாட்டு கிறிஸ்தவர்கள் படும் பாடு

## அயல்நாட்டு கிறிஸ்தவ சமூகங்கள் பற்றிய ஓர் அறிமுகம்

*ஈராக்கில் சுமார் எட்டு இலட்சம் கிறிஸ்தவர்கள் வாழ்கிறார்கள். இவர்கள் அந்நாட்டு மக்கட் தொகையில் நான்கு விழுக்காடு. இன்றைய ஈராக்கில் இந்த கிறிஸ்தவர்களின் நிலை இங்கே அலசப்படுகிறது .....*



புதிய பக்தாத் நகரில் அமைந்துள்ள கல்தேய திருச்சபை ஆலயத்தின் முன்புறத் தோற்றம்.

யுத்தம் கொடியது! அதனை நாம் அனுபவபூர்வமாக அறிவோம். யுத்தத்தில் துன்புறுவோர் எவராயிருந்தாலும் அவர்களுக்காக நாம் கவலைப்படத்தான் வேண்டும். அவர்கள் கிறிஸ்தவர்களாகவோ, இந்துக்களாகவோ, இஸ்லாமியராகவோ எந்த இனத்தவராகவோ இருக்கலாம். இந்த இனத்தாருக்காக மட்டும்தான் நாம் அனுதாபப்படுவோம் என்று சொன்னால் எம்மையும்கூட குண்டு பொழிபவர்களாக குற்றப்படுத்திவிடும். எனவே இக்கட்டுரையின் நோக்கம் ஈராக் நாட்டு மக்கள் அனைவரும் துன்பமடையக் கூடாது என்பதே. இருந்தாலும் ஈராக்கில் உள்ளவர்களில் ஒரு சாரார் கிறிஸ்தவர்களும்கூட என்பதை அறிந்துகொள்வதற்காக இது எழுதப்படுகின்றது.

ஈராக்கில் சுமார் எட்டு இலட்சம் கிறிஸ்தவர்கள் வாழ்கிறார்கள். இவர்கள் அந்நாட்டு மக்கள் தொகையில் நான்கு விழுக்காடு. இவர்கள் கல்தேய மற்றும் அசீரிய, ஆர்மீனிய, சீரிய, இலத்தீன் மரபுகளைச் சேர்ந்தவர்கள். இவர்களில் பெரும்பாலோனோர் கல்தேய மரபினரே.



அண்மையில் பாக்தாத் சென்றிருந்த கத்தோலிக்க பத்திரிகையாளர் கார்லோஸ் மன்சோ (Carlos Manzo) என்பவருக்கு யுத்த அனர்த்தங்களைப் பற்றிய வீடியோ படம் ஒன்றினைப் போட்டுக்காட்டினார் கல்தேய மரபு புனித எலயா

ஆலயப் பங்குத்தந்தை அருட்திரு பாஷா வர்தா என்பவர். போரின் அகோரத்தை அதில் கண்டு கலங்கிவிட்டார் பத்திரிகையாளர். அந்தப் பங்கு ஆலயம் குண்டு மழை பொழிந்த வேளையில் கத்தோலிக்க மக்களுக்கு மட்டுமல்லாமல் பக்கத்தில் உள்ள இஸ்லாமிய பகுதியினைச் சேர்ந்தவர்களுக்கும் புகலிடம் அளித்தது. பாக்தாத் நகரின் மையப்பகுதியில் அன்னை தெரசாவின் கருணை இல்லம் இருக்கிறது. அங்கே நான்கு அருட்சகோதரியர் பணியாற்றுகின்றார்கள். இரண்டு வயதிலிருந்து பன்னிரண்டு வயது வரை உள்ள யுத்தத்தினால் அநாதைகளாக்கப்பட்ட 24 குழந்தைகளை அவர்கள் பராமரித்து வருகின்றார்கள். அந்நிலையத்தின் தலைவி சிஸ்டர் டென்சி என்பவர் அப்பிள்ளைகளின்மேல் பாசமழை பொழிந்து வருகிறார். கோடை காலத்தில் ஒரு பஸ்ஸை வாடகைக்கு அமர்த்தி குளிர் பிரதேசங்களுக்கு அவர்களை அழைத்துச் செல்லும் அளவிற்கு அவரது கவனிப்பு அமைந்துள்ளது.

ஈராக்கின் வடபிராந்திய நகரான மோசுலுக்கு அருகே புனித ஜார்ஜியார் திருத்தலம் ஒன்று இருக்கிறது. அங்கே இஸ்லாமியரும்கூட யாத்திரீகர்களாக வருவார்களாம். பச்சைப் பசேல் என இருக்கும் இவ்விடத்திற்கு விடுமுறைக் காலங்களைக் கழிக்கவும் மக்கள் வருவதுண்டு. பாக்தாத்தில் யுத்தம் அகோரமாயிருந்த நாட்களில் இத்திருத்தலம் அநேகருக்குப் புகலிடமாயிருந்தது.

பக்கத்தில் உள்ள அல்கோஸ் நகரில் உள்ள றபான் கோர்மிஸ் மடாலயத்தில் அனேக சிறுவர்கள் தஞ்சம் புகுந்துள்ளார்கள். தம் தாய் தந்தையை இழக்கும் சிறார்களை இஸ்லாமியர் தத்தெடுப்பதை அம்மக்கள் விரும்பவில்லை. தம் நகர் பிள்ளைகளை இவ்வாறு இஸ்லாத்துக்கு திருப்பி விடுவார்கள் என இவர்கள் அஞ்சுவதால் மடத்தில் சிறு சிறு வேலைகளைச் செய்து தங்கியிருக்க ஏற்பாடு செய்யுமாறு குருவானவரை கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

தற்போது ஆட்சி செய்துகொண்டிருக்கும் அமெரிக்கர்கள் அரசியல் காரணங்களுக்காக ஈராக்கின் பெரும்பான்மையினருக்கு சலுகைகளை அளிப்பதிலேயே கவனமாயிருக்கின்றனர். அமெரிக்க ஆளுனர் பால் பெர்னருக்கு கல்தேய திருச்சபை ஆயர் ஒரு உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளார். ஈராக்கின் பழமையான குடிமக்களாகிய எங்களை மறந்து விடாதீர்கள் என அவர் கேட்டுள்ளார். தற்போது உள்ள ஆட்சி மன்றத்தின் 25 உறுப்பினர்களில் ஒருவர் கிறிஸ்தவர். யவுனடாம் கானா என்னும் அவர் போக்குவரத்து அமைச்சராயிருக்கிறார்.

அமெரிக்க ஆக்கிரமிப்பின் ஒரு வருட நிறைவில் கோபம் கொண்ட ஈராக்கியர் தற்போது தற்கொலைத் தாக்குதல் போன்றவற்றை ஆரம்பித்துள்ளார்கள். ஈராக்கை சதாம் ஆட்சிசெய்தபோது இருந்த தலையிடியைவிட அமெரிக்கர்கள் பெரிய தலையிடியை அனுபவிக்கின்றார்கள். சர்வதேச அமைதி காக்கும் படைகளை பணயக் கைதிகளாக பிடித்துச்



ஈராக் நாட்டின் பக்தாத் நகரப் பேராலயத்தில் உள்ள பீடப்பணியாளர் சிறுவனும் பீடப்பணியாளர் சிறுமியும்.

செல்கின்றனர். நாளுக்கு நாள் நிலமை மோசமாகி வருகிறது. அப்படியே அமெரிக்காவின் திட்டம் நிறைவேறினாலும்கூட தீவிர மதச் சார்பான சியா முஸ்லிம்களின் ஆயத்துல்லா அலி அல் சிஸ்தானியின் தலைமையில் இஸ்லாமிய ஆட்சி ஆரம்பிக்கலாம். சிறுபான்மையினரின் நிலை மிக மோசமடையலாம். எனவே ஈராக்கிய கிறிஸ்தவ மக்களின் சுதந்திரம் உரிமை வெறும் கனவாகிவிடுமோ என்ற அச்சத்தில் அவர்கள் வாழ்கிறார்கள். இந்நிலையில் உலகளாவிய கிறிஸ்தவ சமூகத்தின் தார்மீக ஆதரவு ஈராக் கிறிஸ்தவர்களுக்கு தேவை.



அன்னை திரேசா அருட்சகோதரிகளால் பராமரிக்கப்படும் ஊனமுற்ற சிறார்கள் விடுதியில் உள்ள சிறுவன் ஒருவன்.

## இளைஞர் பொழிவு

சகோ. சூ.டக்ளஸ் மில்ரன் லோகு, (பேசாலை)
புனித பிரான்சிஸ் சவேரியார் குருமடம்,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.



# ஆலயக் கடவுள் ..... வீதியோர கடவுள்...!

### (நல்ல சமாரியர் உவமையின் பின்னணியில் – லூக் 10: 30 – 35)



அண்மைக் காலங்களில் நமது பகுதிகளில் ஆன்மீக புதுப்பித்தல்களும் ஆவிக்குரிய செபவழிபாடுகளும் வளர்ந்து கனிதர ஆரம்பித்துள்ளதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. கிறீஸ்தவர்கள், ஏன் பிற மத சகோதரர்களும்கூட குணமாக்கல் வழிபாடுகளில் கலந்துகொண்டு குணம்பெற்று ஆறுதலும் பயனும் அடைவதும் ஆண்டவரைத் துதித்து ஆர்ப்பரிப்பதும் நம் அனைவருக்கும் மகிழ்வை அளிக்கும் நிகழ்வுகளாக இருக்கின்றன. இத்தகைய செபவழிபாடுகளில் பங்கெடுப்பது வரவேற்கத்தக்கது. வளர்க்கப்படவேண்டியது. ஆனால் இத்தகைய நிகழ்வுகள் சிலரை, பலரை சமூக ஈடுபாட்டினின்று மட்டுப்படுத்தி தனிப்பட்ட ஈடேற்றத்தினை மையப்படுத்தும் மனநிலையுடையவர்களாக மாற்றிவிடுமோ? என்ற ஐயத்தினை எனக்கு ஏற்படுத்துகிறது. இந்த முன்தரவுடன் நல்ல சமாரியர் உவமை தரும் செய்தியுடன் சிந்திக்க அழைக்கிறேன்.

நல்ல சமாரியர் உவமை நம் அனைவருக்கும் நன்கே பரிச்சயமான உவமை. சிறு வயது முதலே மறைக்கல்வி வகுப்புகளிலும் மறை உரைகளிலும் நன்கு விளக்கப்பட்ட உவமை. இந்த உவமையிலே செபத்திற்கும் செயற்பாட்டிற்குமான ஒருமித்த தன்மை வலியுறுத்தப்படும் பாங்கை நான் காண்கிறேன். நாம் தேடும் ஆண்டவன் ஆலயத்திலா அன்றேல் அன்றாட வாழ்விலா அடையாளம் காணப்படுகிறார் என்ற தேடல்களுக்கு விடை சொல்ல விழைகிறது இந்த நல்ல சமாரியர் உவமை.

இந்த உவமையில் சொல்லப்படும் கள்வர் கையில் அகப்பட்ட ஒருவர் எருசலேமிலிருந்து எரிக்கோவுக்குப் போகிறவராக சுட்டிக்காட்டப்பட்டுள்ளார். பலஸ்தீன தேச புவியியலின்படி எருசலேம் மேட்டுநிலைப் பகுதியாகவும் எரிக்கோ கடல் மட்டத்தைவிட தாழ்ந்த நிலப்பகுதியாகவும் உள்ளன. ஆகவே அந்த மனிதர் தம்முடைய வாழ்வின் இறக்கத்தில் எதிர்பாராத விபத்தை, சோதனையை சந்தித்து வாழ வழியில்லாத பரிதாபத்துக்குரிய மனிதராக, பிறரின் உதவியை முற்றிலும் வேண்டிய நிலையுடையவராக சித்தரிக்கப்பட்டுள்ள உட்பொருள் நிலையை விளங்கிக்கொள்ள வேண்டும்.

இந்த நிலையில் குரு, லேவியர் ஆகிய இருவரும் அடுத்தடுத்து அந்த "கள்வர் கையில் அகப்பட்டவரை" சந்தித்து, கண்டும் காணாதவராக விலகிச் செல்கின்றனர். குரு, லேவியர் ஆகிய கதாபாத்திரங்கள் உவமையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அவர்கள் எருசலேம் தேவாலயத்திற்குச் செல்லும் நபர்களாகவே கொள்ளப்பட வேண்டும். குருவும் லேவியரும் எருசலேம் தேவாலயத்தோடு தொடர்புடையவர்கள். குரு பலி செலுத்துபவர். லேவியர் பலிக்கு உதவி புரிபவர். ஆகவே அவர்கள் தங்கள் தலையாய கடமையாக ஆலயப் பணியை தலைமேல்கொண்டு பாதையோரத்தில் பரிதவிக்கும் மனிதரை, பாதிக்கப்பட்ட மானிடத்தை கண்டும் காணாதவர்களாக உதவ மனமில்லாதவர்களாக தங்கள் வாழ்க்கையின் ஏற்றத்தில், தனிப்பட்ட ஆன்ம ஈடேற்றத்தின் நாட்டத்தில் ஏறிச்செல்கின்றனர். ஆனால் அந்த சமாரியர் தனது வாழ்க்கைப் பயணத்திலே பாதையோர பாதிப்புக்குட்பட்டவர் மட்டில் பரிவுகொள்கிறார். உடைபட்ட மானிடத்தில் (broken Humarity) இறை இருப்பை கண்டுகொள்கிறார். செல்வரும் இலாசரும் (லூக். 16:19-31) உவமையில் நாம் காண்பது என்ன? அந்த செல்வர் தீயவராகவோ, கொடுமைக்காரராகவோ அல்லது எல்லாவித பாவங்களை உடையவராகவோ சித்தரிக்கப்படவில்லை. மாறாக தன் அருகே இருந்த இலாசர் எனும் ஏழையவரை கவனியாது புறக்கணித்ததே அந்த செல்வந்தரை நரக வேதனைக்கு இட்டுச் சென்றது.

அன்றாட வாழ்க்கையின் அவலத்தில் அவதியுறுவோரில் ஆண்டவர் இருக்கிறார் என்பதை நாம் அடையாளம் காணத் தவறிவிடுகிறோம். ஆலயத்தில் மட்டுமே ஆண்டவரைத்தேட முயல்கிறோம். துன்ப துயரத்தில் வாடுவோரில் இறைவனை எப்படி இனங்காண முடியும்? இவ்வினாவிற்கான இயேசுவின் விடை இதோ: "நான் பசியாய் இருந்தேன், நீங்கள் உணவு கொடுத்தீர்கள்: தாகமாய் இருந்தேன், என் தாகத்தைத் தணித்தீர்கள்: அன்னியனாக இருந்தேன், என்னை ஏற்றுக்கொண்டீர்கள்: நான் ஆடையின்றி இருந்தேன், நீங்கள் எனக்கு ஆடை அணிவித்தீர்கள்: நோயுற்றிருந்தேன் என்னை கவனித்துக்கொண்டீர்கள்: சிறையில் இருந்தேன், என்னைத் தேடி வந்தீர்கள்" (மத். 25 : 35 – 36) "மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள்". (மத்.25:40)

ஆகவே நம்முடைய இறை அனுபவங்கள், செபவழிபாடுகள், பக்தி முயற்சிகள் அனைத்தும் சமூக ஈடுபாட்டிற்கு நம்மை இட்டுச் செல்ல வேண்டும். வெறுமனே தனிப்பட்ட குணமாக்கலையும், திருப்தியையும், சந்தோசத்தையும் மட்டுமே கொண்டு சுயநல நோக்கமுடைய செப அனுபவங்களாக அவை அமைந்து விடக்கூடாது. "என்னை நோக்கி ஆண்டவரே ஆண்டவரே எனச் சொல்பவரெல்லாம் விண்ணரசுக்குள் செல்வதில்லை. மாறாக, விண்ணுலகிலுள்ள என் தந்தையின் திருவுளத்தின்படி செயல்படுபவரே செல்வர்".

மத். 7 : 21 என்ற இறைவார்த்தைப் பகுதியும் அதனைத் தொடர்ந்து வரும் வார்த்தைப் பகுதிகளும் எமக்கு சில தெளிவுகளைத் தருபவையாக இருக்கட்டும். எனவே அருங்குறிகளையும் அற்புதங்களையும், குணம் பெறுதலையும் மட்டுமே எதிர்பார்க்கும் இறைபுகழ்ச்சிகளும், இறை வேண்டுதலுமாக நமது கிறிஸ்தவ பயணம் அமைந்து விடக்கூடாது. மாறாக இறைத்தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றும் கிறிஸ்தவ மதிப்பீடுகளை, மனித மாண்புகளை வலியுறுத்தும் வாழும் வாழ்க்கையை மேற்கொள்வதோடு அவ்வாழ்வைப் பிறருக்கும் அளிக்கும் நோக்கோடு சமூக ஈடுபாடு கொள்ளும் இறைமக்களாக வாழ்வோமாக! அப்போது ஆலயத்திலும் நம் அன்றாட வாழ்விலும் கடவுளைக் கண்டு கொள்ளலாம். அப்போது ஆலயத்தில் ஆன்மீக உணர்வில் அனுபவித்த கடவுளை, வீதியோர சக மனிதரில் முகமுகமாய் கண்டுகொள்ளலாம்.

# பெரியப்பா பதில்கள்

கே. பெரியப்பா, எல்லாரும் எதை எதையோ கண்டுபிடிக்கிறாங்க. நீங்கள் எதனைக் கண்டு பிடிக்கப் போறீங்க?

*ம. றோஷா, பெரிய கோமரசன் குளம், வவுனியா.*

ப. அதை இதை எல்லாம் கண்டு பிடிப்பதைவிட நான் என்னையே கண்டு பிடிக்க முயற்சி செய்கிறேன். இதைத்தான் சோக்கரிட்டீஸ் சொன்னார் - "உன்னையே நீ அறிவாய்" என்று.



கே. அன்புள்ள பெரியப்பா, நிம்மதியாக சிறைக்கூடத்தில் வாழ வேண்டுமானால் சிறைக் கம்பிகளை தங்கத்தில் செய்தால் நிம்மதி வந்துவிடுமா?

*ம. சர்மலிற்றா, ஆள்காட்டிவெளி, அடம்பன்.*

ப. நிம்மதி தங்கத்திலும், வெள்ளியிலும், பித்தளையிலும் இல்லை. அது மனத்தில் உள்ளது. பவுலடியார் கூறும் வார்த்தைகளுக்கு பின்னால் உள்ள மனநிலைதான் நிம்மதி. "எனக்கு வறுமையிலும் வாழத் தெரியும், வளமையிலும் வாழத்தெரியும் வயிறார உண்ணவோ, பட்டினி கிடக்கவோ, நிறைவோ, குறைவோ எதிலும் எந்தச் சூழலிலும் வாழப் பயிற்சி பெற்றிருக்கிறேன்". (பிலிப்பியர் 4 : 12)

கே. நான் ஒருவருக்கு துரோகம் செய்துகொண்டு ஆலயப்பணிகளில் முன்நிற்கின்றேன். நான் இப்படி செய்தால் நீங்கள் இதற்கு கூறும் பதில் என்ன?

ஆர். பிரதீபா, உயிர்த்தராசன்குளம், முருங்கன்.

ப. அடுத்தவருக்கு செய்யும் துரோகம் ஆண்டவருக்கு செய்யும் துரோகம்தான். துரோகம் செய்த யூதாஸ் இயேசுவின் பணியில் நிலைத்து நிற்கமுடியாமல் போனதைப் போன்று நீங்களும் நிலைத்து நிற்க முடியாது. (யூதாசின் இறுதி முடிவு உங்களுக்கும் ஏற்படாதவாறு பார்த்துக்கொள்ளுங்கள்.)



▣ கே. பெரியப்பா, வீட்டுக்கொரு விவிலியம் என்ற நிலை மாறி ஆளுக்கொரு விவிலியம் என்று வந்த பிறகும் மக்கள் மனங்கள் மட்டும் ஏன் இன்னும் மாறவில்லை?

*ம. காமலிற்றா, சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி, மன்னார்.*

ப. வீட்டுக்கொரு விவிலியத்தை அல்லது ஆளுக்கொரு விவிலியத்தை வாங்கி (திறந்து பார்க்காமல்) தூசி படிய வைத்திருந்தால் மட்டும் போதாது. விவிலியத்தை வாசிக்க வேண்டும், அதை வாழ்வாக்க வேண்டும் அப்போதுதான் மனங்கள் மாறும்.

கே. பெரியப்பா, உங்கள் பதில்களை உடனே பெற என்ன செய்ய வேண்டும் எனக் கூறுகிறீர்கள்?

*சித்தாத்தன், சின்னப்பண்டிவிரிச்சான்.*

ப. எனது பதில்களை உடனே பெற வேண்டுமானால் கேள்விகளை இலகுவாகக் கேட்க வேண்டும் (உதாரணம்) இதயம் எந்தப் பக்கத்தில் உள்ளது.? பெரிய வெள்ளிக் கிழமை எந்த நாளில் வரும்? ... ஹி..... ஹி.....

கே. பெரியப்பா, ஏன் நீங்கள் பல கேள்விகளுக்கு விடை அளிப்பதே இல்லை?

*அருள்வரதன், ஆட்காட்டிவெளி*

ப. சிம்பிள், 'பதில் தெரியாது' என்பதுதான். உங்கள் கேள்விகள் எல்லாவற்றிற்கும் பதில் தெரிந்தால் நான் பெரியப்பாவாக மாறி உங்கள் இடக்கு முடக்கான கேள்விகளுக்கெல்லாம் என் மண்டையை உடைத்து பதில் சொல்லிக்கொண்டிருக்கிற இந்த கஸ்ரமான வேலையையா செய்துகொண்டிருப்பேன்.

கே. உண்மையான அறிவு என்பது என்ன?

*மணிரெத்தினம், மாங்குளம்*

ப. உலகில் எனக்கு இன்னும் தெரியாதவை எவ்வளவோ உண்டு என்ற அறிவுதான் உண்மையான அறிவு..



கே. அன்புக்குரிய பெரியப்பா, திருமணத்திற்குப் பின் குடும்பத்தில் பிரச்சினை வந்தால் மனைவி, கணவன், பிரிந்து செல்வது ஏன்?

*க. ஜெயரமணன், ஆட்காட்டிவெளி, அடம்பன்.*

ப. சேர்ந்து வாழ முடியாது என்பதால்தான் அவர்கள் பிரிந்து செல்கிறார்கள். ஆனால் அவர்களால் வாழ முடியும் என்பதே உண்மை. இதை விளக்க இதோ ஒரு கதை:

ஒரு குடும்பத்தில் கணவன் மனைவிக்கிடையே பெரும் சண்டை ஏற்பட்டது. இந்த விவகாரம் நீதி மன்றத்தில் விவாகரத்து கோருவதில் போய் முடிந்தது. அவர்களது சொத்து எல்லாம் இரண்டாக பங்கு வைத்தாகி விட்டது. தம் மூன்று பிள்ளைகளையும் எவ்வாறு பங்கிடுவது என்ற வினா எழும்பியது. அறிவுக் கூர்மை நிறைந்த நீதிபதிக்கு திடீரென ஒரு யோசனை தோன்றியது. "உங்களுக்கு இன்னுமொரு குழந்தை பிறக்கட்டும் அதன் பிறகு தலைக்கு இரு குழந்தைகளாக பங்கு வைக்க வசதிப்படும்" என்று சொல்லி நீதிபதி அனுப்பினார். அவர்களும் போய் கூடிவாழ்ந்தனர். மனைவிக்கு பேறுகால நேரம் வந்தது. குழந்தையை ஈன்றெடுத்தாள். ஆனால் அது இரட்டைக் குழந்தையாய் பிறந்தது.

ஆனால் அவர்கள் இப்போது மனம்மாறி ஒற்றுமையுடன் வாழ்ந்தனர். விவாகரத்திற்கு இடம்இல்லாமல் போய்விட்டது. காலம் பல பிரச்சினைகளுக்கு முடிவைத்தரும்.

▣ இந்த அடையாளமிடப்பட்ட கேள்வி பாராட்டுக்குரியதாக தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

# நீங்காத நினைவுகள்

## 1ம் ஆண்டு நினைவு



மலர்வு 31 - 03 - 1941



உதிர்வு 25 - 06 - 2003



### அமரர் டோமினிக் தேவதாசன் துரம்
**(ஓய்வு பெற்ற உள்ளகக் கணக்காய்வாளர்)**

*"உம் நினைவால் வாடி நிற்கின்றோம் – எமை விட்டு*
*உலகை விட்டுச் சென்று ஓராண்டு கடந்ததையா.*
*உருகித் தவிக்கின்றோம் இங்கே நாம்*
*நீங்கள் உளமாற யோசித்த எமக்காய் வேண்டுங்கள் எங்கள் நேச அப்பா...*

*தலைவனாய் குடும்பத்தைக் கொண்டு செல்ல*
*தலைமேல் பல பழுக்களைப் போட்டு – பிள்ளைகளை*
*தலை நிமிர்ந்து வாழச் செய்தீர்களே – உங்களுக்கு*
*எம் தலை சாய்த்து நன்றிகளை தெரிவிக்கின்றோம். எங்கள் அன்பு அப்பா....*

*நாள் தோறும் எங்களுக்காய் பட்ட கஷ்டங்களையெல்லாம்*
*நாங்கள் இப்போதுதான் உணர்கிறோமே!*
*நாளெல்லாம் எங்களை வேதனையில் ஆழ்த்திவிட்டு*
*நாதனிடம் சென்றுவிட்டீர்களோ? எங்கள் செல்ல அப்பா.."*

*இவரின் பிரிவால் துயருறும் தாய், மனைவி, பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள். பேசாலை.*

## 3ம் ஆண்டு நினைவு

மலர்வு 19 - 10 - 1938



உதிர்வு 17 - 07 - 2001

### பி. மொணிக்கா கூஞ்ஞ
**(ஓய்வுபெற்ற ஆசிரியர்)**
**(வங்காலை)**

அப்பாவை இழந்த காலை - நாளை அம்மாவே எமக்குத் துணை என்ற வேளை, நீயும் பிரிந்தனையோ எம்மை விட்டு அம்மா!

அப்பாவும் இல்லை அம்மாவும் இல்லை அந்தரித்த பிள்ளைகள் ஆனோம் - அவனியிலே நல்லாசிரிய தீபமாய்த் திகழ்ந்தாய் - அம்மா எம்மை இருளிலே விட்டகன்றாய் - ஏனோ! உருவங்கள் மாறலாம். எங்கள் உள்ளங்கள் உன்னை விட்டு மாறாதம்மா!

இயேசுவின் பசுமையில் உன் ஆன்மா இனிமையாக இணையட்டும்.

*உம் நினைவில் தவிக்கும் பிள்ளைகள், மருமக்கள், பேரன், பேத்திகள்.*

## 1ம் ஆண்டு நினைவு

மலர்வு 07 - 11 - 1947



உதிர்வு 15 - 07 - 2003

### தி. கிருபாநிதி
**(முதலைகுத்தி, உயிலங்குளம்)**

பண்பிற்கும் பாசத்திற்கும் உறைவிடமாய் விளங்கிய - ஐயா நீங்கள் எங்களை விட்டு பிரிந்து ஓராண்டு சென்றாலும் உம் கவலைகள் எம்மை விட்டு நீங்கவில்லை. ஐயா, குடும்பத்திற்கு ஒளி விளக்காக திகழ்ந்து மணிவிளக்காய் வாழவைத்த ஐயா, எம் மனம் தாங்கவில்லை. காலங்கள் மறைந்தாலும் கவலைகள் மாறவில்லை பார்வையில் மறைந்தாலும் பாசங்கள் மறையவில்லை - ஐயா உம் ஆன்ம சாந்திக்காய் அன்புக் கரம் வேண்டி நிற்கின்றோம்.

உம் பிரிவால் துயருறும் அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

இவரின் ஆன்ம சாந்திக்காய் 15.7.2004 அன்று முதலைக்குத்தி புனித லூர்து அன்னை கெபியில் 5.30 மணியளவில் இரங்கல் திருப்பலி ஒப்பக்கொடுக்கப்படும்.

## 31ம் நாள் நினைவு

மலர்வு 29 - 07 - 1925



உதிர்வு 25 - 05 - 2004

### அ. சிந்தாத்துரை றோச்
**(முன்னாள் சங்கிறிஸ்த்தம்- பள்ளிமுனை)**

நீ செய்த சேவை அளப்பரியவை நீ காட்டிய கருணை கணக்கிடாதவை, கள்ளமில்லாத உன் உள்ளம் கர்த்தருக்காய் உன் வாழ்வை அர்ப்பணித்தாய், களங்கமில்லா உன் புனித சேவை எண்ணி புளங்காகிதம் அடைகின்றோம். பிள்ளைகள் ஏழு பெற்றெடுத்தாய், பூலோகம் புகழ - வாழ பல வழிகள் செய்தாய். அறவழியில் இறைவன் தொண்டுக்காய் அருட்சகோதரி அனற்றாவை அர்ப்பணித்தாய். அன்பின் அரசில் அபயம் என்று எண்ணி அடைக்கலம் புகுந்தாய். அன்பராம் இயேசு உனை அரவணைத்துக் காப்பார்.

இவரின் பிரிவால் துயருறும் அன்பு மனைவி, பிள்ளைகள், மரு மகன்மார்,மருமகள், பேரப்பிள்ளைகள்.

## 31ம் நாள் நினைவு

மலர்வு 15 - 04 - 1926



உதிர்வு 19 - 05 - 2004

### ஆரோக்கியம் பிலிப்பு
(பெரிய நாவற்குளம், திருக்கேதீஸ்வரம்)

பாசத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து அன்பினால் எம்மை அனைத்தெடுத்து தேன்கலந்த பாசமொழியாலே பிள்ளைகள் எங்களைப் பாரினிலே உயர்த்தி, மண்ணுலகில் மாண்பாய் வாழ்ந்து பண்பினால் எம்மை வளர்த்தெடுத்த எம் இனிய தந்தையே காலன் உன்னைப் பிரிந்தாலும் எம் நெஞ்சை விட்டு நீங்காத நினைவலைகளாய் என்றுமே எம் மனங்களில் உமது நினைவலைகளால் துயரத்தில் துவழ்கிறோம்.

*உமது துயரத்தால் துயருறும்:- பிள்ளைகள், மருமக்கள், பேரப் பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.*

## 1ம் ஆண்டு நினைவு

மலர்வு 28 - 04 - 1918



உதிர்வு 28 - 06 - 2003

### அருட்சகோதரி கிறாசியா

அருட்சகோதரி கிறாசியா 1918.4.28ம் நாளதனில் வங்காலைத் தளமதில் நனிசிறந்ததோர் குடும்பத்தில் பிறந்தார். இவர் வங்காலை திருக்குடும்பக் கன்னியர் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்று பின் இளவாலை திருக்குடும்பக்கன்னியர் கல்லூரியில் உயர்கல்வியுடன் 1944.07.30ம் திகதியன்று தனது அர்ப்பண வாழ்வை நிலைப்படுத்தியபின் பயிற்றப்பட்ட நல்லாசிரியராக, நாரந்தனை, அனுராதபுரம், யாழ்ப்பாணம் நெடுந்தீவு, பள்ளிமுனை, ஊர்காவற்றுறை கரம்பன். மயிலிட்டி, மன்னார், இளவாலை, மானிப்பாய் ஆகிய இடங்களில் சேவைகள் புரிந்து எல்லோரும் விரும்பிய துறவியாக நற்பேறது புனைந்து பதுமை பொறுமை பழகுதலில் இனிமை பேசுவதில் கனிமை சபையின் மகிமை செறிந்து மன்னார் மாவட்டத்தின் திருக்குடும்பத்தின் இருவரை முதல் கன்னியராக வங்கக் கடலினில் முகிழ்த்தெடுத்த முத்துக்கள் என்ற பெருமையை புனைந்து கொண்டனர். இறைவனின் பசுமையில் இவர் ஆன்மா ஆறுதலாகட்டும்.

(தகவல் பீற்றர் சோசை)

## பௌத்த துறவிகளின்..1ம் பக்கத் தொடர்.

பௌத்த துறவிகளைக் கொண்ட இலங்கை அரசியற்கட்சி ஒன்று முதல் முறையாக துறவிகள் குழு ஒன்றை கடந்த தேர்தலில் வேட்பாளர்களாக நிறுத்தியிருந்தது. அரசியலில் துறவிகள் தீவிர பங்குகொள்ளக்கூடாது எனும் எண்ணத்தினையுடைய கத்தோலிக்க திருச்சபையினருக்கும் பிறநாட்டு நலன் விரும்பிகளுக்கும் பெரும் விசனம் ஏற்பட இது காரணமாகியுள்ளது. ஜாதிக கெல உறுமய கடந்த தேர்தலில் 200க்கும் மேற்பட்ட துறவிகளை நாட்டின் 10 மாவட்டங்களில் தனது வேட்பாளர்களாக நிறுத்தியிருந்தது. சிங்களத் தேசியக் கட்சியான சிகள உறுமய எனும் கட்சியே அண்மையில் ஜாதிக கெல உறுமய எனப் பெயர் மாற்றம் கொண்டது. சிங்களவர்களில் 80 விழுக்காட்டிற்கு மேலானோர் பௌத்தர்களாகவும் நாட்டு மக்கள் தொகையில் அவர்கள் 74 விழுக்காடாகவும் உள்ளனர். இன்றுவரை ஒரே ஒரு பௌத்த துறவியே இலங்கை நாடாளுமன்றத்திற்கு 2001ல் தெரிவாகியிருந்தார். ஆனால் கடந்த தேர்தலில் 9 ஆசனங்களை இவர்கள் தம்வசமாக்கி உள்ளனர்.

## பெரியப்பா பதில்கள்

*பலர் இப்பகுதிக்கு உப்புச் சப்பற்ற கேள்விகளை அனுப்புகிறார்கள். அப்படி அனுப்பி விட்டு ஏன் எனது கேள்வியை பிரசுரிக்கவில்லை என முறையிட்டுக் கடிதங்கள் எழுதுகிறார்கள். உங்கள் கேள்விகள் தரமானதாக, அறிவுத்தேடல் நிரம்பியதாக, நகைச்சுவையாக இருப்பதை உறுதிசெய்து கொள்ளுங்கள். அப்படி இல்லாத கேள்விகளை பெரியப்பா நிராகரித்து விடுவார்.*

*(பதிப்பாசிரியர்)*

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி - இல.27

## திருப்பாடல் 101 - 118 அதிகாரங்கள்

உங்கள் விடைகளை 10. 8. 2004 க்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும். சரியான விடையை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பி வைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | | | 02 |
| | | 03 | * | | * | 04 | | | | |
| | | | 05 | 06 | | | | * | | |
| | * | | | | | | 07 | | 08 | |
| | 09 | | | 10 | 11 | | | | | |
| * | | | | | | | | 12 | | |
| | | | | | 13 | | 14 | | | |
| | | | | 15 | | | | | | 16 |
| 17 | | | | | | | * | 18 | | |
| | * | | 19 | | | | 20 | | | |
| 21 | | | | | 22 | 23 | | | | 24 |

### இடமிருந்து வலம்

1. வழியில் உள்ள ...................... அவர் பருகுவார், ஆகவே அவர் தலைநிமிர்ந்து நிற்பார்.
4. உன் ...................... கழுகின் இளமையெனப் புதிதாய்ப் பொலிவுறும்.
6. பூவுலகின் மன்னர் யாவரும் அவரது ........................யைக் கண்டு மருள்வர்.
11. காட்டுக் கழுதைகள் ......................த் தீர்த்துக் கொள்ளும்.
14. ஆண்டவரே நீர் உம் மக்கள் மீது இரக்கம் காட்டும் போது என்னை ...................... கூரும். (3வது எழுத்து 1வது எழுத்துக்கு முன்னே நிற்கிறது)
17. வறியோரின் வலப்பக்கம் அவர் நிற்கிறார், ......................த் தீர்ப்பிடுவோரிடமிருந்து அவர்களது உயிரைக் காக்க நிற்கின்றார்.
18. நானோ எளியவன், ........................வன், என் இதயம் என்னுள் புண்பட்டுள்ளது.
19. என் உடல் ...................... இழந்து மெலிந்து போகின்றது. (3வது எழுத்து 1வது எழுத்துக்கு முன்னே நிற்கிறது)
20. புயல் காற்றை அவர் பூந்தென்றலாக மாற்றினார், கடல் ................... ஓய்ந்து விட்டன. (குழம்பியுள்ளது)
21. பாலைநிலத்தில் அவர்கள் பெரு ........................ இடங்கொடுத்தார்கள்.

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 25ற்கான முடிவுகளை ஆகஸ்ட் மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.

### மேலிருந்து கீழ்

1. அவர்கள் தம் அலுவல்களில் .............................. செயல்படுவர்.
2. மலைகள் செம்மறிக்கிடாய்கள் போலும் ..................... ஆட்டுக்குட்டிகள் போலும் துள்ளிக்குதித்தன.
3. என்றென்றும் உள்ளது அவரது பேரன்பு என்று ஆண்டவருக்கு ...................... அனைவரும் சாற்றுவார்களாக.
5. அவை மரக்கிளைகளினின்று ........................ இசைக்கின்றன.
8. ஆயிரம் தலைமுறைக்கெனத் தாம் ................. வாக்குறுதியை நினைவு கூர்கின்றார்.
9. அவர் இஸ்ராயேலரை ........................யோடும் பொன்னோடும் புறப்படச் செய்தார்.
15. அங்கே அவர்கள் ........................ விதைத்தனர். (இறுதி எழுத்து விடப்பட்டுள்ளது)
16. அவர்கள் தங்கள் ........................ளால் தங்களைக் கறைப்படுத்திக் கொண்டனர்.

### வலமிருந்து இடம்

2. அவர் வானத்தையும் வையத்தையும் ...................... பார்க்கிறார்.
3. என் நெஞ்சே நீ மீண்டும் ......................... கொள், ஏனெனில் ஆண்டவர் உனக்கு நன்மை செய்தார்.
5. ................... சிங்கங்கள் இரைக்காகக் கர்ச்சிக்கின்றன. (2வது எழுத்து 3வதாக நிற்கிறது)
7. இஸ்ராயேலரே ஆண்டவர் மீது நம்பிக்கை கொள்ளுங்கள், அவரே உங்களுக்குத் ........................கேடயமும் ஆவார்.
8. மேற்கினின்று கிழக்கு எத்துணைத் தொலைவிலுள்ளதோ ......................த் தொலைவிற்கு நம் குற்றங்களை நம்மிடமிருந்து அவர் அகற்றுகிறார்.
12. உயர்ந்த ........................ வரையாடுகளுக்குத் தங்குமிடமாகும்.
13. அவர்கள் ............................ எவரும் தளர்ந்து போகவில்லை.
15. ஆண்டவரின் ...................... செயல்களை யாரால் இயம்ப இயலும்?
16. .......................... அவர் செய்த அச்சுறுத்தும் செயல்களையும் மறந்தனர். (இறுதி இரு எழுத்துக்கள் மாறியுள்ளன)
24. அவர்களோ திட்டமிட்டே அவருக்கு எதிராகக் ........................... செய்தனர்.

### கீழிருந்து மேல்

8. அவரது ............................... அனைத்தின் மீதும் பரவியுள்ளது.
10. ஆண்டவர் எனக்குச் செய்த எல்லா நலன்களுக்காகவும் நான் அவருக்கு என்ன ...................... செய்வேன்.
14. அவர் தம் கட்டளைகளைக் கடைப்பிடிப்போர் நல்லறிவுடையோர் அவரது பெயர் என்றென்றும் ................
15. ஆண்டவரது ............................. வலிமையாய்ச் செயலாற்றியுள்ளது.
16. இவ்வாறு தங்கள் ............................களினால் அவருக்குச் சின மூட்டினார்கள்.
21. எங்கள் மூதாதையர் எகிப்தில் நீர் செய்த ..............................செயல்களைப் பற்றிச் சிந்திக்கவில்லை. (3வது எழுத்து விடப்பட்டுள்ளது)
22. அக் ...........................டையே நெருப்பு கொழுந்து விட்டு எரிந்தது.
23. கடும் ......................... அவர் அவர்களின் உள்ளத்தைச் சிறுமைப்படுத்தினார்.

# விவிலியகுறுக்கெழுத்துப் போட்டி இல. 25ல்

**சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசு பெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்**

*முதலாம் பரிசு*
சி. செல்மர் எமில்,
12/1 விதானையார் வீதி,
ஈச்சமோட்டை, சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

*இரண்டாம் பரிசு.*
ஜேம்ஸ் றோஸ்மேரி,
மாணவியர் இல்லம்,
முருங்கன் பிட்டி, முருங்கன்.

*மூன்றாம் பரிசு*
டோ. மரிய கீதன்,
கள்ளிகட்டைக்காடு,
உயிலங்குளம்.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 101 பேர்
சரியான விடைகளை எழுதியோர் 95 பேர்

**விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 25ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில்**

## பாராட்டுப் பெறும் 50 அதிஸ்ரசாலிகள்

1. என். நித்யா துரம், கோவில் வீதி, தாழ்வுபாடு, மன்னார்.
2. எஸ். டிலக்சனா, தரம்.10, கறுக்காக்குளம்.
3. அ. அன்ரனி ஜெராட்சன், கறுக்காக்குளம், வட்டக்கண்டல்.
4. அன்ரன், எக்ஸ்பெற்றா.
5. அல்பேட் கெனடி மரியசீலி, ஓலைத்தொடுவாய், கரிசல்.
6. எஸ். தனுஸ், 159 மூர்வீதி, மன்னார்.
7. பி. யூஜிற்றா, இசைமாலைத்தாழ்வு, முருங்கன்.
8. பி. கரோலின் (மெடோனா), தோட்டவெளி, மன்னார்.
9. ரி. வோல்ட்டன், எழுத்தூர், மன்னார்.
10. பீ. டிலைக்ஷன், பெரிய குஞ்சிக்குளம், முருங்கன்.
11. றொ. சுமித்தா, பெரிய குஞ்சுக்குளம், மாதாகிராமம்.
12. எ.ரி.ஆர். பபி, ஓலைத்தொடுவாய், கரிசல், மன்னார்.
13. ஜெ.எஸ். லிற்வினியா, மாதாகோவில் வீதி, தலைமன்னார்.
14. சூ. நிசாந்தன், உப்புக்குளம், மன்னார்.
15. ஜெ.எஸ். சுகன்யா, மாதாகோவில் வீதி, தலைமன்னார்.
16. அ.வேதநாயகம், பி.செல்வி, கீளியன்குடியிருப்பு, தலைமன்னார்.
17. இ. அன்ரன் டெஸ்மன், இல. 107, பெரியபண்டிவிரிச்சான்.
18. எ. கிறிஷாந்தி, கறுக்காக்குளம், வட்டக்கண்டல்.
19. எஸ். கைத்தாம்பிள்ளை, 391. இறம்பைக்குளம், வவுனியா.
20. ம. தர்மினி, இளவாலை மேற்கு, இளவாலை.
21. ச. கவிதா, நறுவிலிக்குளம், வங்காலை.
22. றெ. யூடிற்றா, பெரியகுஞ்சுக்குளம், முருங்கன்.
23. எஸ். செல்வநாயகம், உயிர்த்தராசன் குளம், முருங்கன்.
24. செல்வி. அ. ஜெயமேரி, பிற்றத்மலை மே.பி. ஹப்புத்தளை.
25. ஜெ. தீபிகா குரூஸ், 8ம் வட்டாரம், பேசாலை.
26. ஜெ. ஜெயகாந்தன், பள்ளக்கமம், முருங்கன்.
27. மி. மலரம்மா பீரீஸ், 5ம் வட்டாரம், வங்காலை.
28. திருமதி. ஜீவரெட்ணம் யசிந்தா, 6ம் வட்டாரம், விடத்தல்தீவு.
29. யே. ஜெஸ்மின், தி.கு.கன்னியர் மடம், இறம்பைக்குளம், வவுனியா.
30. மி. சுதர்ஷன் மிக்கேல் பிலிப்பு, முருங்கன் பிட்டி, முருங்கன்.
31. அகுஸ்தீன் இசைக்கியேல், ஜோசப்வாஸ் நகர், தோட்டவெளி.
32. அ. செசிலியா மொறாய்ஸ், 5ம் வட்டாரம், வங்காலை.
33. க. றெஜி கூஞ்ஞ, 8ம் வட்டாரம், பேசாலை.
34. ஜெ. நிலுக்ஷன் குரூஸ், 8ம் வட்டாரம், பேசாலை.
35. பி. மரியதாஸ் ஜீவநகர், முருங்கன்.
36. அ. மெடோசன் பெரேரா, அன்ரனிஸ்வீதி, பேசாலை.
37. ம. டியுபா, சுண்டிக்குளி, முருங்கன்.
38. பி. வினோத், இல. 144, மடுக்கரை, நானாட்டான், மன்னார்.
39. எஸ். டயானா, பறப்பாங்கண்டல், பெரியகுளம்.
40. பெ. ஜெயசீலி, கீரிசுட்டான், பாலம்பிட்டி.
41. ராணி அரசரத்தினம், தபால்கந்தோர் வீதி, மன்னார்.
42. ஸ். ரதி, உமனரி, நானாட்டான், முருங்கன்.
43. க. லூசியா, தி.கு.கன்னியர் மடம், பெரியபண்டிவிரிச்சான், மடு.
44. வி. அனிஸ்ரா டபரேரா,திருசிலுவைக்கன்னியர் மடம், திருகோணமலை
45. செ. பெற்றிக்கிறேஸ், நாவற்காடு, புத்தளம்.
46. செ. அஜந்தன், கற்கிடந்தகுளம், முருங்கன்.
47. பி. பிரபாஜினி, செட்டிகுளம்.
48. எ. கஜனி No.92 பெற்றா, மன்னார்.
49. யே. ஷெறின் நிருஷா(துஷி), தி.கு.கன்னியர்மடம், மன்னார்.
50. எ.ஆ.எனஸ்ரா றெஜி, வைரவர் கோவில் எதிரே, மகாறம்பைக்குளம்.

# மறையாசிரியர் வதிவிடப்பயிற்சியின் உள்ளடக்கம் .... 8 ம் பக்கத் தொடர்ச்சி

இப்பயிற்சியானது இவர்கள் தமது வாழ்வின் தன்மைகளைக் கண்டுகொள்ளவும் மற்றவர்களுக்கு உதவி புரியவும் வழிவகுத்தது. இவர்கள் தமது ஆளுமையை வளர்த்துக்கொண்டு மற்றவர்களின் வளர்ச்சிக்கு எப்படி உதவி புரியலாம் என்பது குறித்தும் வழிகாட்டப்பட்டனர்.

சமூக ரீதியான உருவாக்கத்தில் குழுவாழ்வின் தன்மைகள் புரியவைக்கப்பட்டு குழு வாழ்வு வாழ சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டன. இவர்கள் தமது ஆற்றல்கள் திறமைகளை வளர்த்துக்கொள்ளவும் பல்வேறு வழிவகைகள் செய்துகொடுக்கப்பட்டன. இதன் ஒரு முயற்சியாக திருகோணமலை, சிகிரியா, தம்புள்ள, மிகிந்தலை போன்ற இடங்களுக்கான 2 நாள் சுற்றுலா அமைந்திருந்தது.

## ஆணைக்குழுக்கள் வழங்கிய பயிற்சிகள்

மன்னார் மறைமாவட்டத்தில் உள்ள ஆணைக்குழுக்கள் தமது பணியோடு தொடர்புடைய பல விடயங்களை இந்த மறையாசிரியர்களுக்கு தெளிவுபடுத்தினர். வாழ்வுதயம், அன்பியத் தொடர்பகம், மறைக்கல்வி நிலையம், குடும்பப்பணி நிலையம், போன்றவை தமது பணிகள் பற்றிய விளக்கத்தையும் தமது பயிற்சிகளையும் வழங்கினர். இதன்மூலம் இவர்கள் மறைமாவட்டத்தின் பணித்திட்டங்களை புரிந்துகொண்டு பங்குகளில் நடைமுறைப்படுத்தப்படும் இப்பணிகளுக்கு தமது பங்களிப்பை வழங்க ஏதுவாக அமைந்திருந்தது.

## நன்றி நவில்கின்றோம்

இந்நான்கு மாதப் பயிற்சியில் இறைபராமரிப்பை தெளிவாகக் கண்டுகொண்டோம். நாம் எதிர்பார்த்ததைவிட எந்தவித இடையூறுகளும் பிரச்சினைகளும் இல்லாமல் இப்பயிற்சிநெறி இனிதே நிறைவுற இறைவன் எம்மோடு இருந்து வழி நடத்தி வந்துள்ளார்.

இந்நான்கு மாதப் பயிற்சி என்பது ஒரு கூட்டு முயற்சி. இதில் என்னோடு இணைந்து பலர் தமது முழுமையான பங்களிப்பை வழங்கியுள்ளார்கள். அவர்களில் அருட்பணியாளர் யூட் குருஸ் அவர்களை அன்போடு நினைவு கூருகின்றோம்.

இப்பயிற்சியின் அனைத்து முயற்சிகளிலும் அவர் தனது பங்களிப்பை வழங்கி எமக்கு உற்சாகமாக - உறுதுணையாக இருந்துள்ளார். திருக்குடும்ப சபையைச் சேர்ந்த அருட்சகோதாரி பெனிக்னஸ் முழு நேரமும் இங்கே தங்கியிருந்து இம்மறையாசிரியர் உருவாக்கத்தில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தினார். இப்பயிற்சியில் அவருடைய மேலான பங்களிப்பு விதந்துரைக்கப்பட வேண்டியது. அவருக்கு இவ்வேளையில் சிறப்பாக நன்றி கூறுகின்றோம்.

அடுத்து எமது அன்புக்குரிய குருக்களில் ஏறக்குறைய அனைவருமே இப்பயிற்சி நெறிக்கு தமது உழைப்பையும் ஊக்குவிப்பையும் நிறைவாகத் தந்துள்ளார்கள். பாடங்களை கற்பிக்கும்படி நாம் கேட்டபோது பலர் அதிக அக்கறையோடு பாடங்களை ஆயத்தம் செய்து பல கிலோ மீற்றர் தூரம் பிரயாணம் செய்து வந்து மிகுந்த பொறுப்போடு தமது கடமைகளை நிறைவேற்றி உள்ளார்கள்.

அத்தோடு எமது நிலையத்தின் நிரந்தரப் பணியாளர்கள் திருவாளர்கள் சவிரி, செபஸ்ரியாம்பிள்ளை, மரிய செல்வம் அவர்களும் இப்பயிற்சிக்காலத்தில் காத்திரமான பங்களிப்பை வழங்கி உள்ளார்கள். நிலையப்பணியாளர் கென்றி அவர்களும் அலுவலகப்பணிகளை சிறப்பாக நிறைவேற்றி இப்பயிற்சி சிறப்புற அமைய கைகொடுத்து உதவியுள்ளார். நிலையப் பணியாளர்கள், மன்னா அலுவலகப் பணியாளர்கள் அனைவருக்கும் நன்றி கூறுகின்றோம்.

## இறுதியாக

இப்பயிற்சி நெறியை நிறைவுசெய்து வெளியேறிச் செல்லும் எமது அன்புக்குரிய மறையாசிரியர்களே நாம் உங்களை வாழ்த்தி வழி அனுப்பி வைக்கின்றோம். இப்பயிற்சியின்போது நீங்கள் சிறப்பாக எம்மோடு ஒத்துழைத்தீர்கள்.

பங்குத் தந்தையர்களே, பெற்றோரே, பங்குகளில் இருந்து மறையாசிரிரியர் பிரதிநிதிகளாக வந்திருக்கும் பங்கு மறையாசிரியர் பிரதிநிதிகளே, இந்த நான்கு மாதமும் நாம் பல்வேறு வழிகளில் உருவாக்கிய உங்கள் பிள்ளைகள் மீண்டும் உங்கள் வீட்டுக்கு, உங்கள் பங்கிற்கு வருகிறார்கள். இவர்களின் பணி வாழ்வில் இவர்களுக்கு உற்சாகமாக உறுதுணையாக இருக்கும்படி உங்களைக் கேட்டுக்கொள்கிறோம். (நன்றி மறைக்கல்வி இயக்குனர்)

## காலநதி பத்திரிகை........1ம் பக்கத் தொடர்ச்சி

முதல் இதழின் ஆசிரிய தலையங்கம் இப்பத்திரிகையின் எதிர்கால உள்ளடக்கம் பற்றிப் பேசுகிறது. "காலநதியின் பிரசவம் அரசியலைப் பேசும்... மன்னாரின் பொருளாதார அபிவிருத்தி பற்றி ஆதங்கப்படும்.... மன்னாரின் விளையாட்டுத் துறை வளர்ச்சியை மெச்சி பெருமைப்படும்... புதிதாக எதைக் கண்டாலும் உங்களோடு பரிமாற முந்திப்பாயும்...."

பொதுவாக பெரிய ஆரவாரத்தோடு ஆரம்பிக்கப்படும் பல பத்திரிகைகள் சஞ்சிகைகள் தொடர்ந்து வெளிவர முடியாமல் இடைநடுவில் படுத்துவிடும் துர்ப்பாக்கிய நிலையே இன்றைய யதார்த்தம். இதை முன்கூட்டியே அனுமானித்த ஆசிரியர் காலநதிக்கான வாசகர் ஆதரவை வேண்டி நிற்கிறார். "*காலநதியின் ஊற்றுக்கண் திறக்கின்றபோதே அதை மூடிவிட நினைக்கின்ற அவலம் நேர்ந்து விடாதபடி உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம். எழுதுங்கள்.. எழுதியதை படியுங்கள் உங்கள் வாசலில் காலநதியின் ஓட்டத்திற்கு ஓடை ஒன்று அமைத்துத் தாருங்கள்.*" வற்றாத நீரூற்றாய் காலநதி தொடர்ந்து பாய மன்னா மனமார வாழ்த்துகிறது.

## வத்திக்கானின் நிலைப்பாடு.. 14ம் பக். தொடர்.

அது ஆயுதங்களை அதுவும் பயங்கர ஆயுதங்களை ஈராக் பயன்படுத்தாது இருக்கவென முன்கூட்டியே மேற்கொள்ளப்பட்ட போராகும். "அப்படித் தடுப்புப் போர்களை நியாயப்படுத்துவது மிகவும் அரிதாகவே உள்ளது. முன்கூட்டியே மேற்கொள்ளபபடும் போர் பெரிதும் ஆழமான காரணங்களுக்காக மேற்கொள்ளப்படும் ஒன்று" என்றார். அவரைப் பொறுத்த வரையில் அரசியல் ரீதியிலோ ஒழுக்க ரீதியிலோ இவ்விரண்டு போர் முறைகளும் சந்தேகத்துக்கிடமானவையே. கத்தோலிக்கரைப் பொறுத்த மட்டில் சமாதான முயற்சிகள் எல்லாம் தோல்வி கண்ட நிலையிலேயே கத்தோலிக்க நியாயமான போர்க்கோட்பாடு போரை அனுமதிக்கும்.

திருச்சபைக்கு எதிராகத் தலைவர்கள் முடிவுகளை மேற்கொள்ளும்போது, கத்தோலிக்கர்கள் தம் அரசுகளிடம் தங்கள் கொள்கைகளை வலியுறுத்த வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

## சரியான விடைகள்

### விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 23

*திருப்பாடல் (அதி. 1 – 25)*

**இடமிருந்து வலம்**
1. கடைமுனையின்னின்று 61:2
5. பேரன்பை 59:10
6. மனிதரின் 64:6
7. ஆவி 51:16
8. அறிவை 53:4
9. சிறிதும் 62:6
10. அறுசுவை 63:5
11. தீர்ப்பில் 51:4
17. ஆறு 74:8
19. கூடும் 74:8
20. நன்மை 52:3

**வலமிருந்து இடம்**
3. போற்றுவேன் 63:4
4. கோவிலின் 65:4
7. ஆற்றலை 63:2
9. சிறகுக 55:6
10. அருளும் 67:2
16. இறக்கைகளி 63:7
17. ஆர்வம் 69:9

**மேலிருந்து கீழ்**
1. கற்பாறையும் 62:6
2. முன்னிலை 73:23
3. போற்றுங்கள் 68:4
6. மகிழ்வர் 64:10
7. ஆசி 62:4
10. அக்களிப்பை 65:12
11. தீவுகளில் 655
12. பகைவர் 74:10
15. கையில் 75:8
16. இளமை 72:5

**கீழிலிருந்து மேல்**
8. அரண் 59:9
10. அறிவிப்பேன் 71:17
13. வேற்று 69:8
14. விரைவர் 68:31
16. இதழ்கள் 63:3
17. ஆற்றல் 68:11
18. தூறலை 72:6
19. கூர்வோர் 69:36
20. நடக்கும் 74:20

மன்னா

## ஈராக்கில் பயங்கர ஆயுதங்கள் ஏதும் காணப்படாத நிலையில்

# வத்திக்கானின் நிலைப்பாடும்

# அமெரிக்க ஆயர்கள் நிலைப்பாடும் சரியானதே

### அமெரிக்க ஆயர் குழுவின் பேராளர் கருத்து

பன்னாடுகள் தொடர்பாக ஆலோசனை வழங்கும் அமெரிக்க ஆயர் குழுவின் பேராளர் மேரியான் கீயூசிமானோ லவ் அவர்கள் "ஈராக்கில் பயங்கர ஆயுதங்கள் ஏதும் காணப்படாத நிலையில் வத்திக்கானின் நிலைப்பாடும் அமெரிக்க ஆயர்கள் எடுத்த நிலைப்பாடும் சரியே" எனக் குறிப்பிட்டார். அமெரிக்க ஆயர் பேரவையும் வத்திக்கானும் ஈராக்கை கட்டுப்படுத்த போர் தேவையில்லை என வலியுறுத்தியிருந்தன. மேரியான் கியூசிமானோ லவ், கத்தோலிக்க வோசிங்ரன் பல்கலைக்கழகத்தில் அரசியற் பேராசிரியராக பணியாற்றுகின்றார். பெப்ரவரி 23ல் இடம்பெற்ற கத்தோலிக்க சமூக ஒன்றுகூடலில் பேசும்போது "இப்பொழுது கத்தோலிக்கருக்கு, பயங்கரவாதத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் இந்த யுத்தம் அமெரிக்காவின் அதிமுக்கியமான உள்ளூர் - பன்னாட்டு - பொறுப்புக்களைத் தட்டிக்கழிக்கும் சாட்டாகப் பயன்படுத்தாது இருக்க அமெரிக்காவை வற்புறுத்தும் பொறுப்பு உள்ளது" என்றார் அவர்.

ஈராக் மீதான போரைத் தொடர்ந்த அமெரிக்க நாட்டின் வெளிநாட்டுக் கொள்கையின் தார்மீகம் தொடர்பான கருத்து மேடையில் உரையாற்றிய இப்பேராளர் "அமெரிக்க தலைமையில் ஈராக்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல், போர் நடைபெறுவதன்முன் மேற்கொள்ளப்பட்ட போர் அல்ல, மாறாக போர் வராமல் தடுக்க மேற்கொள்ளப்பட்ட போர் ஆகும்" என்றார்.

(தொடர்ச்சி 13ம் பக்கம்)

## சுவிஸில் மறைக்கல்வி விழா

சுவிஸ் தமிழ் கத்தோலிக்க ஆன்மீக பணியகத்தின் அனைத்து மாநிலங்களும் இணைந்து 24. 04. 2004 அன்று சனிக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு புனித மாட்டீன் ஆலய மண்டபத்தில் மறைக்கல்வி விழா ஒன்றை நடாத்தினார்கள். சுவிஸ் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மீகப் பொறுப்பாளர் அருட்பணியாளர் பெப்பி சோசை அவர்களின் தலைமையில் இவ்விழா இடம்பெற்றது. இயேசுவின் போதனைகளில் இருந்து நாட்டியங்கள், இன்னிசைக் கீதங்கள், நாடகங்கள், உரைகள் என பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. மண்டபம் நிறைந்த மக்களுடன் இவ்விழா இனிதே நடந்தேறியது.

*தகவல்: சுவிஸ் மறைக்கல்விப் பொறுப்பாளர் திரு. பி. அன்ரன்பொன்ராஜா*

## சீனாவில் கைது

சீனாவில் தியானம் செய்துகொண்டிருந்த கத்தோலிக்க குருவானவர்கள் மற்றும் குருமட மாணவர்களான 12 பேரை சீன அரசு கைது செய்துள்ளது. இப்பிரதேசத்தில் ஒரு கத்தோலிக்க கோவில் கட்டி முடிக்கப்பட்ட இரண்டே வாரத்தில் அழிக்கப்பட்டது. இச்சம்பவம் கடந்த ஜூன் 21ஆம் நாள் நடந்தது. சீன அரசு திருத்தந்தையின் அன்புச் செய்திகளுக்குச் செவிகொடுப்பதில்லை,

## நான் உளவியல் சஞ்சிகை

- ☐ உளவியல் அறிவைப் பெற்றிட
- ☐ உளவளத் துணையைப் பெற்றிட
- ☐ உள மருத்துவம் அறிந்திட
- ☐ உள அமைதி அடைந்திட
- ☐ உங்களை நீங்கள் அறிந்திட
- ☐ உள வேதனைகளைத் தீர்க்க
- ☐ உங்கள் மூடநம்பிக்கையைத் தீர்க்க

நான் உளவியல் சஞ்சிகையை வாசிக்கத் தவறாதீர்கள்.

'நீ' நீயாகிட 'நான்' நானாகிட, உன்னை உனக்குள் நீ தேட, 29 வருடமாக வெற்றி நடைபோடும் 'நான்' உளவியல் சஞ்சிகையை நீங்கள் தேடுங்கள்.

உடைந்த உள்ளங்களுக்கு ஓர் உதயம்
சரிந்த மனங்களுக்கு ஓர் சஞ்சிகை
இடிந்த உறவுகளுக்கு ஓர் இமயம்
மடிந்த உணர்வுகளுக்கு ஓர் மருத்துவன்
அவன் வேறு யாருமல்ல உங்கள் நண்பன் 'நான்'

தனிப்பிரதி 20 மட்டும். ஆண்டுச் சந்தா 150 மட்டும்

*தொலைபேசி இல. 021-222 5359*




**எங்கள் முகவரி**
டி மசனட் குருமடம்
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம், இலங்கை.

## வாழ்வுதயத்தின் சமயலறைத் திட்டம்

மன்னார் வாழ்வுதய நிறுவனம் வறிய மக்களின் தேவையை கருத்தில் கொண்டு பல தேவைகளை பூர்த்தி செய்வதோடு சமையல் அறைகளையும் இலவசமாகக் கட்டிக் கொடுத்துக் கொண்டு வருகின்றது. தற்பொழுது மன்னார் சாந்திபுரம் 100 வீட்டுத்திட்டத்தில் இத்திட்டம் செயற்படுத்தப் படுகின்றது. முதல் கட்டமாக 20.05.2004 ஐந்து குடும்பங்களுக்கு இவ்வுதவி வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இச்சமையல் அறைகள் கட்டிக்கொடுக்கப்படுவதோடு சிக்கனமான முறையில் உணவு தயாரிப்பு என்னும் தலைப்பில் ஒருநாள் செய்முறைப் பயிற்சியும் கருத்தமர்வும் அப்பிரதேசப் பெண்களுக்கு நடாத்தப்பட இருக்கின்றது. இத்திட்டத்திற்கான நிதி உதவியை கொழும்பு பவுண்டேசன் நிறுவனம் வழங்குவதும் குறிப்பிடத்தக்கது.

## நித்திய அர்ப்பணம்

திருக்குடும்ப கன்னியர் சபையை சார்ந்த சகோதரிகள் றெஜினா அந்தோனிப்பிள்ளை. (நானாட்டான் - உமநகரி) ஜாக்குலின் ஆசீர்வாதம், நிமல ரஞ்ஜினி பாலசிங்கம் (மண்டைதீவு) ஆகியோர் தமது நித்திய அர்ப்பணத்தினை கடந்த மே மாதம் முதலாம் திகதி திருக்குடும்ப கன்னியர் சபை சிற்றாலயத்தில் மேற்கொண்டனர். யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை இத்திருவழிபாட்டை சம்பிரதாய பூர்வமாக நிகழ்த்திவைத்தார்.

அருட்சகோதரி றெஜினா அவர்களின் நன்றித்திருப்பலி உமநகரி ஆலயத்தில் மே மாதம் 2ந் திகதி இடம்பெற்றது.

## கொழும்பில் நடைபெற்ற திருவுளப்பணிச் சபையின்

# 45வது ஆண்டு நிறைவு விழா



கடந்த 04. 06. 2004 அன்று கொழும்பில் நடைபெற்ற திருவுளப்பணியாளர் சபையின் 45வது ஆண்டு நிறைவு விழாவில் மன்னார் ஆயருடன் அருட்தந்தையர்கள் அமர்ந்திருப்பதையும் கலைநிகழ்வின்போது செல்வி ஜெயதாஸ் செலின் றோமி (மன்னார்) அவர்கள் நடனமாடுவதையும் காணலாம்.

## யாழ் மறைமாவட்டத்தில் இவ்வாண்டு

# வெள்ளி விழாக் காணும் அருட்பணியாளர்கள்

இவ்வாண்டு யாழ் மறைமாவட்டத்தில் அருட்பணியாளர்கள் சந்திரகாந்தன், லூயிஸ் மொன்பேட், காலம் சென்ற அருமை நாயகம் ஆகியோர் தமது குருத்துவ வாழ்வில் 25 வருடங்களை பூர்த்தி செய்து வெள்ளி விழாக் காண்கிறார்கள்.

ஏப்ரல் மாதம் 17ம் திகதி குருத்துவ வெள்ளி விழாவினை நிறைவு செய்யும் ஏ.ஜே.வி சந்திரகாந்தன் அடிகளாரையும் யூலை மாதம் 19ம்திகதி குருத்துவ வெள்ளிவிழாவினை நிறைவு செய்யும் எம். எம். லூயிஸ் மொன்பேட் அடிகளாரையும் மன்னா அன்பு நெஞ்சங்கள் சார்பாக வாழ்த்துகின்றோம். தம் பணியின் 25ஆண்டுகளை நிறைவு செய்யும் இவர்கள் பணி மேலும் சிறக்க இறைவனின் அருளை வேண்டுகின்றோம். இவ்வாண்டு வெள்ளி விழா நாயகர்களுக்கு மன்னா தனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றது. யூலை மாதம் 20ம் திகதி இ. ஜே. அருமைநாயகம் அடிகளாரின் குருத்துவ வெள்ளிவிழா நிறைவு தினத்தில் அவரின் ஆன்மா இறைவனின் இன்ப சந்நிதானத்தில் அமைதியில் இளைப்பாற வேண்டுவோம்.

## சமூக நம்பிக்கை நிதியத்தின்

### சமாதானமும் மக்கள் ஒருங்கிணைப்புச் செயல் திட்டமும்

சமூக நம்பிக்கை நிதியமானது (CTF) சமாதானமும் மக்கள் ஒருங்கிணைப்பும் எனும் செயல்திட்டத்தினை மன்னார் மாவட்டத்தில் மன்னார், நானாட்டான், முசலி செயலாளர் பிரிவின்கீழ் Cordaid நிறுவனத்தின் அனுசரணையுடன் செயல்படுத்தி வருகின்றது. பல்வேறு செயல்திட்டங்கள் மூலம் மக்களை ஒருங்கிணைத்து சமாதானமான முறையில் இந்நிறுவனம் தனது செயல் திட்டத்தினை நடாத்தி வருகின்றது. மேலும் பல செயல் திட்டங்களை பல இடங்களில் சர்வமத இனங்களிடையே நடாத்த இவ்வமைப்பு திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மூன்று பிரதேச செயலக பிரிவுகளை உள்ளடக்கிய சர்வமத கலை நிகழ்ச்சி, (தொடர்ச்சி 10ம் பக்கம்)



மன்னார் சமூக நம்பிக்கை நிதியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற மகளிர் கருத்தமர்வில் வங்காலை பாடசாலை அதிபர் திருமதி மாலினி உரையாற்றுவதையும் கருத்தமர்வில் கலந்துகொண்ட ஒருசிலரையும் காண்கிறீர்கள்.

## யாழ் மறைமாவட்டத்தில் புதிய குருக்களின் நியமனங்கள்

அருள்திரு அ.பீ. திருமகன் - உதவிப் பங்குத்தந்தை நாவாந்துறை
அருள்திரு இ. பெற்றூஸ் தயாபரன் - உதவிப் பங்குத்தந்தை ஓ.எல்.ஆர்
அருள்திரு தெ. செல்வரெட்ணம் - உதவிப் பங்குத்தந்தை யாழ் பேராலயம்
அருள்திரு யெ. அருள்தாஸ் - உதவிப் பங்குத்தந்தை மானிப்பாய்
அருள்திரு தி. ஜிம்பிறவுண் - மன்னார் மறைமாவட்டம்

(நன்றி - பாதுகாவலன்)

## ஊடக இயல் கலைச் சொல் அகராதி

### அருட் பணியாளர் றூபன் அடிகளாரின் புதிய நூல்

யாழ் மறைமாவட்ட கத்தோலிக்க பத்திரிகையான பாதுகாவலன் பத்திரிகையின் ஆசிரியர் அருட்பணியாளர் றூபன் மரியாம்பிள்ளை அவர்கள் *ஊடக இயல் கலைச் சொல் அகராதி* என்ற புதிய நூலை வெளிக்கொணர்ந்துள்ளார். ஊடகத் துறையைச் சார்ந்தவர்கள், புதிதாக ஊடகத்துறையைக் கற்பவர்கள் போன்றோர் நல்ல தமிழ்ச் சொற்களைப் பாவிக்கவும், தகுந்த கலைச் சொற்களைப் பயன்படுத்தவும் இந்நூல் துணை புரியும். ஊடக இயல் கலைச் சொல் அகராதியை தயாரிப்பதென்பது இலகுவான பணியன்று. இந்த அறிவியல் துறை மிகவேகமாக வளர்ச்சிகண்டு வருகிறது. ஆங்கில சொற்களுக்கு நிகரான தமிழ்ப் பதங்களை கண்டறிதல் மிகவும் கடினமான பணி. இப்பணியை செய்துமுடித்த அடிகளாரை மன்னா சார்பாக வாழ்த்திப் பாராட்டுகிறோம்.




இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு கொழும்பு கொட்டாஞ்சேனை அச்சகத்தில் அச்சிடப்பட்டு பதிப்பாசிரியரால் வெளியிடப்பட்டது.